Registered as a News Paper
பக்கம் - 24
www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 16 | வெள்ளி - 31 | 23 - 29 - செப்ரெம்பர் - 2005



## மகிந்தவின் எதிரி யார்?

## திலீபன் மூட்டிய விடுதலை நெருப்பு...

## பகைவெல்லத்துணிந்தோம்..

1906 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 700 பேரைக் கொன்று நகரத்தையே நாசப்படுத்திய புவியதிர்ச்சியையே கலிபோர்னியாவில் பாரிய ஒன்றாகக் கருதப்பட்டது.

உலகில் ஏனைய பாகங்களில் ஏற்பட்டுள்ள புவியதிர்ச்சி சுனாமி பாதிப்புகளோடு ஒப்பிடும் போது இது மிகச் சிறியதாகவே எமக்குத் தோன்றும்.

ஆனால் கலிபோர்னியாவில் புவியதிர்ச்சி சம்பந்தமாக அதிக கவனம் செலுத்தி ஆய்வு செய்து வருவதற்கு அந்த நாட்டின் தரைத்தோற்ற அமைப்பில் காணப்படும் ஒரு விஷேட அம்சம் காரணமாயிருக்கின்றது.

பூமியதிர்ச்சி பல அளவுகளில் உண்டாகின்றது. மிகச்சிறியவற்றை உபகரணங்களினால் தான் கண்டுபிடிக்க முடியும். **Seismograph** எனும் கருவியை உபயோகித்து தினசரி சராசரியாகப் பத்து சிறிய பூமியதிர்வுகளை மத்திய கலிபோர்னியாவில் பூகற்ப பௌதீக விஞ்ஞானிகள் கண்டுபிடிக்கிறார்கள். அதிகளவான பாதிப்புகளை ஏற்படுத்தும் பாரிய பூகம்பங்களை ஒரு நூற்றாண்டில் மூன்று அல்லது நான்கு தான் உண்டாகின்றன. கலிபோர்னியா நகரங்கள் வளர்ச்சிகண்டு வருவதால் பூகம்பங்கள் ஏற்பட்டால் முன்னிலும் அதிகளவு பாதிப்புகள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டென அனுமானித்திருக்கிறார்கள். 1971 இல் **San Francisco** வில் உண்டான பூமியதிர்ச்சி வெளியிட்ட சக்தியின் அடிப்படையில் பெரிய பூகம்பமாகக் கருதப் படாவிட்டாலும் 58 பேரை காவு கொண்ட அது பல பில்லியன் டொலர்கள் சேதத்தை ஏற்படுத்தியது.

சிறிய பூகம்பங்கள் அடிக்கடி தோன்றி சிறிய அளவிலான சேதங்களை உண்டு பண்ணி வருகின்றது. எமது நாடான இலங்கையிலும் சில நாட்களாக சிறு சிறு புவியதிர்வுகள் ஏற்பட்ட வண்ணமுள்ளன. இதனால் பாதிப்பு அதிகளவில் இல்லை.

கலிபோர்னியாவில் அமைந்துள்ள விசேஷ தரைத்தோற்ற அமைப்பான **San Andreas Fault** அங்கு அதிர்வுகள் ஏற்படக் காரணமாகும் **Fault** என்பது தரையில் காணப்படும் ஒருவித வெடிப்புப் பிளவு ஆகும்.

சாதாரணமாக நமது சுவரில் காணப்படும் வெடிப்புப் போன்றதே இது. இவ்வெடிப்பு பூமியின் கீழ் 20-30 மைல்கள் ஆழம்வரை செல்கின்றது. லொஸ் ஏஞ்ஜல்ஸ் மற்றும் சென் பிரான்ஸிஸ்கோ நகர்களுக்கருகில் இதற்கு சமாந்தரமான கிளைகளும் காணப்படுகின்றன.

பாரிய புவியதிர்ச்சி ஒன்று ஏற்படுமானால், கலிபோர்னியாவின் பிரதான நகரங்கள் அனைத்தும் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்பு இதனால் உண்டாகியிருப்பதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இந்த வெடிப்பு எவ்வாறு புவியதிர்ச்சியைத் தோற்றுவிக்கின்றது என்பதை அந்நாட்டு நிபுணர்கள் விளக்கியுள்ளார்கள்.

பூமியின் உட்பகுதியில் அமைந்துள்ள குழம்பு வடிவான பாறைகளுக்கு மேலே படகுகளைப் போன்று தனித்தனியான தட்டுகள் மிதந்துகொண்டிருக்கும். உலகின் கண்டங்களைத் தாங்கிக்கொண்டிருப்பவை இத்தகைய தட்டுக்களே என்றால் எமக்கு வியப்பேற்படலாம்.






# புவியதிர்ச்சி குறித்த புதிய கருத்துக்கள்

தட்டுக்களுக்கு கீழேயுள்ள சூடான பாறைக் குழம்பு இத்தட்டுகளினூடாக மேலே வந்து குளிர்கின்றது. இத்தட்டுக்களை ஒன்றிலிருந்து ஒன்று விலக வைக்கின்றது. இந்த செயற்பாட்டின் மூலமாக பசுபிக் சமுத்திர தட்டு கலிபோர்னியாவை நோக்கி நகர்கிறது. இதனால் மேற்குறிப்பிட்ட கடற்கரையோரப் பகுதி வேறெங்கும் நகர்வதற்கு இடமில்லாமல் உள் நாட்டு தரைப்பகுதியை நோக்கி நகர்கிறது. அத்தோடு கரையோரப் பகுதியையும் இணைத்தவாறு வடக்குப் பகுதியை நோக்கி நகர்கின்றது.

இரு தரைப்பகுதிகளும் எ[illegible] ஒன்றையொன்று [illegible]க்கிச் செல்ல முடியும[illegible] பூகம்பம் ஏற்படு[illegible]கு சாத்தியமில்லை. ஆனால் வெடிப்பின் ஆழத்தில் காணப்படும் கற்பாறைகளும் மண் குவியல்களும் ஒன்றோடொன்று இறுகிப் பிணைத்துக்கொண்டிருக்கின்றன. இருபகுதிகளும் ஒன்றையொன்று எப்போதும் இழுத்துக்கொண்டிருக்கின்றன. இதனால் பாறைகள் வளைந்து ஒரு சுருள் விசை போலாகியிருக்கின்றது. இந்த அமைப்புக்குள் பூதாகரமான சக்தி அடைபட்டுக்கிடக்கின்றது. இப்படி இறுகியிருக்கும் இரு தரைத்தோற்ற அமைப்புகளும் ஒன்றிலிருந்து ஒன்று விடுபடும்போது பழைய நிலையை அடைகின்றன. இந்த நேரத்தில்தான் அதிர்ச்சி ஏற்படுகின்றது. கலிபோர்னியா நிபுணர்கள் தரும் இந்த விளக்கம் புவியதிர்ச்சி ஏற்படுவது பற்றி ஏற்கனவே சில நிபுணர்கள் தந்துள்ள விளக்கங்களிலிருந்து சற்றே வித்தியாசமாக இருக்கிறது.

புயல் வருவதை எப்படி முன் கூட்டியே கூறிவிடமுடியுமோ அப்படியே பூகம்பம் ஏற்படுவதையும் அளவெடுத்தல் உபகரணங்கள் அவதானிப்பு ஆகியவற்றின் மூலம் முன் கூட்டியே கூறிவிடமுடியும். புவியதிர்ச்சியை தடுத்து நிறுத்துவது குறித்து கலிபோர்னியா நிபுணர்கள் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

தரைப்பகுதிகளின் அசைவுகளை நிறுத்துவதினால் அது சாத்தியமாகாது. தரைப்பகுதியின் சக்தி மகத்தானது. ஆனால் பொதுவாகக் கருதப்படுவது- போல ஒரு வெடிப்பு வரிசையின் அதிர்வு திடீரெனத்தான் ஆரம்பமாகும் என்பதும் ஒரு மாற்றப்பட முடியாத விதியல்ல.

அது ஒரு தொடர்ச்சியான வழுக்கலான அசைவாயிருக்கும் பட்சத்தில் அத்தரைப்பகுதியை ஈரமாக்குதல் அல்லது வழுவழுப்பாக்குதல் மூலம் இதைச் சாதிக்க முடியும்.

கட்டடங்களையும், ஏனைய கட்டுமானங்களும் மனிதர்களின் மீது விழச் செய்வதாலேயே பாரிய பாதிப்பு ஏற்படுகிறது. எந்த விதமான புவியதிர்ச்சிக்கும் தாக்குப் பிடிக்கக்கூடிய அல்லது அதிகளவு பாதிப்பை தவிர்த்து ஆனால் இடிந்து விழாமல் இருக்கக் கூடிய கட்டடங்களை உருவமைப்பது குறித்து கட்டட பொறியியலாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளார்கள்.

ஒரு புவியதிர்ச்சியின் மோசமான அழிவை ஏற்படுத்தும் செயற்பாடு 6முதல் 30 விநாடிகளில் ஏற்படுவதே மிக விரைவான அதிர்வுகளாகும். இவ் அதிர்வுகள் கட்டடபாகங்களை வேறாக பெயர்த்தெடுத்து விடுகின்றன. கொங்கிரீட் பாகங்களாயின் மேலும் மோசமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

தாழ் நிலங்களில் நீர் மட்டத்திற்கு அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்புகள் பற்றி பூகற்பவியலாளர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள். புவியதிர்ச்சி அத்தகைய நிலப்பகுதிகளை ஈரமாக்கி குடியிருப்புகள் புதையுண்டு போகக்கூடிய சேற்று நிலமாக மாற்றிவிடும். நியூசிலாந்தின் நிலப்பகுதிகளை வலயங்களாகப் பிரித்து எவ்வெப்பகுதிகளில் எவ்வெவ் வகையான கட்டடங்களை அமைக்கலாமென வரையறை செய்துள்ளார்கள். இந்த வழிமுறையை நாங்களும் பின்பற்றலாம்.

கலிபோர்னியாவில் இன்னமும் மிகப்பழைய கட்டடங்கள் சில இருப்பதாகவும் 1971 இல் **San Francisco** வில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி யில் உயிரிழந்த 58 பேரில் 40 பேர் 1920இல் கட்டப்பட்ட மருத்துவ மனைக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததனால் மாத்திரம் உயிரிழந்தார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியாவின் புவியதிர்ச்சி நிலைமைகள் குறித்து **Wolfgang langwiesche** என்பவர் குறிப்பிடுவதாவது அபிவிருத்திகள் காலத்தால் பரிசீலிக்கப்பட வேண்டும். போதியளவு புவியதிர்ச்சி ஏற்படாததால்

**இ.ரஜித்**

இது பற்றிக் கற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

புதிய கட்டட உருவமைப்புகளும், வேலைத்திட்டங்களும் பாரிய புவியதிர்ச்சிகளினால் பரிசோதனை செய்யப்பட வேண்டும். இதற்கு பல வருடங்கள் ஆகலாம். எனினும் பழைய கட்டடங்களைவிட புதிய கட்டடங்கள் மேம்பட்டவை என்பதில் ஐயமில்லை.

# மகிந்த ராஜபக்ஷவின் மெய்யான எதிரி யார்?

**நிலாந்தன்**

வெளித்தோற்றத்துக்கு திருமதி. சந்திரிகாவே திரு.மகிந்தராஜபக்ஷவின் எதிரிபோலத்தோன்றக்கூடும். ஊடகங்கள் வாயிலாகக் கிடைக்கும் சித்திரம் அப்படித்தான் இருக்கிறது. ஆனால், உண்மைநிலை அது வல்ல. சந்திரிகாவுக்கும் மகிந்தவுக்கும் இடை யிலான பிரச்சினை எனப்படுவது ஒரு வகை வம்சப்போட்டி அல்லது தலைமைத்துவப் போட்டி எனலாம். மற்றும்படி அதில் எந்த வித மான கோட்பாட்டு முரண்பாடுகளும் கிடையாது.

கோட்பாட்டு ரீதியில் இருவருமே ஒரே இனம்தான். இன்று மகிந்த கூட்டுச் சேர்ந்துள்ள அதே ஜே.வி.பியுடன்தான் சில காலங்களுக்கு முன்பு சந்திரிகா கூட்டுச் சேர்ந் தார். அப்பொழுது இருந்த அதே ஜே.வி.பிதான் இப்பொழுதும் இருக்கிறது. அப்பொழுது ஜே.வி.பியுடன் ஒத்துப்போக முடிந்த சந்திரி காவால் இப்பொழுது ஒத்துப்போக முடிய வில்லை என்பதே இங்குள்ள பிரச்சினை. தன்னோடு ஒத்துப்போகாத தன்னை மோசமாக விமர்சிக்கின்ற ஒரு அமைப்புடன் தனது கட்சி யின் அடுத்த தலைவர் கூட்டுச்சேர்வதை தனக் கேற்பட்ட தனிப்பட்ட அவமானமாக, தோல்வி யாக சந்திரிகா கருதுகிறார்.

பண்டார நாயக்க வம்சத்தின் இரும்புப் பிடிக்குள் இதுவரைகாலமும் இருந்துவந்த கட்சி இப்பொழுது ராஜபக்ஷக்களிடம் போவதை அவரால் தாங்கிக்கொள்ள முடியாதிருக்கிறது. தான் இனி ஓய்வுபெறவேண்டியதுதான் என்ற யதார்த்தத்தை அவரால் விழுங்கிக் கொள்ளமுடியவில்லை என்பதே அவரது பிரச்சினை. தனக்குப் பின்னால் வரப்போகும் புதிய தலைமையிடம் தலைமைப் பொறுப்பை சுமுகமாகக் கைய ளித்து அந்தத் தலைமைக்கு வழி விட்டுக்கொடுத்து ஒதுங்கி நிற்க அவரால் முடியாதிருக்கிறது.

அவர் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி அவரு டைய தலைமைத்துவம் முடிவுக்கு வந்துகொண்டிருக் கிறது. இந்நிலையில் புதிய தலை மைத்துவம் தனக்குக்கீழ்ப்படிவாக இருக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். தன்னுடைய நாட்கள் முடிவதற்கிடையில் புதிய தலைமை தன்னை மேவி ஜே.வி.பியுடன் அணிசேர்வதை அவரால் தாங்கிக்கொள்ள முடியாதிருக் கிறது.இன்னும் சில வாரங்களில் தான் ஒரு ஓய்வுபெற்ற தலைவி என்ற யதார்த்தத்தை ஒப்புக்கொள்ளும் பக்குவம் அவரிடம் இல்லை.

மகிந்த வெல்வாரோ இல்லையோ இனி அவர்தான் கட்சியின் மையம். அடுத்த சனாதிபதியாக அவர் வரக்கூடும் என்ற நிலைமை உள்ளவரை எஸ்.எல்.எவ். பிக்குள் உள்ள மூத்த தலைவர்களும் சக்திமிக்க பிரதானிகளும் மகிந்தவைத்தான் சூழ்ந்து கொண்டிருப்பார்கள். அதுதான் அரசியல் யதார்த்தமும்கூட. ஒரு ஓய்வுபெறப்போகும் சனாதிபதியின் பக்கம் நின்று தமது அரசியல் எதிர்காலத்தைப் பணயம் வைக்க அவர்கள் தயாராயிருக்கமாட்டார்கள். இது விசயத்தில் சந்திரிகா தன்னைச் சுற்றி அரணாகக்கட்டி வளர்த்த பிரதி அமைச்சர்களும் கூட தடம்புரளத் தொடங்கிவிடுவார்கள் என்பதே கள யதார்த்தம். அல்லது தேர்தல் கால யதார்த்தம் என்றும் சொல்லலாம்.

எனவே மகிந்தவை நோக்கியே எஸ்.எல்.எவ்.பியின் வளங்கள் யாவும் திரளத் தொடங்கும். ஓய்வூதியம் பெறப்போகும் ஒரு சனாதிபதியை நோக்கியல்ல.

சாணக்கியன் தனது நூலாகிய அர்த்தசாஸ்திரத்தில் கூறுவதுபோல இளவரசர் கள் நண்டுகளைப்போன்றவர்கள். அதாவது தகப்பனைத்தின்னிகள். இப்பொழுது மகிந்தவே இளவரசர். அவர் சந்திரிகாவை தின்றேனும் ஆட்சியதிகாரத்தை அடையமுயல்வாரே தவிர பின்வாங்கமாட்டார். சர்வ அதிகாரமும் பொருந் திய சனாதிபதிச் சிம்மாசனத்தின் குசி அத்தகை யது. ஆட்சியதிகாரத்தைச் சுவைப்பதற்காக தந்தையைச் சிறைவைத்த அஜாத்சத்துரு மற்றும் தந்தையை உயிரோடு சுவருக்குள் வைத்துக்கட்டிய காசியப்பன் என்று புத்தருக்குப் பிந்திய அரசகுல வரலாற்றில் மிகக் குரூரமான உதாரணங்கள் உண்டு. எனவே மகிந்த இனி ஒரு நண்டாக மாறுவதைத்தவிர வேறுவழி யில்லை. சிம்மாசனப்போட்டி இனி அதன் குரூர விதிகளுடன் நகரத்தொடங்கும்.

மகிந்த ராஜபக்ஷ எப்படியாவது வெற்றிபெற்றுவிடத் துடிக்கிறார். முன்பின் யோசிக்காமல் அவர் காலியிலுள்ள ஒரு சோதிட ரிடம் பலன் கேட்கப்போய் எல்லாமும் பிசகி விட்டது. சோதிடர்களை அதிகம் நம்பும் ஒரு சமூகத்தில் சோதிடர்கள் தேர்தலுக்கு முன்பு சொல்லும் எதிர்வுகூறல்கள் சில சமயங்களில் பொதுசன அபிப்பிராயங்களை உருவாக்கவல்ல வைகளாக மாறுவதுமுண்டு. மகிந்த வெல்ல மாட்டார் என்று அந்த சாத்திரியார் அடித்துச் சொன்னது சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் ஏதோ ஒரு விகிதத்திற்கு செல்வாக்குச் செலுத்தக்கூடும். தவிர, எஸ்.எல்.எவ்.பிக்கு எதிரான சண்டேலீடர் பத்திரிகை, மகிந்தராஜ பக்ஷவின் வழியில் தோன்றிவரும் அபசகுணங் களை பெருப்பித்து எழுதிவருகிறது. இதுவும் மத்தியதர வர்க்கத்தின் மனதில் அவர் தோற்கப் போகிறார் என்றவொரு முற்கற்பிதத்தை உருவாக்கக்கூடியது.

தவிர, சந்திரிகா தனது கடைசிக் காலத்தில் எல்லாவற்றையுமே சொதப்பி வைத்திருக்கிறார். இப்பொழுதும் சொதப்பிக் கொண்டேயிருக்கிறார். இதுவும் தனக்குப் பாதக மானதென்று மகிந்த நம்புகின்றார். இவற்றோடு Anti Establishment Votes- அதாவது அதிகாரத்திலிருக்கும் கட்சிக்கு எதிரான உணர்வலைகள் என்ற ஒரு விசயமும் உண்டு.

இவற்றையெல்லாம் கூட்டிக்கழித்துப் பார்த்தே மகிந்த முடிவெடுத்திருக்கிறார். ரணிலைத் தோற்கடிப்பதென்றால் யாருடன் எல்லாம் கூட்டுச்சேர முடியுமோ அவர்கள் எல்லாரோடும் கூட்டுச் சேர அவர் தயார்.

யு.என்.பியிலிருந்து பிரிந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா யு.என்.பியைத் தோற்கடிப்பதற்காக எந்த எந்த சக்திகளை அரவணைத்து வியூகம் வகுத்தாரோ அப்படித்தான் இப்பொழுது மகிந்தவும் பண்டாரநாயக்க தலைமைதாங்கிய அதே சக்திகளின் அடுத்த கட்ட வளர்ச்சிகளுக்கு தலைமைதாங்க முடிவெடுத்துவிட்டார்.

அவருடைய கனவெலாம் ரணிலைத் தோற்கடிப்பது ஒன்றுதான். எப்படியாவது நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதியாக வந்துவிடுவது ஒன்றுதான். அந்த ஒரு இலக்கை நோக்கியே அவர் கூட்டுக்களை உருவாக்கி வருகிறார். இதற்காக அவர் எல்லாவிதங் களிலும் 'ரிஸ்க்' எடுக்கத் தயாராகிவிட்டார். இது விசயத்தில் ரணிலைத் தோற்கடிப்பது என்ற பொதுவேலைத் திட்டத்தின் கீழ் எஸ்.எல்.எப்.பியிலுள்ள மூத்த பிரதானிகள் மகிந்தவுடன் தான் நிற்பார்கள். நிச்சயமாக ஓய்வூதியம் எடுக்கப்போகும் சந்திரிகாவுடன் அல்ல.

இந்நிலையில் மகிந்த வைத்துக் கொள்ளும் தேர்தல் கூட்டுக்கள் நிரந்தரமானவை களாகத்தான் இருக்கவேண்டும் என்றில்லை. பலமாதங்களு , முன்பு ரணிலைக் கவிழ்ப் பதற்காக எப்படி சந்திரிகா ஜே.வி.பியுடன் உடன்பாடு ஒன்றிற்கு வரமுடிந்ததோ அப்படித் தான் இதுவும். ரணிலைக் கவிழ்ப்பதற்காக சந்திரிகா முன்பு சமாதானத்தைப் பலியிட்டார். இப்பொழுது மகிந்தவும் அதையேதான் செய்கிறார். ஆனால் அவர் இதை தன்னுடன் கலந்துபேசிச் செய்யவில்லை என்பதே சந்திரிகாவுக்குள்ள கோபம்.

ஆனால், மகிந்தவைப் பொறுத்தவரை இது தவிர்க்கமுடியாதது. ஜே.வி.பியுடன் கூட்டுச் சேராவிட்டால் வெற்றியை உறுதிப்படுத்துவது கடினம். முதலில் எப்படியாவது சனாதிபதி யாகிவிடவேண்டும். அப்படி வரும்வரைக்கும் தான் சந்திரிகா ஒரு தொல்லையாக இருப்பார். அதற்குப்பின் சந்திரிகா ஒரு பொருட்டே அல்ல. தலைமைத்துவப் பண்புகளற்ற அநுராவும் ஒரு பொருட்டே அல்ல. எனவே சந்திரிகாவிடமிருந்து வரக்கூடிய எந்தவொரு எதிர்ப்பும் மகிந்த சனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படும் வரையுந் தான். ஆனால் அதற்குப்பின்னர்தான் மெய்யான ஒரு போட்டி தொடங்கும். அது ஜே.வி.பியுட னானதாக இருக்கும்.

ஏனெனில் நீண்டகால அடிப்படையில் மகிந்தவின் மெய்யான எதிரி ஜே.வி.பிதான்.

முதலாவதாக, ஜே.வி.பி மகிந்தவின் வர்க்க எதிரி. இரண்டாவதாக, ஜே.வி.பி, மகிந்தவின் தலைமைத்துவத்துக்குச் சவாலாக றுகுணுவில் வளர்ந்துவரும் ஒரு மாற்றுச் சக்தியாகக் காணப்படுகிறதென்பது.

ஜே.வி.பியின் பிரதான தளம் றுகுணு. இங்குள்ள வறிய சிங்களவர்கள் மற்றும் சிறிய நடுத்தர முதலாளிகளின் ஆதரவுத் தளத்தைப் பெறுவதில் ஜே.வி.பிக்கும் மகிந்தவுக்கும் ஒரு நேரடிப்போட்டி உண்டு. றுகுணுவில் மட்டுமல்ல தென்னிலங்கையிலுள்ள எல்லா வறிய சிங்களவர்கள் மற்றும் சிறிய நடுத்தர முதலாளி கள் போன்றோருக்கு யார் தலைமைதாங்குவது என்பதில் ஜே.வி.பிக்கும் எஸ்.எல்.எவ்.பிக்கும் இடையில் ஒரு நேரடிப்போட்டி உண்டு. இப் போட்டி காரணமாகவே முன்பு பிரதமர் தெரிவின் போது ஜே.வி.பி மகிந்தவை பரிந்துரைக்க வில்லை. ஏனெனில் தமது ஆதரவுத்தளத்தில் மகிந்த மேலும் பலமடைவதை அப்பொழுது ஜே.வி.பி விரும்பவில்லை.

கடந்த தேர்தலின்போது ஜே.வி.பி பெற்ற வெற்றியெனப் படுவது மறுவளமாக எஸ்.எல்.எவ்.பியின் தோல்வியே. அதாவது எஸ்எல்எவ்பியின் வாக்கு வங்கியை உடைத்து ஜே.வி.பி அப்படியொரு வெற்றியைப் பெற்றது. இது சந்திரிகாவுக்கும் தெரியும், மகிந்தவுக்கும் தெரியும். ஜே.வி.பிக்கும் தெரியும்.

இந்நிலையில் ஜே.வி.பி, மகிந்த கூட்டு எனப் படுவது ஒரு கொள்கை அடிப்படையிலான கூட்டு என்பதைவிடவும் தந்திரோபாய ரீதியிலான ஒரு சந்தர்ப்பவாதக்கூட்டு என்பதே சரி. இது சேர்ந்திருந்து சுரண்டும் ஒரு அரசியல். இப்படிப்பார்த்தால் சிலசமயம் மகிந்த சனாதிபதியானால் நீண்டகால நோக்கில் மகிந்தவுக்கு சவாலாக எழப்போவது ஜே.வி.பி தான். ஜே.வி.பியின் சிவப்புக்கொடியா, அல்லது மகிந்தவின் செங்கட்டிச் சிவப்புச்சால்வையா எது ஏழைச்சிங்களவர்களின் மெய்யான நண்பன் என்று ஒரு போட்டி ஒருநாள் வரும். அப்பொழுது ஜே.வி.பி, மகிந்தவின் பிரதான எதிரியாக அதன் மெய்வடிவத்தை எடுக்கும்.

இப்பொழுது பச்சை ரணிலைத் தோற்கடிக்க ரத்தச்சிவப்பு ஜே.வி.பியும் செங்கட்டிச்சிவப்பு (அல்லது மண்ணிற) மகிந்தவும் கூட்டுச்சேர்ந் திருக்கிறார்கள். சில சமயம் ரணில் தோற்பாராக இருந்தால் மகிந்த குறிப்பாகத் தனது சொந்தத் தொகுதியில் ஜே.வி.பியுடன் தலைமைத்துவப் போட்டியில் ஈடுபடவேண்டியிருக்கும். இதெல் லாம் மகிந்தவுக்கும் தெரியும், ஜே.வி.பிக்கும் தெரியும். சனாதிபதியாக வரும்வரை எல்லா நிபந்தனைக்கும் விட்டுக்கொடுத்து வெற்றியை அதிக பட்சம் உறுதிப்படுத்திவிட வேண்டும் என்று மகிந்த சிந்திக்கிறார்.

ரணிலைத் தோற்கடிப்பதற்கு அவர் வகுத்துள்ள வியூகம் முன்பு சந்திரிகா வகுத்த அதே வியூகத்தின் ஆகப்பிந்திய வடிவம்தான். இந்த வியூகத்துட் சிக்கியிருப்பது சமாதானம் என்பதே இலங்கைத்தீவின் துயரம். அதாவது சிங்களத் தலைவர்கள் ஒருவர் மற்றவரைத் தோற்கடிப்பதற்காக அணிகள் சேரும்போதெல் லாம் பலியிடப்படுவது தமிழர்களின் உரிமை களே என்பது.

***மகிந்த வெல்வாரோ இல்லையோ இனி அவர்தான் கட்சியின் மையம். அடுத்த சனாதிபதியாக அவர் வரக்கூடும் என்ற நிலைமை உள்ளவரை எஸ்.எல். எவ்.பிக்குள் உள்ள மூத்த தலைவர்களும் சக்திமிக்க பிரதானிகளும் மகிந்தவைத்தான் சூழ்ந்துகொண்டி ருப்பார்கள். அதுதான் அரசியல் யதார்த்தமும்கூட. ஒரு ஓய்வுபெறப்போகும் சனாதி பதியின் பக்கம் நின்று தனது அரசியல் எதிர்காலத்தைப் பணயம்வைக்க அவர்கள் தயாராயிருக்க மாட்டார்கள். இது விசயத்தில் சந்திரிகா தன்னைச் சுற்றி அரணாகக்கட்டி வளர்த்த பிரதி அமைச்சர்களும் கூட தடம்புரளத் தொடங்கிவிடுவார் கள் என்பதே கள யதார்த்தம். அல்லது தேர்தல் கால யதார்த்தம் என்றும் சொல்லலாம்.***







# நறுக்கென...

## ஜயந்த தனபால சமாதானத்தின் எதிரி!



இலங்கையின் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அமைப்பிற்கு புறம்பான செயற்பாடுகளை அண்மைக் காலமாக வெளிப்படுத்தி வருகிறார்.

இனங்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதில் சமாதானச் செயலகத்துக்கு கணிசமான பங்குண்டு. அத்தோடு இந்த ஜயந்த தனபால போன்றோரின் இராஜதந்திரப் பணி என்பது கட்சி அரசியல் நடாத்தும் அரசியல் வாதிகளின் பணியைப் போன்றதல்ல.

ஆனால் ஜயந்த தனபால தற்போது கட்சி அரசியல் வாதிகளைப் போன்றே தனது பேச்சையும் செயலையும் வெளிப்படுத்தி வருகிறார்.

சமாதானத்தை உருவாக்குகின்ற பணிக்கு பதிலாக சமாதானத்திற்கு நேர் எதிரான காரியங்களை இராஜதந்திரப் பணி என்ற பெயரில் செய்து முடிக்க முயல்கிறார்.

அதாவது புலிகள் இயக்கத்துக்கு எதிராக சர்வதேச நாடுகளை தூண்டி அரசுக்கு சார்பான காரியங்களை ஆற்ற முயல்கிறார்.

எப்படி முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நாடு நாடாக அலைந்து திரிந்து புலிகள் இயக்கத்திற்கு எதிரான பிரசாரங்களை மேற்கொண்டாரோ அதே பணியைத்தான் ஜயந்த தனபாலவும் சமாதான செயலகப் பணிப்பாளர் என்ற பணி நிலைக்கூடாக செய்து முடிக்க முயல்கிறார்.

ஜயந்த தனபால ஐ.நா. அமைப்பின் செயற்பாடுகளோடு தொடர்புபட்டிருந்த ஒருவர். அத்தோடு அமெரிக்காவில் நீண்ட காலம் இருந்தவர். அத்தகைய ஒருவர் ஒரு முற்போக்காக செயற்படாது சாதாரண ஒரு சிங்கள அரசியல் வாதியைப் போன்று செயற்பட முனைவதானது சிங்கள தேசத்திலிருந்து வருகின்ற எவரிடமிருந்தும் சிங்கள தேசத்தின் நலன்கள் பற்றியதும் சிங்கள மேலாண்மை வாதத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் செயற்பாட்டைத் தவிர வேறு எதனையும் எதிர்பார்க்க முடியாது என்பதையே இவர்களின் செயற்பாடுகள் காட்டுகின்றன.

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் ஜயந்த தனபால புலிகள் இயக்கத்திற்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை உலக நாடுகள் எடுக்கவேண்டும் எனக் கோரியதுடன் புலிகள் இயக்கத்தை சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குத் திரும்புவதற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் எனவும் கோரியுள்ளார்.

ஏதோ புலிகள் இயக்கம்தான் சமாதான முயற்சிகளுக்கு எதிராகச் செயற்படுவது போன்றும் புலிகள் இயக்கம் சமாதான முயற்சிகளுக்கு எதிரான அமைப்புப் போன்றும் பேசியுள்ளார்.

அரசின் செயற்பாடுகள் எதுவும் உலக நாடுகளுக்குத் தெரியாது ஜயந்த தனபால சொல்லித்தான் உலக நாடுகளுக்கு புரியவேண்டும் என்பது போலவும் முழங்கித் தள்ளியுள்ளார்.

அரசின் சமாதான முயற்சிக்கு எதிரான கபட நாடகங்கள் அம்பலமேறிவிட்ட நிலையில் இவர்கள் இப்படிப் பேசுவது வேடிக்கையாகத்தான் உள்ளது.

எல்லாம் எதிர்கால கனவுகளோடு பேசுவது போலவே தெரிகிறது.

## தமிழர்களை அழிப்பதில் ஒன்றிணைந்தவர்கள்..!



சிறிலங்காவின் நாடாளுமன்றத்தைப் பொறுத்த வரையில் அது சிங்கள தேசத்தின் எல்லா அடக்குமுறை வடிவங்களுக்கும் அரசியல் அங்கீகாரம் வழங்கும் கூடம்.

இதனால் தான் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் நாடாளுமன்றத்தை என்றோ நிராகரித்து நாடாளுமன்றத்துக்கு புறம்பான தமிழீழ விடுதலைப்போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட பல அநீதிகள் இந்த நாடாளுமன்றத்தின் மேடையேறி சிங்களவர்களின் ஆதரவு வாக்குகளால் போலி சனநாயக அந்தஸ்துப் பெற்று தமிழ் மக்களை குறிவைத்தன.

இதற்காக தந்தை செல்வா காலந்தொட்டே அகிம்சைப் போராட்டம் கறுப்புத்துணியால் வாயைக் கட்டிப் போராட்டம், அமைதியான எதிர்ப்புப் போராட்டம், என எல்லா வகையிலும் போராடி தமிழர்கள் கண்டது என்ன. அதிக பெரும்பான்மை பிரதிநிதித்துவத்தைக் கொண்ட சிங்களவர்கள் தமது விருப்பு வெறுப்புக்களை தமிழர்கள் மீது திணித்தே வருகின்றனர்.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என ஆயிரம் குத்துவெட்டுக்களை சிங்கள தேசத்தின் ஐக்கியதேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் கொண்டிருந்தாலும் ஆளும் கட்சியின் திட்டங்களை எதிர்க்கட்சி எதிர்க்கும் ஒரு நடைமுறையைக் கொண்டிருந்தாலும், தமிழ்மக்களுக்கு எதிராகக் கொண்டுவரும் திட்டங்களுக்கு ஆதரவாக இரண்டு பிரதான கட்சிகளுமே ஆதரவளிப்பதானது தமிழ் மக்களை இவர்கள் பொது எதிரியாகக் கருதுவதையே காட்டுகிறது.

அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்து பின்னர் அதனை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்தபோது ஐக்கிய தேசியக்கட்சி ஆதரித்து வாக்களித்தது. இந்த அவசரகாலச்சட்டமானது ஏதோ நாடு தழுவிய ரீதியிலானதாக இருந்தாலும் ஆனால் அதன் மூலம் கைது செய்யப்படுவதும் தண்டிக்கப்படுவதும் தமிழ் மக்கள் மட்டுமே.

இந்த நிலையில் நடைமுறையிலிருக்கும் அவசரகாலச்சட்டத்தை இரண்டாவது முறையாக நீடிப்பதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி தனது ஆதரவை வழங்கியுள்ளது.

இதன் போது ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரனுக்கு நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு ஐக்கிய தேசிய கட்சி நேரம் ஒதுக்கவில்லை. இந்த நிலையில் தனது எதிர்ப்பைக்காட்டும் முகமாக நாடாளுமன்றத்தில் ஆவணங்களை கிழித்தெறிந்தபோது ஐக்கிய தேசியக்கட்சி கொறடாவான மகிந்த சமரசிங்க மகேஸ்வரன் எம்.பி எந்த ஆவணங்களை கிழித்து எறிந்தாலும் ஐ.தே.க அவசரகாலச்சட்டத்தை ஆதரிக்கும் என தெரிவித்தமையானது, அந்தக் கட்சிக்குள்ளும் இருக்கும் இனவாதத்தையே குறிக்கிறது. அத்துடன் அது தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அநீதிக்கு ஆதரவாகச் செயற்படுவதில் எவ்வளவு உறுதியாக உள்ளது என்பதையுமே காட்டிநிற்கிறது.

உண்மையில் தமிழ் மக்களைப் பொறுத்தவரை சிங்களதேசத்தின் எந்தக் கட்சியானாலும் அவர்கள் நிராகரிக்கப்படவேண்டியவர்கள்.

## வேலி தாண்டப் போகும்: சோகத்தில் சந்திரிகா!



பதவி கையைவிட்டுப் போவது உயிர் உடலை விட்டுப் போவது போன்றது அரசியல்வாதிகளுக்கு.

சரி போனால் போகட்டும் இந்த முறை தவறினால் அடுத்தமுறை பிடித்துக்கொள்ளலாம் என்பதற்கும் வாய்ப்பில்லாத நிலையில் பரிதாபத்துக்குரியவராகக் காணப்படுகிறார் சனாதிபதி சந்திரிகா.

ஏனெனில் இலங்கையின் அரசியல் யாப்பின் பிரகாரம் ஒருவர் இரண்டு முறைக்கு மேல் சனாதிபதியாக வரமுடியாது என்பது தெளிவாக உள்ளது.

இந்த நிலையில் இரண்டுமுறை இலங்கையின் சனாதிபதியாக சந்திரிகா இருந்துவிட்டதால் இனி இலங்கையின் அரசியலில் ஒரு செல்லாக்காசாகி விடுவார். இது சந்திரிகாவுக்கும் தெளிவாகத் தெரியும்.

இந்த நிலையில் சரி போனால் போகட்டும் எனது அரசியல் வாழ்வு முடிந்தால் முடியட்டும் ஜெயலலிதாவிற்கு கொஞ்சக்காலம் ஒரு முதலமைச்சராகச் செயற்பட்ட பன்னீர்ச் செல்வத்தைப் போல ஒருவரை வைத்துச் செயற்படலாம் என்றால் மகிந்தவுடனான உறவு கீரியும் பாம்பும் போல உள்ளது.

இந்த நிலையில் கச்சிதமாய் அடுத்த முறையாவது பண்டா குடும்பத்துக்குள்ளேயே சுற்றிச் சுற்றி அதிகாரத்தை வைத்துக்கொள்ள தம்பி அநுரா பண்டாரநாயக்கா குடும்பத்துக்கு மட்டுமல்லாது நாட்டுக்கும் சேர்த்தே கோமாளியாக உள்ளார்.

இந்த நிலையில் தந்தையார் ஆரம்பித்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி பண்டாரநாயக்கா வீட்டு வேலியைத்தாண்டி வெளியில் போவதை தடுப்பது எவராலும் முடியாது என்கிற நிலையிலுள்ளது.

எனவேதான் எப்படியாவது கட்சியின் அதிகாரத்தை கைநழுவிப் போகவிடாது தடுப்பதற்காக அம்மையார் படாதபாடுபடுகிறார்.

இதற்காக அம்மையார் கடைசியாக எடுத்துள்ள முயற்சி சனாதிபதித் தேர்தலை மேலும் ஒரு ஆண்டு காலத்திற்கு பின்போடத்தான் நாட்டின் அரசியல் யாப்பு இடம் கொடுக்கவில்லை என்பதால் கட்சி யாப்பை ஒரு கை பார்ப்போம் என முயற்சியில் இறங்கிவிட்டார்.

இதற்காக அவர் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளருக்குப் புதிய வழிகாட்டல் நெறியை தயாரிப்பதற்கு முனைவதாக தெரிவிக்கப்படுகிறது.

எது எப்படியோ சனாதிபதி சந்திரிகா தலைமையில் தயாரிக்கப்படும் இந்த வழிகாட்டல் கட்சி அதிகாரம் சுற்றிச்சுற்றி பண்டா குடும்பத்துக்குள் நிற்கக் கூடியதாக இருக்குமேயொழிய அது வேறொன்றுக்கும் உதவப்போவதில்லை என்பது மட்டும்தான் உண்மை.

எல்லாம் பதவி படுத்தும் பாடுதான் இத்தனை அவஸ்தையும்.

சும்மாவா பதவிச்சுகம் அத்தனை இன்பமானது இவர்களுக்கு.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு அமெரிக்கத் தூதுவரின் அங்கீகாரம்



தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தை அமெரிக்காவில் தடை செய்ய வேண்டுமென்பது சிங்கள இனவாதிகளின் நீண்டகால எதிர்பார்ப்பு. இதற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மீது பல அவதூறுகளை இந்த இனவாதிகள் பரப்பி வருகிறார்கள்.

1986 ஆம் ஆண்டு காலத்திலிருந்து புனர்வாழ்வுக்கழகம் போரினாலும் இயற்கையினாலும் என அல்லலுற்ற தமிழ் மக்களின் துயரை ஆற்றுவதில் தமிழர் புனர்வாழ்வுக் கழகமே தனது பங்கை ஆற்றி வருகிறது.

அத்தோடு கொடிய யுத்தத்தை தமிழர்கள் மீது சிங்களப் பேரினவாத அரசுகள் கட்டவிழ்த்துவிட்ட போதும் உலகநாடுகளின் உதவிகளும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் உதவிகளும் தமிழ் மக்களுக்கு கிட்டாத போதும் தமிழர் புனர்வாழ்வுக்கழகமே தமிழ் மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை ஆற்றி வந்துள்ளது.

தமிழர் தாயகத்தில் மக்கள் நலன்சார்ந்த பணியினை சிறப்பாக ஆற்றியமைக்காக புனர்வாழ்வுக்கழகம் சர்வதேச நாடுகளினாலும் ஊடகங்களாலும் பொது அமைப்புக்களாலும் மிகவும் பாராட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தை தடைசெய்ய வேண்டுமென இனவாதிகளும் சில இனவாத ஊடகங்களும் கூக்குரலிட்டு வரும் நிலையில் இந்த இனவாதிகளின் வாய்களை அடக்கும் வகையில் அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் ஜெப்ரிலான்ஸ்டட் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தொடர்பான அமெரிக்காவின் தெளிவான நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார்.

அதாவது, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அமெரிக்காவின் சட்ட விதிகளுக்கு உடன்பட்டுச் செயற்படுவதால் அதைத் தடைசெய்ய வேண்டிய அவசியம் எதுவுமில்லை எனத் தெரிவித்துள்ளதோடு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுவருகிறது. அத்துடன் நாங்கள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தை மனிதாபிமான தொண்டு நிறுவனமாகவே நோக்குகின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் புனர்வாழ்வுக்கழகம் தொடர்பான அமெரிக்காவின் நிலைப்பாடு தொடர்பாக தெரிவித்த கருத்தானது இனவாதிகளுக்கு விழுந்த சாட்டையடியாகவே இருக்கும்.

ஏனெனில், சிங்கள தேசம் இடும் கூச்சல்களையெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு உலக நாடுகள் உள்வாங்கிய காலமெல்லாம் மலையேறிவிட்டது.

இந்த நான்காண்டுகாலத்தை நெருங்கும் சமாதான காலத்தில் சிங்களதேசம் தமிழ்மக்களுக்கு இழைத்த அநீதிகள் அம்பலமேறிவிட்டன.

அத்தோடு இனியும் சிங்கள தேசத்தின் சுய இலாபங்களுக்காக சர்வதேச நாடுகள் அதற்கு சார்பாக எடுக்கும் முடிவுகள் தொடர்பாக ஆழமாக சிந்திக்கத் தொடங்கிவிட்டதையே அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரிலான்ஸ்டட்டின் கூற்று தெளிவுபடுத்துகிறது.

கெட்டிக்காரன் புளுகு எட்டே நாளுக்குத்தான் என்பது போல சிங்கள தேசத்தின் புளுகு எல்லாம் எப்போதோ வெளிப்பட்டுவிட்டது.

வேழினி

# சீனாவின் பாரம்பரிய ஊசிக் குற்று மருத்துவம்



மேலைத்தேய மருத்துவமுறை களில் நம்பிக்கை குறைந்துவருகிறது. உடன் நிவாரணம் கிடைத்தாலும் பக்கவிளைவுகளும் நாட் சென்றபின் தோன்றும் பின்விளைவுகளும் மேற்கு நாட்டு மக்களை அச்சுறுத்தி வருகின்றன. இதன் காரணமாக மாற்று மருத்துவ முறைகளை (ALTERNATE MEDICAL SYSTEMS) அவர்கள் பெருமளவில் கைக்கொள்கின்றனர். ஆங்கில மருத்துவத்தோடு ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்குச் சொந்தமான சிகிச்சை வகைகளையும் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்தியா,சீனா ஆகிய நாடுகளில் பன்னெடுங்காலமாக பாவனையில் இருக்கும் மூலிகை மற்றும் இயற்கைப் பொருட்களில் இருந்து தயாரிப்பாகும் மருந்து மாத்திரைகள் மேற்கு நாடுகளில் நன்கு விற்பனையாகின்றன. பாரம்பரிய இந்திய, சீன மருத்துவத்தால் மேற்கு நாட்டு அறுவைச் சிகிச்சை முறைகளை எட்ட முடியாதிருக்கிறது. இதைப் பாரிய பின்னடைவு என்று இது பற்றிய ஆய்வாளர்கள் கூறுவர்.

மேற்கு நாட்டு மருந்துவகைகள் நோயைக் குணப்படுத்த முயல்கின்றன. ஆசிய நாட்டில் குறி வித்தியாசமாக இருக்கிறது. நோயை அடையாளம் காண்பதோடு உடலுக்கும் வைத்தியம் செய்கிறார்கள். அணுகுமுறை வித்தியாசத்தை இதிலிருந்து உணரமுடியும். சுருங்கி வரும் பூவுலகில் பிறநாடுகளின் மருத்துவ முறைகள் பற்றி அறியவும் அவற்றில் பயனுள்ளவற்றை ஏற்றுக்கொளவும் மேற்கு நாடுகள் இன்று துணிந்துள்ளன. அத்தோடு தேசியம் தலைதூக்கிய இக்காலகட்டத்தில் சுதேச வைத்திய முறைகள் பற்றி அறியும் ஆர்வம் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் காணப் படுகிறது. இதன் காரணமாக மூட நம்பிக்கை என்று மேற்கு நாட்டவர் வழிகாட்டலில் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த பழைய சிகிச்சை முறைகள் புத்துயிர் பெற்றுள்ளன. 21 ஆம் நூற்றாண்டின் வளர்ச்சிப் போக்கை அவதானிக்கும போது கிழக்கும் மேற்கும் இணைந்த புதியதோர் மருத்துவப் பாரம்பரியம் தோன்றும் வாய்ப்பு கூடுதலாக இருப்பது கண்கூடு.

சீன, இந்திய, மத்திய கிழக்கின் யூனானி, மேற்கத்திய வைத்தியம், எகிப்திய, ஆபிரிக்க, மற்றும் தென் அமெரிக்க என்று உலகின் மிகப் பழமைவாய்ந்த பாரம்பரிய வைத்திய முறைகள் வகைப்படுத்தப்படுகின்றன. காலப்போக்கில் ஒன்றோடு ஒன்று இணைந்தும் உள்ளன, எனினும் வித்தியாசங்கள் புலப்படுகின்றன. இந்திய மருத்துவத்தில் ஆயுள்வேதம் (ஆயுள்+வேதம்) சித்த வைத்தியம் என்று இருவகைகள் காணப்படுகின்றன. ஐந்தாவது வேதம் என்று கூறப்படும் ஆயுள் வேதம் வட இந்தியாவுக்கும், சித்த வைத்தியம் தென்னிந்தியாவுக்கும் உரியவை. யாழ் தீபகற்பத்தில் மிகவும் வலுவான சித்த வைத்தியப் பாரம்பரியம் இருந்திருக்கிறது. இன்று அது அழியும் நிலையை எட்டிவிட்டது. சித்த வைத்தியர்கள் பனடோல், ரெற்றாசைக்கிளின் போன்ற ஆங்கிலத் தயாரிப்புக்களை மருந்து உரலில் இடித்துப் பொடி செய்து நோயாளர்களுக்கு விநியோகிக்கின்றனர். சித்த வைத்தியப் படிப்பும் ஏனோ தானோ என்று இருக்கிறது. எமது தேசிய எழுச்சியின் முக்கிய அங்கமாக சித்த வைத்தியப் பாரம்பரியத்தை வளர்த்தெடுக்கவேண்டும்.

யாழ் நல்லூரில் ஒரு பேரலை போன்ற சித்த வைத்திய மறுமலர்ச்சி 15 ஆம் நூற்றாண்டில் தோன்றியது. ஒன்பது பாகங்களையும் 8,000 பாக்களையும் கொண்ட மருத்துவ நூற்தொகுதி அப்போது வெளியிடப்பட்டது. சித்த வைத்திய மீள் பதிப்புக் குழு பாலரோக நிதானம் என்ற ஒரு பகுதியை அச்சேற்றியுள்ளது. அதன்பின் தூக்க நிலைக்குச் சென்றுள்ளது. கேரளத்தில் சித்த வைத்தியம் மிகவும் உன்னத நிலையில் இன்று இருக்கிறது. கேரளத்தின் மூலிகைகளும் மருந்துத் தயாரிப்புக்களும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. எண்ணெய் வைத்தியத்தில் கேரளம் முன்னணி இடம் வகிக்கிறது. சிவனுக்கு முதலிடம் கொடுக்கும் சைவசித்தாந்த மதத்திற்கும் சித்த வைத்தியத்திற்கும் நிறையத் தொடர்பு உண்டு. வைத்தியநாதன், வைத்தியலிங்கம் என்பன சிவனாருடைய நாமங்களாகும்.

சீனாவின் பாரம்பரிய வைத்திய முறை பற்றி ஒரு சிறு கட்டுரையில் சொல்ல இயலாது. TCM அல்லது TRADITIONAL CHINESE MEDICINE மூன்று மூலாதாரங்களின் கூட்டாகத் தோன்றியது. தாவரங்கள், தாதுப் பொருட்கள், விலங்குகள் ஆகிய மூன்று ஆதாரங்களையும் தகுந்த விகிதத்தில் கலந்து மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. இதில் தாவரங்கள் மிகப்பெரிய பங்கு வகிக்கின்றன. அதே சமயத்தில் மனித உடலின் நோய்களை இருவகையாக சீனர்கள் பிரித்துள்ளார்கள் உள்நோய்கள், வெளிநோய்கள், தட்பவெப்ப மாற்றங்கள், நஞ்சுகள், தாங்க முடியாத வேலைச் சுமை போன்றவை வெளிநோயைத் தோற்றுவிக்கின்றன. பெருமகிழ்ச்சி,கடும்துன்பம், கோபம், சோகம், அச்சம், வெறுப்பு, கட்டுக்கடங்காத காதல் என்ற ஏழுவகை மனித உணர்ச்சிகளும், பொருத்தமற்ற உணவுப் பழக்கங்களும் உள்நோய்களையும் உள்ளுறுப்புச் சேதங்களையும் விளைவிக்கின்றன. நோய்களுக்கு ஐந்து வகை மருந்துகளைப் பாரம்பரிய சீன வைத்தியர்கள் வழங்குகிறார்கள். குடிநீர், விழுங்கும் உருண்டைகள், தூள் மருந்து, சிறு மாத்திரைகள், மருத்துவத் தேவைக்காகத் தயாரிக்கப்பட்ட மதுபானம் அத்தோடு மருத்துவக் குணங்களுக்காகத் தெரிவு செய்யப்பட்ட உணவு வகைகளை உட்கொள்ளும்படியும் அவர்கள் நோயாளர்களைக் கேட்கின்றனர். எதையும் எப்போதும் தின்னுவதைக் கைவிடும்படி சீன வைத்தியம் கூறுகிறது.

விசேடமாக மருத்துவத் தேவைக்காகத் தயாரித்த ஊசிகளால் மனித உடலின் கேந்திர இடங்களில், மேல் தோல் ஆழத்திற்குக் குற்றி அந்த ஊசிகளை முறையாகப் பக்கவாட்டில் அசைப்பது மூலம் அளிக்கப்படும் சிகிச்சை "அக்குபஞ்சர்" (ACUPUNCTURE) என்றழைக்கப்படுகிறது. தமிழில் இதை 'ஊசிக் குற்று மருத்துவம்' எனலாம். கைத் தையலுக்கு நாம் பாவிக்கும் தையல் ஊசியிலும் பார்க்க மெலியதாகவும் சற்று நீளம் கூடியதாகவும் இந்த ஊசிகள் இருக்கின்றன. துருப்பிடிக்காத உருக்கு இரும்பில் அவை செய்யப்படுகின்றன. சீனாவின் விசேட சிகிச்சை முறை என்று மருத்துவ உலகம் இதை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த ஊசி பற்றி மேலதிக குறிப்பு- அதன ஒரு முனை மிகவும் கூராகவும் மறுமுனையில் ஒரு சின்னஞ்சிறிய மரக்கட்டை செருகப்பட்டிருக்கும். ஊசியை உடலில் ஏற்றியபின் முன்னும் பின்னும் திருப்புவதற்கு ஏதுவாக இது அமைகின்றது. இவ்வகைச் சிகிச்சைக்குப் பின் குற்றிய இடத்தில் பாசி போன்ற தாவரத்தின் புகையைத் தேவைப்பட்டால் பிடிப்பார்கள். இது மருத்துவ மொழியில் MOXI-BUSTION எனப்படும்.

அக்கு பஞ்சர் சிகிச்சை ஏறத்தாழ 5000 வருடம் பழமை வாய்ந்தது. சக்கரவர்த்தியின் உள்நோய் மருத்துவம் என்ற 4,700 வருடங்களுக்கு முந்திய மருத்துவ நூலில் இது பற்றிய விரிவான குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஊசிக் குற்றின் அடிப்படைத் தத்துவம் பின்வருமாறு. மனித உடலில் "ச்சி" (Qi) என்று சீனமொழியில் அழைக்கப்படும். சக்தி அலை (ENERGY) தனது ஓடுபாதைகள் மூலம் சுற்றிக்கொண்டிருக்கிறது. ச்சி சரிவர இயங்கிக்கொண்டிருக்கும் வரை மனித உடலில் நோய் நொடி தோன்றமாட்டாது. ச்சி சரிவர இயங்காவிட்டால் ஆரோக்கியத்திற்கு அடிப்படையான "யின்" (YIN), "யாங்" (YANG) என்பன சமநிலைப் பிறழ்ச்சிகண்டுவிடுகின்றன. இப்பிறழ்ச்சி காரணமாக நோய்கள் ஏற்படுகின்றன. எனவே யின், யாங் சமநிலைதான் ஆரோகக்கியத்திற்கு அடிப்படை-யின், யாங் சமநிலைக்கு ச்சியின் இயக்கம் திருப்திகரமாக அமையவேண்டும். யின் என்றால் இருளும் ஓய்வும் என்று பொருள், யாங் என்றால் வெளிச்சமும் சுறுசுறுப்பும் என்று பொருள். இப்போது ஊசிக் குற்று எதற்காக என்ற கேள்வி எழுகின்றது. ச்சியின் இயக்கத்தை உசுப்பி விடுவதோடு யின், யாங் சமநிலையை ஏற்படுத்துவதுதான் ஊசிக் குற்றின் நோக்கம்.

மனித உடலின் இயக்கம், மனித உடல் இயக்கத் தத்துவம், மனித உடல் அமைப்பு என்பனவற்றில் திறமையுள்ள மருத்துவர்கள் பல்வேறு நோய்களை ஊசிக்குற்று மூலம் மாற்றுகிறார்கள். பொதுவாக மனித உடலில் 666 கேந்திர இடங்கள் காணப்படுகின்றன. எங்கே குற்றவேண்டும் என்பதைத் தீமானிக்க முன் நோயை அடையாளம் காணவேண்டும். நோயை அடையாளம் கண்டபின் உடலின் எப்பாகத்தில் குற்றவேண்டும் என்பதைத் தீர்மானிக்கலாம். சீன மருத்துவத்தின் ஒரு விசித்திரமான கண்டுபிடிப்புப் பற்றி இங்கு குறிப்பிடலாம். மனிதர்களுடைய காது மடல் கருப்பைக்குள் முடங்கிக் கிடக்கும் சிசுவின் உருவத்தில் அமைந்துள்ளது. ஆண்,பெண் இருபாலாரின் காது மடலுக்கும் இது பொருந்தும். சில குறிப்பிட்ட நோய்களுக்கு ஊசிகளைக் காது மடலில் குற்றுவார்கள். எங்கே குற்றவேண்டும் என்பதை நோய்தான் தீர்மானிக்கும் என்று ஏற்கனவே சொல்லிவிட்டோம். சத்திர சிகிச்சைக்கு முன் கொடுக்கும் மயக்க மருந்துக்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஊசிகளை குற்றுவது மூலம் நோயாளியை மயக்கமடையச் செய்யலாம் என்பது சீன மருத்துவத்தின் இன்னுமோர் கண்டுபிடிப்பு.

1972 இல் அமெரிக்க அதிபர் நிக்சன் சீனாவுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயம் மேற்கொண்டார். அவருடன் கூடச் சென்ற பிரபல பத்திரிகையாளர் ஜேம்ஸ் றெஸ்ரன் (JAMES RESTON) என்பவருக்குத் 'திடீர்' வயிற்றுவலி ஏற்பட்டது. அதற்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. அப்போது சீனாவில் மயக்க மருந்து பாவனையில் இல்லை. ஊசி குற்று மூலம் றெஸ்ரனை மயக்கமடையச் செய்து சீன மருத்துவர்கள் வெற்றிகரமாக சத்திர சிகிச்சை செய்தார்கள். இதன்பின் உலகம் முழுவதும் அக்குபஞ்சர் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது. இன்று அமெரிக்கா, யூ.கே, கனடா,சுவீடன், அவுஸ்திரேலியா நாடுகளில் மயக்க மருந்துக்குப் பதிலாகவும் பிற மருத்துவத் தேவைகளுக்காகவும் ஊசிகள் பயன்படுத்தப்படுகின்றன. அமெரிக்காவின் புகழ்பெற்ற உள்நோய் மருத்துவச் சஞ்சிகை தனது டிசெம்பர் 2004 இதழில் (ANNALS OF INTERNAL MEDICINE,DECEMBER 2004) மூட்டு வலிக்கு ஊசிக் குற்று மருத்துவம் சிறந்த நிவாரணம் அளிப்பதாகத் தெரிவித்துள்ளது.

ஊசிக் குற்று மருத்துவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய இறுக்கமான கட்டுப்பாடுகளை உலக சுகாதார நிறுவனம் 1983 இல் விதித்ததோடு 103 நோய்களுக்கு இந்த மருத்துவம் நிவாரணம் அளிப்பதாகவும் தெரிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து ஊசிக் குற்று மருத்துவத்தை மாற்றுச் சிகிச்சை முறையாகப் பட்டியலிட்டிருந்த அமெரிக்க அரசு அதை அமெரிக்க மருத்துவத்தின் முதன்மைப் பகுதியாகத் தரமுயர்த்தியுள்ளது. பல்லாயிரம் வருடங்களாக ஒரு சிகிச்சை முறை நிலைத்திருக்கிறதென்றால் அதில் ஒரு மகத்துவம் இருக்க வேண்டும் என்று பரவலாக ஏற்றுக்கொள்ளப் படுகிறது. இக்கட்டுரையில் பட்டியலிட்ட நாடுகளோடு ஜேர்மனி, பிரான்சு, இத்தாலி ஆகிய நாட்டவர்களும் ஊசிக் குற்றைப் பயன்படுத்துகிறார்கள். அக்குபஞ்சர் பற்றிய கற்கையும் பயிற்சியும் இன்று சீன மருத்துவக் கல்லூரிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. பெருமளவு ஐரோப்பிய, அமெரிக்க, இந்திய மாணவர்கள் மிகவும் ஈடுபாடுடன் கற்பதைப் பார்க்கலாம். மேற்கு நாட்டவர்களின் மருத்துவக் கோட்பாடுகளின் கண்ணோட்டத்தில் ஊசிக் குற்று மருத்துவத்தை விளக்கிச் சொல்வது கடினம். அவர்களுக்கு யின், யாங், ச்சி போன்றவற்றில் நம்பிக்கை ஏற்பட்டால்தான் மருத்துவம் சித்திக்கும்.

அக்குபஞ்சர் ஒரு சர்வரோக நிவாரணி அல்ல. சத்திர சிகிச்சைக்கு மாற் றாக அதைப் பயன்படுத்த முடியாது. அதேபோல் மனித உடலைத் தாக்கும் எல்லாவகை நோய்களுக்கும் அதனால் நிவாரணம் தர இயலாது. உடல் எடையைக் குறைப்பதற்கு அது உதவினாலும் ஏற்கனவே உடலில் ஏறிவிட்ட கொழுப்பை அக்குபஞ்சரால் அகற்றமுடிவதில்லை. அக்கு பஞ்சர் சிகிச்சைமுறை எளிதில் கற்றுவிட முடியாது. முதலில் சீனப்பாரம்பரிய மருத்துவத்தின் அடிப்படைகளைக் கற்றுணர வேண்டும். அதன்பின் சிறந்த ஆசிரியர்களிடம் பயிற்சி பெறவேண்டும். ஆங்கில மருத்துவம் படித்தோர் மனித உடலில் சக்தி அலைகள் சுற்றிக்கொண்டிருப்பதை ஏற்பதில்லை. யோகக் கலைபயிலும் நாம் மூச்சின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளோம். நாடி சுத்தி என்ற மூச்சுப் பயிற்சியை நாம் செய்யும்போது புத்துணர்ச்சி பெறுகிறோம். ஒலிம்பிக்ஸ் போன்ற போட்டிகளுக்கு பயிற்சி வழங்கும்போது அமெரிக்கர்கள் யோகக் கலையின் மூலாதாரமான மூச்சுப் பயிற்சியையும் வழங்குகிறார்கள். உயிரும் மூச்சும் வேறானவையல்ல. சீனர்கள் 'ச்சிகொங்' (QIGONG) என்ற பாரம்பரிய மூச்சுப் பயிற்சியைச் செய்கிறார்கள். இதனால் உடல் வலுவும் மன அமைதியும் பெறுகிறார்கள்.

ஆசிய மக்களின் வீட்டுச் சமையலில் நாளாந்திரம் பயன்படும் வெள்ளைப்பூடு, கறி

**அன்பரசு**

மஞ்சள், வெந்தயம் பற்றிய ஆராய்ச்சிகளும் மேற்கில் நடக்கின்றன. உணவோடு உடலில் சேரும் நஞ்சை மஞ்சள் வெட்டுகிறது. மலேரியா நோய்க்கு மஞ்சளில் இருந்து மருந்து தயாரிக்கலாம் என்று இந்திய விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். வெள்ளைப்பூடு பற்றிய ஆய்வுகள் ஜேர்மனி,ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளில் மிகவும் விரிவாக நடத்தப்பட்டுள்ளன. மனித ஆயுளை நீடிக்கச்செய்யும் தன்மை அதற்கு உண்டு. இரத்தக் கொழுப்பைக் குறைத்து இருதயத்தைப் பூடு பலமடையச் செய்கிறது. உயர் குருதி அழுத்த நோயை பூடு கண்டித்து சுகம் தருகிறது. ஆயுள் வேதத்தில் மகா அவுஷதம் என்று குறிப்பிடப்படுவது பூடு ஒன்று மாத்திரமே. இதயத்தின் நண்பன் என்றும் அதை அழைக்கலாம். பச்சையாகத் தின்னும் போது வெள்ளைப் பூட்டின் முழுப் பயனையும் பெறமுடியும். வெந்தயம் உடற்சூட்டைத் தணிக்க வல்லது. அதில் இரும்புச் சத்து ஏராளம் உண்டு. நீரழிவுநோயைக் கட்டுப்படுத்த வெந்தயம் உதவும். பாட்டி வைத்தியம் பற்றிய தேடல் இப்போது பல நாடுகளில் தீவிரமாக நடக்கிறது. சில புற்று நோய் வகைகளை பூடு குணப்படுத்தும் அல்லது தடுக்கும் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இருதய நோய் மலிந்த இவ்வுலகிற்கு பூடு ஒரு வரப்பிரசாதம் என்பதில் ஐயமில்லை.

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 23. 09 . 2005

மின் அஞ்சல :– weekly @ eezhanatham.com

# ஆகப் பிந்திய அழுத்தம்..!

நியுயோர்க்கில் இணைத்தலைமை நாடுகள் கூட்டிய மாநாட்டின் இறுதியில் விடுக்கப்பட்ட அறிக்கையின் ஊடாக இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பாக இந்நாடுகள் தென்னிலங்கை அரசியல் சக்திகளுக்கு சில விடயங்களை ஆழமாக வலியுறுத்த முற்பட்டிருக்கின்றன.

அதாவது நியுயோர்க்கில் கூட்டப்பட்ட இம் மாநாட்டினைத் தொடர்ந்து புலிகள் இயக்கத்தின் மீது இந்நாடுகள் பலமான அழுத் தத்தை பிரயோகிக்கப் போகின்றன என்பது போன்ற ஒரு தோற்றப் பாட்டை சிறிலங்கா அரசும் தென்னிலங்கை ஊடகங்களும் ஏற்படுத்தியிருந்தன.

ஆனால், இம் மாநாட்டின் மூலமாக இணைத்தலைமை நாடுகள் தென்னிலங்கை அரசியல் சக்திகளினுடைய இனப்பிரச்சினை தொடர்பாக மாறுபட்ட, அதேவேளை நிலையான கொள்கை இல்லாததை அவதானித்திருப்பதுடன் இச் சக்திகளின் செயற்பாடானது அமைதி வழியில் தீர்வு காணும் மார்க்கத்தை சிதைத்து விடக் கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கிறது என்பதையும் உணர்த்தியிருக் கின்றது.

அதாவது, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட் சியின் கீழ்தான் தீர்வு என்பதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை சிங்கள தேசம் தடுப்பதற்கான ஒரு வழியாக இதனைப் பயன்படுத்த முனைகின்றது என்ற யதார்த்தத்தை உள் வாங்கியிருப்பதோடு இனங்களுக்கு வழங்கவேண்டிய அதிகாரங் களை பகிர்ந்துகொள்ள இச் சக்திகளின் தயாரில்லாத நிலைப் பாட்டை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளாது என்ற நிலைப்பாட்டை இந் நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

எனவே தான் இந்நாடுகள் இலங்கையின் இனப்பிரச் சினைக்கு தீர்வாக சமஷ்டி அடிப்படையிலான தீர்வு சாத்தியப்பாடு குறித்து வலியுறுத்துகின்றன.

அத்தோடு ஒற்றையாட்சியின் கீழான இலங்கை அரசின் எந்தவொரு தீர்வுக்கும் சர்வதேச சமூகத்தின் ஆதரவோ அனுசர ணையோ கிடையாது என்பதை இந் நாடுகள் வலியுறுத்தி யிருக்கின்றன.

இதன் மூலமாக இலங்கையில் நிலவும் முரண்பாடானது பயங்கரவாத செயற்பாடல்ல என்பதை இந்நாடுகள் ஏற்றுக் கொண்டு தமிழ்மக்களுக்கு தீர்வை வழங்க சிங்கள தேசம் தயாராக வேண்டுமென்பதை இந்நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

ஒரு வகையில் இம் மாநாட்டு அறிக்கையின் மூலமாக சிங்கள தேசத்திற்கே பலமான அழுத்தத்தை இந்நாடுகள் பிர யோகித்துள்ளன எனக் கூறலாம். இது தனித்து அரச அதிகாரத்தை கையில் வைத்திருக்கும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு மட்டுமன்றி ஐக்கிய தேசியக்கட்சிக்கும் கூட இதன் மூலமாக இந்நாடுகள் சில விடயங்களை வலியுறுத்தியுள்ளன.

இந்த வகையில் ஒற்றையாட்சியின் கீழான எந்தவொரு தீர்வையும் தமிழ் மக்கள் நிராகரிப்பர் என்பதோடு ஒற்றையாட்சி என்ற முனைப்போடு சமாதான முயற்சி முன்னெடுப்பது சாத்திய மற்ற விவகாரம் என்பதோடு இம் முயற்சியானது அமைதிவழி யிலான முயற்சிகளை அடியோடு வீழ்த்தி விடும் அபாயம் நிறைந்த ஒன்றாகும்.

ஆகவேதான் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இருக்கக் கூடிய ஒரே வாய்ப்பு உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி அடிப்படையிலான தீர்வு என்ற யதார்த்தத்தை புலிகள் இயக்கம் வலியுறுத்தியிருப்பதுடன் சர்வதேச சமூகமும் வலியுறுத்தி வருகின்றது.

இதில் சிங்கள தேசம் சனாதிபதித் தேர்தலொன்றை சந்திக்க இருக்கும் சூழலில் அதிலும் தமக்கான அதிகார மையத்தை தெரிவுசெய்ய இருக்கும் சூழலில் அவர்கள் தெரிவு செய்யப் போகும் தெரிவு இலங்கையின் அரசியல் நகர்வில் தீர்க்கமான பங்கை வகிக்கப்போகிறது.

எனவே ஒற்றையாட்சி என தம்மை உளட்டிக் கொண்டு காலத்தால் தமிழ் மக்களை ஏமாற்ற முனையும் பட்சத்தில் சிங்கள தேசம் விரும்பும் ஒற்றையாட்சி மூலமான தீர்வுக்கு அப்பாலும், சர்வதேசசமூகம் வலியுறுத்தும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வுக்கு அப்பாலும் ஏற்கெனவே தமிழ் மக்கள் தமக்கான ஒரு தாயகத்தை நிறுவி வைத்துள்ளனர். இதன் பிரகாரம் ஒற்றையாட்சி சமஷ்டி என்பவற்றிற்கு அப்பால் இருதேசமே இலங்கையின் இனப்பிரச் சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

உண்மையில் நியுயோர்க்கில் இணைத்தலைமை நாடுகள் விடுத்த அறிக்கை இதனையே சிங்கள தேசத்துக்கு உணர்த்தியுள்ளது.

ஆகவே இணைத்தலைமை நாடுகளின் அறிக்கை சிங்கள தேசத்துக்கான ஆகப்பிந்திய அழுத்தம் என்பதே உண்மை.

# நியூயோர்க் மாநாடும் துணை இராணுவக் குழுக்களும்

அரசு மறைக்க முயன்ற விவகாரம் அம்பல மேறிவிட்டது. அதாவது புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு புறம்பாக உடன்பாட்டின் சரத்தை மீறுகின்ற வகையில் துணை இராணுவக் குழுக்களைக் கொண்டு புலிகள் இயக்கத்தின் மீது தாக்குதலைத் தொடுத்து சமாதான முயற்சிகளை சீர்குலைக்க முயன்ற அரசின் செயற்பாடு இப்போது சர்வதேச நாடுகள் முன் அம்பலமாகி யுள்ளது.

இறுதியாக நியூயோர்க்கில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைமை நாடுகள் கூடி விடுத்த அறிக்கையில் அரசின் இந்த செயற்பாட்டிற்கு அழுத்தமான கண்டனத்தையும் ஆட்சேபத்தையும் தெரிவித்துள்ளன.

சமாதான முயற்சியினை சீர்குலைக்கும் வகையில் புலிகள் இயக்கம் மீது தாக்குதல்கள் நடாத்தப்பட்டபோதெல்லாம் இந்த விவகாரத்தை கண்காணிப்புக்குழுவின் முன்னிலையிலும், சர்வதேச சமூகத்தின் முன்னிலையிலும் கொண்டுவரப்பட்ட போதும் சிறிலங்கா அரசு அதனை பலமாக மறுத்து வந்தது.



தின் முன் போட்டுடைத்துள்ளது.

இந்தச் செயற்பாட்டின் மூலம் இதுவரை காலமும் புலிகள் இயக்கத்தின் மீது நடாத்தப்பட்ட பல தாக்குதல்களை ஒரு முறைப்பாடாகக் கண்காணிப் புக்குழு ஏற்றுக்கொண்டதே தவிர அவற்றை அரசு மேற்கொண்ட யுத்தநிறுத்த மீறல்களாகக் குறிப்பிடப்பட வில்லை.

ஆனால், தற்போது அரச கட்டுப்பாட்டில் அரசின் அங்கீகாரத்துடன் இக்குழுக்கள் இயங்குகின் றன என்ற யதார்த்தத்தையடுத்து புலிகள் இயக்கம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் யாவும் யுத்த நிறுத்த மீறல்களாக ஏற்றுக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்தைத் தோற்றுவித்துள்ளன.

உண்மையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் யுத்தநிறுத்தத்திற்கு ஆழமான ஆபத்தை இந்தத்துணைக்குழுக்கள் மூலமாக அரசு ஏற்படுத்திவந்தது.

இத்துணைக்குழுக்களின் செயற்பாடுகளி னால் புலிகள் இயக்கத்தின் அரசியல் போராளிகளின் செயற்பாடுகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் நிறுத் தும் அளவுக்கு நிலைமையை ஏற்படுத்தியதோடு கட்டியெழுப்பப் படவேண்டிய நம்பிக்கைக்குப் பதிலாக சந்தேகங்களையே தோற்றுவித்து வந்தது.

உண்மையில் அரசு என்ற வகையில் சிறிலங்கா அரசு சமா தான வழியில் தீர்வுகாண்பதற்கான நம்பிக்கையைக் கட்டியெழுப்பு வதற்குப் பதிலாக இராணுவ ரீதியாக புலிகள் இயக்கத்தை சிதைக்கவும் பலவீனப்படுத்தவும் முயன்று வந்தமை இன்று அம்பல மாகியிருப்பதோடு, அரசின் இந்த செயற்பாட்டை சர்வதேச நாடுகள் கண்டிக்கவும் செய்துள்ளன.

இந்த நிலையில் அரசு சமாதான தேவதை வேடம் பூணும் அபத்த நாடகம் உலகின் முன் இனி ஏறாது என்ற கசப்பான பாடத்தை சிறிலங்கா அரசால் உள்வாங்கிக்கொள்ள நிச்சயம் கடினமாகவே இருக்கும்.

இதன் மூலம் வடக்கு கிழக்குப் பிரதேசங்கள் எங்கும் நடைபெறும் அநாமதேயமான தாக்குதல்கள் யாவற்றையும் புலிகள் இயக்கம் மீது சுமத்தி புலிப்பயங்கரவாத நடவடிக்கையாக சித்தரித்து வந்த அரசு இதுவரை இந்தத் துணை இராணுவக் குழுக்களை கொண்டு மேற்கொண்ட தாக்குதல்களை அரச பயங்கரவாதமாக ஏற்றுக்கொள்ள முன்வருமா?

உண்மையில் அரசின் இந்தத் தாக்குதல்களை எவர் ஏற்றுக்கொண்டால் என்ன ஏற்றுக்கொள்ளா விட்டால் என்ன அரச பயங்கரவாதமாகவே சர்வதேசத் தின் முன் அம்பலமேறியுள்ளது.

இந்தச் சமாதான காலத்தில் இலங்கையைப் பொறுத்தவரையில் சிறிலங்கா அரசே அரச பயங்கர வாத நடவடிக்கை மூலமாக பயங்கரவாதத்தை வளர்த்து வந்துள்ளது என்ற உண்மை புலப்பட்டு நிற்கிறது.

ஆயினும் சிறிலங்கா அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்கள் அரசினால் நன்குபராமரிக்கப்பட்டு அரசினால் புலிகளுக்கு எதிரான தாக்குதல்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன என்பது மீண்டும் மீண்டும் வலியுறுத்தப் பட்டே வந்தது.

ஆனால், கருணா குழு என்ற பெயரில் எவருமே தங்கள் கட்டுப்பாட்டுப்பகுதிகளில் இல்லை யென சிறிலங்கா இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் தயா ரட்ணாயக்கா மற்றும் சிறிலங்கா சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால போன்றோர் தெரிவித்துவந்தனர்.

இந்நிலையில் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவுடன் கருணாகுழுவினர் ஒரு சந்திப்பினை மேற்கொண்டதுடன் அதனை தமக்குக் கிடைத்த அங்கீகாரமாகவும் வெளியில் காட்ட முயன்ற தன் விளைவு “பொல்லுக்கொடுத்து அடிவாங்கிய கதையாக” சிறிலங்கா அரசு மாட்டிக்கொண்டது.

கருணா குழுவுடனான சந்திப்பைக் கண்காணிப்புக்குழு வெளிப்படுத்தாத நிலையில் தாமே அதனை வெளிப்படுத்தியதன் மூலம் அரசகட்டுப் பாட்டின் இத்துணைக்குழுக்கள் நன்கு பராமரிக்கப் படுகிறார்கள் என்பதை கண்காணிப்புக்குழு சர்வதேசத்

சிறி. இந்திரகுமார்



# தேர்தல் வெற்றிக்கான அரசியல் துஷ்பிரயோகம்



சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தலுக் கான திகதி ஒருவாறாக அறிவிக்கப்பட்டு விட்டது. ஒரு சனாதிபதியின் பதவிக்காலம் எத்தனை வருடங்கள் என வரையறுக்கப் பட்டிருக்கின்றபோதிலும் சிறிலங்காவில் அவ்வாறான வகையில் அதாவது குறிப்பிட்ட காலத்தில் தேர்தல்கள் நடைபெறாமையால் எப்பொழுது தேர்தல் என்பதில் பெரும் இழுபறி நிலை தோன்றியது.

அதிலும் இம்முறை சனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு இறுதியிலா அடுத்த ஆண்டின் இறுதியிலா என்பது குறித்த விவாதம் கடந்த ஆண்டிலேயே ஏற்பட்டுவிட்டமையானது நீண்டதொரு சர்ச்சையை ஏற்படுத்தியதுடன் இறுதியில் நீதிமன்றம் வரை விவகாரம் செல்ல வழிவகுத்துவிட்டது.

அதன் காரணமாக தேர்தல் நடத்து வதற்கான நிதி ஒதுக்கீடுகூடக் கிடைக்காத நிலை தேர்தல் திணைக்களத்திற்கு ஏற்பட்டது. எனினும் நீதிமன்றத் தீர்ப்புக் காரணமாக தேர்தல் திகதி இப்பொழுது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் இந்தத் தேர்தலை நடத்த விடாது செய்வதற்கும் நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரும் கூட அரசிய லமைப்பை அவமதிக்கும் வகையில் சிறிலங்காவின் ஆட்சியாளா ரும் சரி, கட்சிகளும் சரி எத்தனை தடவைகள் நடந்து கொண்டனர் என்பதைப் பார்த்தால், இவர்கள் எல்லாம் எத்தகையவர்கள் என் பதைப் புரிந்துகொள்ள முடியும்.

முதலாவதாக இந்தத் தேர்தல் எப்பொழுது நடத்தப்பட வேண்டும் என்பது குழறுபடியாகப் போனதற்கு சிறிலங்காவின் பிரதம நீதியரசர் முன்னிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க செய்து கொண்ட சத்தியப்பிரமாணம் காரணமாக அமைந்தது. இந்தச் சத்தியப்பிரமாணமானது சட்டபூர்வ மானதா? அல்லது சட்டவிரோதமானதா? என்பது குறித்து அவர்களுக்கு அன்றே தெரிந்திருக்க வேண்டும். குறைந்தபட்சம் அவ்வாறு செய்வதில் சிக்கல்கள் இருப்பதை அவர்கள் புரிந்து கொண்டிருந்தல் வேண்டும்.

அவ்வாறு இல்லாவிடின் அதனை இரகசியமாகச் செய்திருக்க வேண்டிய தேவை எழுந்திராது. அதனை வெளிப்படையாக விழாவாகவே செய்திருக்கலாம். அல்லது முதலாவது பதவிக்காலம் ஆறாண்டுகள் பூர்த்தியானதும் சத்தியப்பிரமாணத்தைச் செய்து கொண்டிருக்கலாம்.

எனவே நாட்டின் உயர் பதவியில் இருந்த வரே அவ்வாறு நடந்து கொள்ள முற்பட்டதுடன் இறுதியில்தான் இது குறித்த விளக்கத்தை உயர் நீதி மன்றத்திடம் கோர முயன்றார்.

தேர்தல் இவ்வருட இறுதிக்குள் நடத்தப்பட வேண் டும் என அறிவிக்கப்பட்ட பின்னரும் கூட தேர்தல் திகதியை அறிவிப்பதற்கு மட்டுமட்டான காலஎல்லை எடுத்திருக்கிறது. இதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாமை, நீதிமன்றத்தீர்ப்புக் குறித்து தேர்தல் ஆணையாளருக்கு ஏற்பட்ட குழப்பம் என்பன காரணமாக அமைந்ததாகக் கூறப்படுகிறது.

இப்பொழுது தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டாயிற்று. இனிமேல்தான் இவர் களின் சட்டவிரோதச் செயல்கள் களை கட்டப்போகின்றன. தேர்தல்களை நடத்துவதற்கு வசதியாக தேர்தல் ஆணையாளருக்கு அரசியலமைப்புச் சட்டரீதியாக பல அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அதேவேளை அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தச்சட்டத்திற்கு அமைய தேர்தல் ஆணையாளருக்கு சுயாதீன தேர்தல் ஆணைக் குழுவுக்கு உள்ள அதிகாரங்கள் வழங்கப்பட் டிருக்கின்றன.

இதனை முழுமையாகப் பயன்படுத்து மாறு தேர்தல் ஆணையாளருக்கு இரு பிரதான கட்சிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளன. ஆனால் தேர்தல் சட்டங்களைக் கடைப்பிடித்து நடக்க இவ் இரு கட்சிகளும் முன்வருமா? என்பது சந்தேகமே. உதாரணமாக தேர்தல் பிரசாரங் களுக்கு பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்தக் கூடாது என்பது விதிமுறை. ஆனால் ஆளும் கட்சி அது எந்தக் கட்சியாக இருந்தாலும் அதனைக் கடைப்பிடிப்பதில்லை.

சிறிலங்காவிலுள்ள இரண்டு அதிகார மையங்களிலும் ஒரே கட்சி இருக்கும்போது இதனைத் தவிர்ப்பதனால் அவர்களாகவே மனச்சாட்சிப்படி நடந்து கொள்வதன் மூலம் மட்டுமே இதனைத் தவிர்க்க முடியும். ஆனால் அவ்வாறான பெருந்தன்மை இவற்றுக்கு இல்லை.

இந்நிலையில் நாடாளுமன்றத் தேர்த லாயின் சனாதிபதிக்குரிய அதிகாரங்களும் சனாதிபதித் தேர்தலானால் நாடாளுமன்றத் துக்குரிய அதிகாரங்களும் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன.

கடந்த பொதுத் தேர்தலின்போது எதிர்க்கட்சி ஆட்சியிலிருந்தபோதும் ஊடகத் துறை, உள்நாட்டலுவல்கள், பாதுகாப்பு மூன்று அமைச்சுகளும் பறிக்கப்பட்ட பின்னரே பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. இதற்குக் காரணம் இவை தேர்தலில் அதிகார துஷ்பிரயோகத்துக்கு மிகவும் அவசியமாக இருப்பதனாலாகும்.

ஆட்சிபீடம் ஏறியபின் அவர்கள் சட்டத்துக்குப் புறம்பானவகையில் செய்கின்ற அதிகாரத் துஷ்பிரயோகங்கள் ஒருபுறமிருக்க, நாட்டில் சனநாயகம் நிலவுவதாகச் சாதிக்கத் துடிக்கும் இவர்கள் அதன் உச்சக்கட்டமான தேர்தலின் போதாவது அவற்றைத் தவிர்ப்பதாகத் தெரியவில்லை.

அதாவது தமது சொந்த மக்கள் எனக் கூறிக்கொள்ளும் சிங்கள மக்களுக்காகத் தாம் எவ்வளவோ தியாகங்களைச் செய்வதாகக் கூறிக் கொள்ளும் இவர்கள் இந்த விடயத்தி லாவது மக்கள் தமது விருப்பத்தைச் சரியான முறையில் வெளிப்படுத்த வழிவகுப்பதில்லை.

இந்நிலையில் இவர்களின் ஒடுக்கு முறைக்குள் சிக்கியுள்ள தமிழ் மக்கள் தமக்கு இவர்கள் நியாயம் வழங்குவார்கள் என்றும் தமது சனநாயகக் குரலுக்கு செவி சாய்த்து நீதி வழங்குவார்கள் என்றும் எவ்வாறு நம்பமுடியும்?

தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட ஆழிப் பேரலை அழிவுக்கு நிவாரணம் வழங்க அமைக் கப்பட்ட பொதுக்கட்டமைப்பை அரசியலமைப் புக்கு முரணானது எனக் கூறி தடைசெய்யப் பட்டிருக்கிறது. ஆனால் அரசியலமைப்புக்கு முரணாக பல்வேறு துஷ்பிரயோகங்கள் செய்து தெரிவு செய்யப்படும் வரை அனுமதிக்கிறது. இவ்வாறானதொரு சூழலில் சிங்கள அரசியல் வாதிகளில் எவராயினும் ஒருவர் நீதியான அரசியல் தீர்வொன்றை தமிழ் மக்களுக்கு வழங்குவர் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

**வேலவன்**

## நேர்நோக்கு

# பொலிசாரின் கைதும் கண்காணிப்புக் குழுவும்



மன்னார் பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதியின்றி உள்நுழைந்த சிறிலங்கா காவல்துறையைச் சேர்ந்த மூவர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூன்று காவல் துறையினரும் தமிழீழ காவல்துறையால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அத்தோடு அவர்கள் தமிழீழ நீதிமன்றில் பாரப்படுத்தப்பட வுள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதே சத்திற்கு அரச படையினர் நுழையும் பட்சத்தில் புலிகளிடம் அனுமதி பெற்றே வரவேண்டும் என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த நிலையில் தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் சிறிலங்கா காவல் துறையினர் உரிய வகையில் பராமரிக்கப்படுவ துடன் அவர்களது உறவினர்கள் பார்வையி டவும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த காவல் துறையினர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர்களை பார்வையிட இலங்கை யுத்தநிறுத்த கண் காணிப்புக் குழு அனுமதி கேட்டதற்கிணங்க புலிகளால் அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது.

இதேவேளை இக்காவல்துறை யினரை விடுவிப்பதற்காக சிறிலங்கா அரசு பல்வேறு வகையிலும் முயன்று வருவதுடன் கண்காணிப்புக் குழுவிற்கு அழுத்தத்தையும் கொடுத்து வருகிறது.

இதற்கமைய இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு காவல் துறை யினரை விடுவிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

கண்காணிப்புக்குழுவின் இந்த முயற்சியானது அதன் பணி நிலை சார்ந்தது என்ற வகையில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது.

ஆனால் கைது செய்யப்பட்ட காவல் துறையினர் விவகாரத்தில் கண் காணிப்புக் குழு புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருக் கும் நடைமுறைகளுக்கு அமைவாகவே தனது பணியினை ஆற்றவேண்டியது அவசியமாகும்.

ஏனெனில் இங்கு ஒரு நடைமுறை அரசின் செயற்பாடு இருப்பதோடு அதன் ஒரு அங்கமாக காவல்துறை, நீதித்துறை என்பன இயங்கி வருகின்றன.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சிவில் குற்றங்கள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளை விட மிகக்குறைவாக இருப்ப துடன் மக்கள் காவல் துறையின் செயற்பாடு களையும் தமிழீழ நீதித்துறையின் செயற்பாடு களையும் மதித்தும் ஏற்றும் நடந்து வருகின்றனர்.

> ***சிறிலங்கா காவல்துறையினரை விடுவிப்ப தற்கு கண்காணிப்புக் குழு மேற்கொள்ளும் முயற் சியைப் போன்றே கைது செய்யப்படும் புலிகள் இயக்க போராளிகளின் நடவடிக்கையிலும் இருக்கவேண்டும்.***
>
> ***ஆனால் இலங்கை கண்காணிப்புக் குழு அவ்வாறு செயற்படுவதாக இல்லையென்றே கூற வேண்டும். ஏனெனில் யாழ்ப்பாணத்தில் வைத்து கைது செய்யப்பட்ட கோபி என்ற போராளியின் நடவடிக்கையில் கண்காணிட ,க் குழுவின் நடவடிக் கையானது அதிருப்த தரக்கூடிய வகையிலான தாகவே உள்ளது.***

அந்த வகையில் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் அத்துமீறி நுழைந்த சிறிலங்கா காவல்துறையினரை தமிழீழ நீதிமன்றில் பாரப்படுத்தப்பட இருக்கும் சூழலில் அதற்கு மதிப்பளிக்க வேண்டிய கடப்பாடு கண்காணிப்புக்குழுவுக்கு உண்டு.

ஆனால் இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு பொலிசாரை விடுவிப் பதற்காக எடுக்கும் நடவடிக்கையாகத் தெரிவிக் கும் கருத்துக்கள் புலிகள் இயக்கத்தை கண் காணிப்புக் குழு கண்டிப்பது போன்றதாகத் தென்படுகிறது.

உண்மையில் சிறிலங்கா காவல் துறையினரை விடுவிப்பதற்கு கண்காணிப் புக்குழு மேற்கொள்ளும் முயற்சியைப் போன்றே கைது செய்யப்படும் புலிகள் இயக்க போராளிகளின் நடவடிக்கையிலும் இருக்க வேண்டும்.

ஆனால் இலங்கை கண்காணிப் புக்குழு அவ்வாறு செயற்படுவதாக இல்லை யென்றே கூறவேண்டும். ஏனெனில் யாழ்ப் பாணத்தில் வைத்து கைது செய்யப்பட்ட கோபி என்ற போராளியின் நடவடிக்கையில் கண் காணிப்புக் குழுவின் நடவடிக்கையானது அதிருப்தி தரக்கூடிய வகையிலானதாகவே உள்ளது.

ஒருவேளை கோபி கைதானது சிறிலங்கா நீதிமன்றத்தோடு தொடர்புபட்டது என்ற வகையில் தங்களால் எதுவும் செய்ய முடியாது என தெரிவிக்கலாம்.

ஆனால் அரச கட்டுப்பாட்டிற்குள் அரசியல் பணிகளுக்காகவும் சுய தேவை களுக்காகவும் போராளிகள் சென்று வருவ தானது அரச சட்டங்களுக்கு அமைவாக இல்லை. பதிலாக புரிந்துணர்வு உடன்படிக் கையின் பிரகாரம்தான் போராளிகள் சென்று வந்தனர்.

அத்தகையதொரு நிலையில் போராளிகளின் கைது விவகாரத்தில் இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது அவசிய மானதாகும்.

ஆனால் கோபி விவகாரத்தில் இது நடைபெறவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. அத்தோடு யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட கோபி கொழும்புக்குக் கொண்டு சென்று நீதிமன்றத்தில் வழக்கு நடாத்தப்பட்டமையானது கோபியை விடுதலை செய்யாது இழுத்தடிக்க வேண்டுமென்ற அரசின் நடவடிக்கையேயாகும்.

இதே நேரம் இத்தகையதொரு நடவடிக்கை தொடர்பாக அரசிற்கு எந்த வகை யில் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப் புக்குழு விடயத்தை கையாண்டுள்ளது.

எனவே கைது செய்யப்பட்டிருக்கும் சிறிலங்கா காவல் துறையினரின் நடவடிக் கையையும் கைது செய்யப்பட்டிருக்கும் போராளிகளின் விவகாரத்தையும் நேர்கோட்டில் வைத்து கண்காணிப்புக்குழு அணுக வேண்டியது அவசியமாகும்.

**புகழன்**

# காரசாரம்

# பெண்களுக்குப் பிரச்சினைகள் இன்னும் தீர்ந்து விடவில்லை..!

அனைத்துலக மகளிர் நாள் சுமார் ஒரு நூற்றாண்டு களாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழீழ மகளிர் எழுச்சிநாள் பத்து வருடங்களுக்கு மேலாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. ஏதடா மகளிர் மகளிர் என்று மறுபடியும் ஆரம்பித்து விட்டாளே என்று நீங்கள் சலிப்பது நன்றாகவே எனக்குத் தெரிகிறது. இப்படித்தான் உலகம் எந்த ஒன்றையும் புதிதாகச் சொல்ல முனைகிறது.

ஆனால் புதுமைக்கும் பழைமைக்குமிடையே நடக்கும் போராட்டமே வாழ்க்கையின் அர்த்தமாகவும் இருக்கிறது. அதுதான் உண்மை. பெண் என்ற விடயம் பற்றி, புராண இதிகாச, சங்க, புதுக்கவிதை காலம் வரை ஏன் அதைக் கடந்தும் பேசப்படுகிறது.



ஏன்? ஒவ்வொரு காலமாற்றத்தையும் ஏற்றுக்கொண்டு மாறிவரும் பெண்ணினம் ஆரம்பகாலம் தொட்டு அனுபவித்து வரும் அவமானங்கள், சித்திரவதைகள், கொடுமைகள் கொஞ்சநஞ்சமல்ல. வினோபாஜி, பாரதி, பாரதிதாசன் போன்றோர் பெண்களில் கணவனை இழந்த இளம் பெண்களின் மறுவாழ்வுக்காகவே நிரம்ப உபதேசித்தனர்.

பெண்களின் முன்னேற்றம் சாத்தியப்படாதவரை சமுதாய முன்னேற்றமோ அதனூடான தேச அபிவிருத்தியோ சாத்தியமில்லை. ஆக, பெண்களைப் பற்றி, புராணம் சொல்லி யிருக்கிறது என்பதற்காக சங்க காலத்தில் பேசாமல் விட்டதா என்றால், இல்லை.

சரி சங்க காலத்தில் பேசியது தானே என்று பின்வரும் காலங்களில் பேசாமல் விட்டாயிற்றா? என்றால், இல்லை. சரியாகச் சொல்லப்போனால பெண்களுக்கென்றே பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆரம்பிக்கப்பட்டு வாராந்தம், மாதாந்தம் வந்து கொண்டிருக்கின்றன.

இவை தவிர பால் சமத்துவம் பற்றி ஐ.நா ஸ்தாபனத்தின் ஆலோசனையின் பேரில் பட்டி தொட்டியெங்கும் கருத்தூட்டல் நடைபெற்றுக்கொண்டும் வருகிறது. தமிழீழத்திலும் இது நடைபெறுகிறது. இதை அண்டிய நிகழ்ச்சியாக, மகளிர் அமைப்புகளின் சங்கம நிகழ்வுகள் கூட தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. காரணம் என்ன?

'அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும்' என்பதுதான். என்றாலும் தமிழீழப் பகுதி நிர்வாக மையங்களில் பெண்கள் அதிகரித்து வருகின்றமை ஒரு மகிழ்ச்சிக்குரிய விடயம். சேரன் சுவையகம் உட்பட சந்தைப் புலால் விற்பனைப் பகுதி வரை பெண்களைக் காணக்கூடியதாக உள்ளது. இவற்றைவிட, மேசன்பயிற்சி, தச்சுப் பயிற்சி எனப் பெண்கள் இறங்கி இருக்கிறார்கள்.

இந்தச் செய்திகளெல்லாம் அநேகமான ஆண்களுக்கு, ஆம் ஆண்களுக்குத்தான் இடி விழுத்திய செய்திகள்தான். பெண்ணிய நோக்கிலான கருத்தின் அடிப்படை எதிரிகள் ஆண்கள் அல்ல ஆணாதிக்கம் தான் என்பதில் எவ்வித மாற்றமுமில்லை.

ஆனால் ஒரு அடிப்படை நோக்கில் பார்த்தால் பெண்கள் வெளிப்போந்து வேலை செய்வதும், அதிலும் அவர்கள் உந்துருளிகளில் சுற்றித்திரிவதும் சிலருக்குப்பிடிக்கவில்லை. பிடிக்கவில்லை சுத்தமாகப் பிடிக்கவில்லை. "பொம்பிளையளெண்டா அடக்க ஒடுக்கமா வீட்டில இருங்கோடி'' என்று சொல்பவர்கள் இன்றும் உள்ளனர். பெண்கள் 'ஆட்லறி' இயக்கலாம், விண்வெளிக்குப் போகலாம். விஞ்ஞானியாகலாம், என்பதெல்லாம் விட வேலைக்குப் போக வேண்டியது மிகமுக்கியம். கலியாணத்துக்குப் பெண்பார்க்கும் போதே வேலைக்குப் போகும் பெண்ணாகப்பார்க்கிறார்கள். காரணம் உழைப்பு மட்டுமல்ல, ஆண்கள் சுயேச்சையாக திரியலாம் என்பதுதான்.

ஒருவர் தன்மகனுக்குப் பெண் பார்க்கச் சொன்னார். ஓரளவு ஆட்கள் குறைந்த குடும்பம், வேலைக்குப் போகும் பெண், கடைசிப் பெண்ணாக இருப்பது நலம் வீட்டிலேயே பெற்றாருடன் இருக்கட்டும், வயசு இருபத்தைந்துக்கு மேற் படாமல், அழகான நல்ல குடும்பமாகப் பாருங்கள். ஏனென்றால் மகன் வீட்டுக்கு வரப்பிந்தினாலும் பிள்ளைக்குத்துணையிருக்கும் என்றார். இன்னும் பெண்களுக்கு பிரச்சினை தீரவில்லை என்பதை விட பெண்களின் பிரச்சினை அதிகரித்து விட்டது என்பதே சரி.

இன்று அலுவலகம் செல்லும் பெண்களுக்கு எந்த வகையிலும் பாதுகாப்பில்லை. எல்லா வகையான அவமானங்களையும், அவள் இதுவரை காலமும் வீடுகளில் அனுபவித்ததை விட, அதிகமாக அனுபவித்துக்கொண்டுதான் வருகிறாள்.

பாதையில் போகும் போதும், பஸ்ஸில் பயணிக்கும் போதும், அலுவலகங்களிலும், அவமதிக்கப் படுகிறாள். அவளுடைய சுயமரியாதையைக் குத்திக்கிளறிக் காயப் படுத்த பலர் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு கிராமத்திலிருந்து இரண்டு இளம் பெண்கள் தனியார் கல்வி நிலையத்துக்கு ஒரு மிதிவண்டியில் போவது வழக்கம். ஒரு பெண் மிதிவண்டியை செலுத்த மற்றப் பெண் பின் இருக்கையில் இருந்து பயணம் செய்தாள். இரண்டு இளந்தாரிகள் பின்புறமாக வந்து பின் இருக்கையில் இருந்து பயணஞ் செய்த பெண்ணை தட்டி விட்டு சென்றனர். திடுக் கிட்டு மிதிவண்டியிலிருந்து குதித்த பெண் திரும்பிப் பார்த்தால், விசிலடித்தபடி அவர்கள் இவர்களைப் பார்த்தபடி போனார்கள். இன்னுமொரு பெண் தன் அனுபவத்தைச் சொன்னாள்.

நான் வேலையிலிருந்து மாலை ஐந்து மணிக்கு வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தேன். ஒரு மிதிவண்டியில் இருவர் எனக்கு முன்னே போய்க்கொண்டிருந்தனர். நான் உந்துருளியில் சென்றதால் அவர்களது வேகத்துக்கு அளவாகப் போக முடியாது. அவர்களை விலத்த நான் முயன்றபோதெல்லாம் அவர்கள் நெளிந்து நெளிந்து என்னை முந்த விடாது தடுத்தனர். நான் ஒரு கட்டத்தில் உந்துருளியை நிறுத்திவிட்டு ஏன் இப்படிச் செய்யிறியள் என்று கேட்டேன்.

"நாங்கள் அப்படித்தானடி செய்வம், நீ வாயப் பொத்திக் கொண்டு போடி" என்றான் அவன் எனக்கு. ''நானென்ன உன்ர வீட்டாளா வாடி போடியெண்டு கதைக்கிறாய்'' என்றேன். அதற்கு அவன் சொன்ன வார்த்தையை வாயால் எனக்குச் சொல்ல முடியாது. சொன்னாலும் நான் எழுத முடியாது.

"ஏன் பிள்ளை நீர் படிச்சநீர் நீராவது காவல்துறைக்கு போயிருக்கலாமே" என்றேன்.

அண்டைக்கு அவனென்ர கையப்புடிச்சு இழுத்தாலும் நாங்களொண்டும் செய்யேலாது! என்றாள்.

எப்படிப் பார்த்தாலும் பெண் ஒரு குடும்பத்தின் மதிப்புக்குரியவள். ஒரு பெண்ணை அவமதிப்பது அந்தப் பெண் சார்ந்த குடும்பத்தை அவமதிப்பதாகும். அவள் சார்ந்த இனத்தை அவமதிப்பதாகும். இதற்கெல்லாம் பயந்து அவள் வீட்டுக்குள் முடங்கிவிட வேண்டும் என்று எதிர்பார்க்கும் அயோக்கியத்தனம் ஒரு போதும் வெல்லப் போவதும் இல்லை. பெண்கள் பற்றிப் பேசப் பேசப் பேச இன்னும் இருக்கிறது. அது நீங்கள் உளரீதியாகத் திருந்தும வரை தொடரும். நான் யாரைச் சொல்கிறேன் என்றால் தொப்பி அளவானவர்களுக்கு மட்டும்.

-மாயா-



## விசுக்விசுக் விசாலாச்சி

மாதன முத்தா மாதன முத்தா எண்டு ஒரு பெரியவர் இருந்தார். ஊருக்குள்ள என்ன பிரச்சினை வந்தாலும் அவர்தான் தீர்த்து வைப்பார். ஆனா அவர் நடந்து திரியவே மாட்டார். எங்க போனாலும் ஒரு யானையில ஏறித்தான் போவார். பின்ன, அந்த ஊருக்க ஒரு வீட்டில ஒரு பொம்பிளை தோசை சுட்டாள். சுட்டு முடிய மாப்பானைக்குள்ள தண்ணிய ஊத்தி அதைக் குடத்தடியில முத்தத்தில வைச்சா. அப்ப அங்க வந்த ஒரு கன்றுக்குட்டி மாப்பானைக்க கிடந்த தண்ணியக் குடிக்க பானைக்குள்ள தலைய விட்டுது. தண்ணி அடியில போகப்போக தலையும் உள்ளுக்க போட்டுது.

பிறகு தலைய வெளியால எடுக்க முடியாமல் கன்றுக்குட்டி ஓடுப்பட்டுத்திரிய வீட்டுக்காறருக்கு ஒண்டும் விளங்கேல்ல. என்ன ஜே.வி.பிக்க தலைய விட்ட சுதந்திரக் கட்சிமாதிரி ஓடுப்படுது. பானை களருதுமில்ல. கண்டு நிக்குதுமில்ல. இப்பதான் மாதனமுத்துவின்ர நினைவுவருது. ஓடிப் போய் மாதனமுத்தாவ கூட்டிக்கொண்டு வந்தினம். ஐயா யானையிலதான் வாறார்.

ஆனா வீட்டுக் காறன்ர கண்டுக் குட்டி வீட்டுக்குப் பின்னால தோட்டத்துக்க நிக்குது. மாதனமுத்தா அதைப் பார்த்தாத்தான் தீர்ப்பு வழங்குவார். அவற்ற யானை போற அளவுக்கு கதவு காணாது. பின்ன மதிலை உடைச்சு யானையோடு மாதன முத்தாவை உள்ளுக்குக் கூட்டிக்கொண்டு போயினம். உள்ளுக்க போன மாதனமுத்தா என்ன செய்யவேணும் என்று கேட்டார். "கண்டையும் பானையையும் தனித்தனியே எடுக்கவேணும்" எண்டு சொல்லுது சனம்.

"ஓ அப்படியா எடு கத்தி வெட்டு கண்டின்ர கழுத்த" எண்டார். வெட்டியாச்சு. பிறகும் வீட்டுக்காறி கையைப்பிசைகிறாள். "என்ன?" பானைக்குள்ள கண்டின்ர தலை..? எண்டாள்."பானைய உடை" எண்டார் மந்திரி. இப்ப தலை வெளியால வந்துட்டுது. ''மாதன முத்தாகே ஜயவேவா!!?!'' சனம் வணங்கி விடைபெற்றுக்கொண்டு போகுது. பின்ன-எம்பிலிப்பிட்டிய புதைகுழியத்தோண்டி தென் மாகாணசபைத் தேர்தல்ல கதாநாயகியாகி சமாதானமில்லாத நாடு சவக் கிடங்குக்குச் சமமெண்டு விளாசி சனாதிபதித் தேர்தல்ல நிண்டா சமாதானத்தைக் கொண்டுவாறனெண்டு வந்துகுறைஞ்சபட்சம் சாமான் சக்கட்டுக்களைக்கூட தமிழருக்கு அனுப்பமாட்டாம, மதிலை உடைச்சு விட்டா-போதாததுக்கு-சமாதானத்த மெல்லக் கழட்டிப்போட்டுடைக்காம எடுக்கத் தெரியாம சமாதானத்துக்கான யுத்தமெண்டு கண்டை வெட்டி பானையை எடுக்கப் பார்த்தா. பிறகு கண்டும் போய், பானையும் போய், ம்... அதெல்லாம் பழைய கதை எப்பிடியோ இப்ப காலமும் போய், ஒரு கரை கண்டிட்டுது. பிறகென்ன கடைசி, கடைசி எண்டு ஐ.நா. சபையில கதைப்பமெண்டு போயிருக் கிறா அம்மா.

என்னதான் மகிந்தரோட சமாதானத்துக்கு எதிரான நடவடிக்கைக்கு போயிட்டியே எண்டு ஒப்பாரி வைச்சாலும், ஐ.நா.சபை ஒலிவாங்கியக் கண்ட உடன ஒரு நப்பாசை. இறுதியா என்ர இனத்தின்ர குரலா ஒலிக்கவேணுமெண்ட துடிப்பு. தானாடா விட்டாலும் சதையாடுமெண்டு சொல்லுவினமே அந்தமாதிரி. கக்கி விட்டாவே கண்டத்தில உள்ளதெல்லாம். பயங்கரவாதத்தை ஒழிக்க எல்லாநாடுகளும் சேர்ந்து பணியாற்றவேணும் எண்டு ஒரு வேண்டுகோள் விட்டு பாலுக்குங் காவல் பூனைக்குந் தோழனெண்டதை- அதாவது சமாதானத்திலயும் பற்று, சண்டையிலயும் ஆசை.

ம்... இந்த ஆசை, தோசை, அப்பளம், வடையெல்லாம வித்துத்தானே இலங்கை இப்ப விடியாமூஞ்சியாப் போச்சு. இன்னுமின்னும், இருக்கிற கொஞ்ச நாளைக்குள்ள நாலா பக்கமும் கதைச்சு நல்ல மனிசியெண்டு பேரெடுக்க ஒழுங்கு பண்ணுறா ஏலுமே. புலியளெல்லாம் சண்டைக்கு ஆயத்தமாத் திரியினம். என்ர அங்கிளையும் அவைதான் கொண்டது. எப்பிடியாவது எல்லாருமா இந்தப் பயங்கரவாதத்தை ஒழிச்சுக்கட்டவாங்கோ எண்டு புலம்பி முடிச்சிருக்கிறா. நீங்களாச் சொல்லுங்கோ எப்பிடி இந்த சிங்கள அரசாங்கத்தையும் அரசியல்வாதியளையும் நம்பி இறங்கிற... ங. தன்கையே தனக்குதவி எண்டமாரி நம்ம நம்ம பாட்டை நாங்கள் பாக்கவேணும்.

அக்காமாறி தம்பி மாறி ஆளுக்கொருகதை கதைச்சதுபோய் ஐ.நா. சபையில பேசினதோட அம்மா மனமுடைஞ்சுபோனா... பத்திரிகைக்காறரைத்தான் சந்திச்சு என்ன சொல்லுற. மகிந்தர் செய்த மாயத்தை சொல்லவோ, சுனாமிக் கட்டமைப்பின்ர சோகத்தச் சொல்லவோ, ஜே.வி.பியோட வச்ச உறவச் சொல்லவோ. ஓய்வெடுக்க முன்னம் ஒருக்கா தன்ர காலத்தில ஏதாவது ஒழுங்காச் செய்து முடிச்சனோ எண்டு யோசிச்சா... எங்க, பதினொரு வரியமும் கரி பூசினது தான் கண்ட மிச்சம்.





# விரிந்த உலகின் குறுகிய மனப்பான்மை

ஞாலவன்

★★★★★ இதன் காரணமாகவேயே அழகாக சோடிக்கப்பட்ட "உதவித்திட்டங்கள்'' பெரிதாக முழக்கப்படுகின்றன. சுரண்டுபவர்களே ரட்சகர்களாகவும் தங்களை அரங்கேற்றிக்கொள்கின்றார்கள். என்ன ஒரேயொரு வேறுபாடு : உண்மையான பாத்திரம் திரைமறைவிலும், பகட்டுக்காகப் பாவனைசெய்வது வலு பிரபல்யமாகவும் அரங்கேற்றப்படுகின்றன. ★★★★★

அண்மையில் ஸ்கொட்லாந்தின் தலைநகரமாகிய எடின்பேர்க்கில் G-8 எனப்படும் செல்வந்த நாட்டுப்பிரதிநிதிகளின் சந்திப்பு நடந்தது. இதை ஒட்டி இதற்கு முன்னதாகவே மேற்கு-ஐரோப்பிய நாடுகளின், தலைநகரங்களிலும், தென்னாபிரிக்காவிலும் ஆபிரிக்க நாடுகள் முகங்கொடுக்கும் கடன்சுமை பணக்கார நாடுகளினால் குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் பரவலான மக்கள் பேரணிகள் நிகழ்ந்தேறியிருந்தன.

வளர்ச்சி அடைந்த நாடுகளின் அரச அங்கீகாரத்துடன் பாரிய பணமுதலைகளான அந்நாடுகளினது நிறுவன முதலீட்டாளர்கள் கீழைத்தேச நாடுகளை ஒரு பக்கத்தில் சுரண்டிக்கொண்டிருக்க, மறுபக்கத்தில் அந்தந்த நாட்டுப் பொதுமக்களின் அனுதாபத்தைப் பெற்றுக்கொள்பவையாகவும் இந்த வரிய நாடுகள் விளங்குகின்றன.

இதன் காரணமாகவேயே அழகாக சோடிக்கப்பட்ட "உதவித் திட்டங்கள்'' பெரிதாக முழக்கப்படுகின்றன. சுரண்டுபவர்களே ரட்சகர்களாகவும் தங்களை அரங்கேற்றிக்கொள்கின்றார்கள். என்ன ஒரேயொரு வேறுபாடு; உண்மையான பாத்திரம் திரைமறைவிலும், பகட்டுக்காகப் பாவனைசெய்வது வலு பிரபல்யமாகவும் அரங்கேற்றப்படுகின்றன.

3ஆம் உலகநாடுகளின் உள்ளூர் உற்பத்திகளுக்கு அரசினால் மானியம் வழங்கப்படுவதை "உலக மயமாதல்'' மற்றும் "திறந்த சந்தைப் பொருளாதாரம்'' என்ற பெயர்கள் கொண்டு முழுமூச்சுடன் எதிர்க்கும் வசதி படைத்த நாடுகள் தாங்கள் முன்மொழியும் கொள்கைகளையே ஒழுங்காகப் பின்பற்றுவதில்லை.

ஆபிரிக்க நாடுகளின் கரும்புச் சீனியுற்பத்தியில் தாங்கள் தங்கியிருப்பதைத் தவிர்க்கும் முகமாக மேற்கு-ஐரோப்பிய நாடுகள் கிழங்குச்சீனி வேளாண்மையில் ஈடுபடும் தங்கள் விவசாயிகளை மானியங்கள் மூலம் ஊக்குவித்து வருகின்றன.

ஐரோப்பியக் கூட்டமைப்பின் இரும்பு ஏற்றுமதியைக் கட்டுப்படுத்துவதற்காக அதிக வரியைச் சுமத்தும் அமெரிக்கா, அதையே ஐரோப்பியக்கூட்டமைப்பாகிய EU நடைமுறைப்படுத்தியபோது WTO எனப்படும் உலக வர்த்தக அமையத்திடம் அதிகமாக முறையிட்டுக்கொண்டது.

இதேபோலவே சில வருடங்களுக்கு முன்னர் பரஸ்பரம் கார் ஏற்றுமதி-இறக்குமதியில் ஈடுபட்டு வந்த யப்பானுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் ஒரு பிணக்கு உண்டாகியிருந்தது. அமெரிக்காவின் விலை கூடிய அதிசொகுசு-கார்களை யப்பான் இறக்குமதி செய்தாலும், செல்வந்தர்கள் மட்டுமே கொள்வனவு செய்யும் அவ்வகைக் கார்களுக்கான கேள்வி மிகவும் குறைவாகவே இருந்தது. ஆனாலும், மத்தியதர வர்க்கத்தை இலக்கு வைத்து சாதாரண விலையில் விற்கப்பட்ட யப்பானியக் கார்களுக்கு அமெரிக்காவிலே அமோக வரவேற்பு இருந்தது.

தங்களால் வலியுறுத்தப்பட்ட திறந்த பொருளாதாரம் தம்மைப் பாதித்ததைக்கண்டு அமெரிக்க அரசு கொதித்தெழுந்ததைத் தொடர்ந்து, நீண்டகால முறுகல் நிலைகளுக்குப் பின்னர் யப்பான் அமெரிக்காவுக்கான தனது கார்-ஏற்றுமதியை மட்டுப்படுத்துவது என்று உடன்பாடு காணப்பட்டதோடு நிலைமை சுமுகமடைந்தது.

1949 இல் சீன ஆட்சிப் பீடத்தை மாவோசேதுங் தலைமையிலான கம்யூனிஸ்ருகள் வசப்படுத்தியபோது சீனாவின் முன்னாள் ஆட்சியாளர்கள் அருகிலிருந்த ஒரு தீவாகிய தாய்வானிலே தமது சுயாதீனமான அரசை நிறுவிக்கொண்டனர். இருந்தபோதிலும் சீனாவோ 36 000 km2 (இலங்கைத்தீவு 65 610 km2) நிலப்பரப்பைக் கொண்ட தாய்வானை இன்னும் தன் எல்லைக்குட்பட்ட பிரதேசம் எனவே வலியுறுத்தி வருகிறது.

ஆனால், இதை மேற்கு-நாடுகள் அதிலும் குறிப்பாக அமெரிக்கா எதிர்த்து வருவதுடன், தாய்வானுக்கான முழுமையான தனது ராணுவ ஆதரவைப் பகிரங்கமாகவே வெளிப்படுத்திவருகிறது. "தான் ஆடா விட்டாலும், தசை ஆடும்'' என்பார்கள். ஆனால், இங்கே தாய்வானியர்களை விட மேற்கு-நாடுகளின் அரசுகளே "தாய்வான் சுதந்திரமுள்ள ஒரு தனிநாடு'' என்று கடுமையாக வலியுறுத்த முற்படுகின்றன. இப்போக்கினாலே சீன ஆட்சி பீடத்துடன் மேற்குநாடுகள் அடிக்கடி காரசாரமான வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடவேண்டி வேறு வருகின்றது. ஆனாலும், இவ்வாறு முரண்பட்டு நிற்கும் சீன-அமெரிக்க தரப்புகள் ஒரே குரலில் ஒற்றுமையாக ஒலிக்கும் சந்தர்ப்பமும் உண்டு.

"ஐக்கிய நாடுகள்'' அமைப்பின் ஒரு அங்கமாகிய **Security Council** எனப்படும் 'பாதுகாப்பு சபை'யில் வெட்டு வாக்கு (வீற்றோ) உரிமையுடன் கூடிய நிரந்தர உறுப்பு நாடுகளாக பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, அமெரிக்கா, சீனா முதலிய ஐந்தும் இருந்து வருகின்றன. கண்டங்களின் அடிப்படையிலோ அன்றி மக்கள் சமூகத்தின் இன்னோரன்ன தனித்துவங்களைக் கொண்டோ அமையாத இந்தப் பிரதிநிதித்துவம் 1945 இலே அது உருவாக்கப்பட்ட காலத்தில் "கையோங்கி இருந்தவர்களின்'' கூட்டாகவே வடிவம் கொண்டது. அதிலும் மேற்கிற்கு ஒத்துவராத சீனாவிற்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டதும் சுவாரசியமானது. ஐ.நா உருவான 1945 இலே சீனா இன்று போல கம்யூனிச ஆட்சிக்குட்பட்டதாக இருக்கவில்லை. மாறாக **KMT** எனப்படும் அமெரிக்க நட்பைப் பேணி வந்த தேசியவாதிகளிற்கு உட்பட்டதாகவே இருந்தது. ஆக தங்களுடைய அணி தானே என்று நம்பி சனத்தொகை காரணமாக ஏனைய நாடுகளால் அன்றைய சீனாவிற்கு வெட்டு வாக்குரிமையுடனான நிரந்தர உரிமை வழங்கப்பப்பட்டது.

ஆனாலும், 1949 இலே மாவோசேதுங்கின் கம்யூனிஸ்ருகள் அரசைக் கைப்பற்றியபோது **KMT** பிரமுகர்கள் தாய்வானிற்குச் சென்று, ஆட்சி அமைத்துவிட, "நம்பிய கழுதை நட்டாற்றில் தள்ளிவிட்ட'' நிலைமையை சில நாடுகள் எதிர்நோக்க நிர்ப்பந்திக்கப்பட்டன. அது கடந்த கால வரலாறு.

இன்று G-4 என்று குறிப்பிடப்படும் இந்தியா, யேர்மனி, பிரேசில், யப்பான் ஆகிய நாடுகள் தமக்கும் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை வேண்டுமென்று மும்மரமாகக் கோரிக்கை எழுப்பி வருகின்றன. தங்களை உலக மக்களின் பிரதிநிதிகளாகக் காட்ட முயலும் நோக்கில் குறிப்பாக இந்தியா தங்களுக்கு மட்டுமன்றி கூடவே 2 ஆபிரிக்க நாடுகளுக்கும் இவ்வுரிமை வழங்கப்பட வேண்டுமென வாதிட்டு வருகிறது.

பாதுகாப்புச்சபையின் தற்போதைய அங்கத்துவம் சனநாயகத்திற்குப் புறம்பானது என்ற உண்மை ஒருபக்கமிருக்க, இந்த 4 நாடுகளும் சர்வதேச மட்டத்தில் தமது அந்தஸ்தை உயர்த்துவதன் மூலம் ராணுவ, பொருளாதார தேட்டங்களைப் பெற்றுக்கொள்வதே உண்மையான நோக்கம் என்பது வெளிப்படையானது.

இந்த இடத்தில்தான் G-4 நாடுகளின் கோரிக்கையை எதிர்க்கும் அமெரிக்காவிற்கு வழமைக்கு மாறானதொரு ஆதரவுக்குரல் ஒலிக்கக்கேட்கிறோம். ஆமாம்! சீனா தான் அமெரிக்காவை அமோகமாக ஆதரிக்கும் "அந்த ஒரு நாடு''. தட்டித்தவறி இந்த G-4 நாடுகளின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுமாயின், ஏற்கெனவே இருக்கும் நிரந்தர அங்கத்துவ நாடுகளுடன் எதிரணியில் சேர்ந்துவிடக்கூடிய பிரேசில் தவிர்ந்த ஏனைய 3 நாடுகள் (யப்பான், யேர்மனி, இந்தியா) உள்ளன.

அதிலும் சீனாவின் பகைமை நாடுகளாகிய யப்பானும், இந்தியாவும் வேறு நிரந்தரமாகிவிட்டால... பற்றாக்குறைக்கு நாளடைவில் 'வீற்றோ' எனப்படும் வெட்டுவாக்குரிமை நீக்கப்பட்டு "பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானங்கள் எட்டப்படும்'' என்று நிலைமை மாறிவிட்டால் என்ற சந்தேகத்துடனான தற்பாதுகாப்புணர்வினால் தான் சீனா அமெரிக்காவுக்குத் தனது ஆதரவை இவ்விடயத்தில் வழங்க நேரிட்டுள்ளது.

கொழும்பு அரசியலில் மட்டுமல்ல கொழுத்த சர்வதேச அரசியலிலும் பணமும், பலமுமே பல சந்தர்ப்பங்களில் தீர்மானங்களை எடுக்கின்றன. ஒக்ரோபர் 3ஆம் திகதி 1990 ஆம் ஆண்டிலே சோவியத் ஆளுகைக்கு உட்பட்டிருந்த கிழக்கு-யேர்மனி மேற்கு-யேர்மனியுடன் இணைக்கப்பட்டது.

இதற்காக முழுமூச்சாக முன்னின்று உழைத்தவர் மேற்கு-யேர்மனியின் அன்றைய பிரதமர் ஹெல்முட் கோல். ஸ்ராலின், குருஷோவ் ஆகியோரைப் போலன்றி நெகிழ்ச்சிப்போக்குடையவராகக் கருதப்பட்ட அன்றைய சோவியத் சனாதிபதி மிஷாயில் கோர்பச்சேவ் இக்கோரிக்கைக்கு உடன்படவேண்டுமென்றால் யேர்மனி நேற்றோ அமைப்பிலிருந்து விலகிவிட வேண்டும் என்ற தனது நிபந்தனையைக் கடுமையாகவே முன்வைத்தார்.

ஆனாலும், இதற்கு ஏனைய நேற்றோ-கூட்டுநாடுகள் ஒரு போதிலும் சம்மதிக்கமாட்டா என்பதில் தெளிவாயிருந்த ஹெல்முட் கோல், அளவுக்கு மிஞ்சிய பொருளாதார அனுகூலங்களை சோவியத்திற்கு வழங்கியதன் மூலம் நிபந்தனையை நிறைவேற்றாமலேயே தனது விருப்பத்திற்கு கோர்பச்சேவை இணங்கச்செய்தார்.

ஆக எங்கள் தலைவிதியை நாமேதான் நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். அடுத்தவர்கள் வருவார்கள்' தருவார்கள் என்று ஆகாயம் பார்த்திருந்த பழைய காலத்தை "கும்பிடுபோட்டு'' வழியனுப்பி விட்டு, எங்களின் பலத்தை உறுதிபடுத்தி, சூழ்நிலைகளைச் சாதகமாக்கி ஒற்றுமையால் உயர்வோம்!

# திலீபன் மூட்டிய விடுதலை நெருப்பு...



தலைகீழாய் தூக்கிவிட்டு, சகட்டு மேனிக்கு தம் கால்களாலும் கைகளாலும் வெளுத்து வாங்கிக்கொண்டிருந்தனர் இராணுவத்தினர். யார்தான் நினைத்தார்கள் இரத்தவெறி கொண்டு தாண்டவமாடுவார்கள் என்று. உயிரின் ஆழத்தில் சுரீர் சுரீர் என்று வலிக்க வலிக்கத் துடித்துக்கொண்டே கிடக்கின்ற இளசுகளின் மரண அவஸ்தையில் அவர்களிற்கென்ன இன்பம்.

**1. இராணுவ முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் சித்திரவதைக்குள்ளாகும் எமது சகோதர சகோதரிகளை உடன் விடுதலை செய்யவேண்டும்.**

கைகளில் அகப்பட்டது மட்டும் உடமையாக கால்களும் மனங்களும் வலியாய் வலிக்க, பிறந்து, தவழ்ந்து, வளர்ந்த தாய்மடி பிரிந்து சொந்தத் தேசத்திலேயே மக்கள் அகதிகள் ஆனார்கள். மாடி மனை வீடுகளெல்லாம் மண்மேடாக மரத்தடிநிழலும் கோயில் குளங்களும் மக்களின் உயிரைக்காக்க மட்டுமேனும் இடமளித்தன. அவர்களிற்கிருந்த இடங்களில் மெல்ல... மெல்ல... மெல்ல... சிங்களக் குடியேறிகள்.

**2. புனர்வாழ்வு என்ற போர்வையில் தமிழரின் பாரம்பரியப் பகுதிகளில் மெற்கொள்ளப்பட்டு வரும் பெருமளவிலான சிங்களக் குடியேற்றங்களை தடை செய்ய வேண்டும்.**

அங்கொன்றும் இங்கொன்றும் அமைந்திருந்த இராணுவ முகாம்களும் 'பொலிஸ்' நிலையங்களும் செறிவாக்கப்பட்டுக்கொண்டிருந்தன.

**3. இடைக்கால அரசு அமைக்கும் வரை 'பொலிஸ்' நிலையங்கள் 'சிவில்' நிர்வாக அமைப்புகள் ஆகியவற்றில் சீரமைப்பு என்ற போர்வையில் சிங்களத் திணிப்பை நிறுத்தவேண்டும்.**

தமிழ் மாணவர்கள் படிக்க வேண்டிய பாடசாலைகள் பலதும் இராணுவ முகாம்களாகவும் 'பொலிஸ்' நிலையங்களாகவும் மாறிப்போய்விட பறிபோய்க்கொண்டிருந்தது தமிழ் மாணவர்களின் கல்வி. புத்தகங்கள் இருக்கவேண்டிய இடங்களில் துப்பாக்கிகளும், வெள்ளைச்சீருடைச் சிட்டுக்கள் படிக்கவேண்டிய இடங்களில் காக்கி மற்றும் இராணுவ, பொலிஸ் சீருடைதாரிகளும் நிரம்பி வழிந்தனர். மக்கள் நிறைந்துவாழும் பகுதிகளில் இராணுவ,பொலிஸ் அத்துமீறல்கள் தலைதூக்கின.

**4.பாடசாலைகளிலும் மக்கள் செறிந்துள்ள பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ள 'பொலிஸ்' இராணுவ முகாம்கள் மூடப்படவேண்டும்.**

திடுதிப்பென்று மக்கள் மீது பாய்ந்து குதறுகின்ற அந்த மனித மிருகங்களின் கைகளில் கொட்டன்களும் கத்திகளும் மட்டுமல்ல துப்பாக்கிகளும் இருந்தன. மக்களை அடித்தும் மிதித்தும் துன்புறுத்தியதோடு சுவாரஸ்யமாகச் சிரித்து மகிழ்ந்து சுட்டுக்கொன்றுவிட்டும் போவார்கள் அந்தக்காடையர்கள்.

**5.சிங்களக் குண்டர் படையான ஊர்காவற் படையை கலைத்து அதனிடமிருந்து ஆயுதங்களை திரும்பப்பெறவேண்டும்.**

1,2,3,4,5 இவை ஐந்தும் அகிம்சைக்குப் பெயர் எடுத்த வல்லரசொன்றிடம், ஒரு கொள்கைவீரன் முன்வைத்த கோரிக்கைகள். பற்றியெரிகின்ற தாயகத்தின் பிள்ளை தன் நாட்டின் மக்களிற்காய் முன்வைத்த வேண்டுகோள்கள். துப்பாக்கிகொண்டு துஸ்டர்களைத் துரத்தியடிக்கின்ற வல்லமை இருந்தும் உண்ணாமல் தவமிருந்து உருக்கமாய் யாசித்த வரங்கள்.

திலீபன் ஒரு காலத்தின் பெயராகி தமிழரின் வாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்ட வீரப்பெயர். ஆயினும் கேட்கக்கூடாத எதையும் திலீபன் கேட்கவில்லை. பார்க்கக்கூடாத வேலையெல்லாம் பாரத அரசு பார்த்தபோது பார்த்துக்கொண்ருக்க முடியாமல் தவித்த திலீபன் தொடுத்த அகிம்சைப்போர்தான் சாகும்வரையான உண்ணாவிரதம்.

திலீபனின் வயிற்றில் பற்றியெரிந்த பசி நெருப்பே மக்களின் மனங்களில் விடுதலை நெருப்பை விசிறிக்கொண்டிருந்தது.

மேடையில் திலீபன் மெழுகாய் உருகினான். மேடையைப் பாடையாக்கி, பாடையில் படுத்தபடி படித்தான் விடுதலை வேதம்.

**"மக்கள் புரட்சி வெடிக்கட்டும்"**

மக்களின் கண்ணீரில் வழிந்தது துயரம்.
திலீபனின் பார்வையில் சுரந்தது வீரம்.

கண்ணீர்க் கடலின் நடுவே திலீப நெருப்பு எரிந்துகொண்டே இருக்கையில் ஒருபொழுது, ஒரு இளைஞன் மேடையில் முழங்கினான்.

"திலீபன் அண்ணாவின் கோரிக்கைகள் மட்டுமல்ல, தமிழ்மக்களின் கோரிக்கைகளும் இவைதாம். இவற்றை நிறைவேற்ற வேண்டியது இந்திய அரசின் கடமையாகும். அவர் தமிழீழம் தாருங்கள் என்பதற்காக உண்ணாவிரதம் இருக்கவில்லை. இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள ஐந்தே ஐந்து கோரிக்கைகளை நிறைவேற்றும்படி வற்புறுத்தித்தான் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருக்கிறார். சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருக்கிறார். எந்தக் காரணத்தினாலாவது இதை இந்திய அரசு நிறைவேற்றத் தவறுமானால் திலீபனண்ணா இறப்பது நிச்சயம். திலீபனண்ணா இறந்தால் ஒரு பூகம்பம் இங்கே வெடிக்கும். ஒரு புரட்சி இங்கே வெடிக்கும்."

நாட்கள் நெருப்பாய் எரிந்துகொண்டே நகர்கின்றன. தலைவன் அருகிருந்து தலை தடவிப்பேசிப்போன பின்னான ஒருபொழுது திலீபன் தன் வரண்டுவிட்ட நாவினாலே, திரண்டிருந்த உணர்வினோடு மக்களிற்காய் பேசுகின்றான்.

"எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய மக்கள் அனைவருக்கும் எனது வணக்கம். நின்று கொண்டு பேசமுடியாத நிலையில் பேசுகிறேன். நாளை நான் சுயநினைவுடன் இருப்பேனோ தெரியாது. அதனால் இன்று உங்களோடு பேசவேண்டும் என்று விரும்பினேன்.

நாம் எமது இலட்சியத்தில் உறுதியாக இருக்கிறோம். 650 பேர் இதுவரை மரணித்துள்ளார்கள். மில்லர் இறுதியாகப் போகும்போது என்னிடம் ஒரு வரி கூறினான். நான் அவனுடன் இறுதிவரை இருந்தேன்.

நான் என்னுடைய தாய்நாட்டிற்காக உயிர் துறப்பதை எண்ணும்போது மகிழ்ச்சியும் திருப்தியும் ஏற்படுகிறது. மக்கள் விடுதலை அடையும் காட்சியை என் கண்ணால் காண முடியாது என்பதே ஒரே ஒரு ஏக்கம்" என்று கூறிவிட்டு வெடிமருந்து நிரப்பிய லொறியை எடுத்துச் சென்றான்.

இறந்த 650பேரும் அநேகமாக எனக்குத் தெரிந்துதான் மரணித்தார்கள். அதனை நான் மறக்கமாட்டேன். உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்க தலைவரிடம் அனுமதி கேட்டேன். அப்போது தலைவர் கூறிய வரிகள் எனது நினைவில் உள்ளன.

"திலீபன்! நீ முன்னால் போ நான் பின்னால் வருகிறேன். என்று அவர் கூறினார். இத்தகையதொரு தெளிவான தலைவனை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். அந்த மாபெரும் வீரனின் தலைமையில் ஒரு மக்கள் புரட்சி இங்கு வெடிக்கட்டும். அது நிச்சயமாக தமிழீழத்தை தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பெற்றுத்தரும். இதனை வானத்தில் இருந்து, இறந்த 650 போராளிகளுடன் சேர்ந்து நானும் பார்த்து மகிழ்வேன்.

நான் மனரீதியாக ஆத்மார்த்தமாக எமது மக்கள் விடுதலை அடைவார்கள் என உணர்கிறேன். மகிழ்ச்சியுடனும் பூரண திருப்தியுடனும் உங்களிடமிருந்து இறுதிவிடை பெறுகின்றேன். உண்மையான உறுதியான இலட்சியம் எமது இலட்சியம். அந்த இலட்சியத்தை எமது தலைவருடன் சேர்ந்து நீங்கள் அடையுங்கள். எனது இறுதி விருப்பமும் இதுதான்"

**வெற்றிச்செல்வி**

திலீபன் விட்டு விட்டுப் பேசிய வார்த்தைகள் மட்டுமல்ல, வெந்து வெந்தே சிரித்த முகமும், நொந்து நொந்து துடித்த உடலும், மக்கள் மனங்களில் விடுதலை நெருப்பை விசிறிக் கொண்டே இருந்தன.

திலீபன் நேசித்த மக்கள் திலீபன் நினைத்ததை, விரும்பியதை, செய்யத் தொடங்கி விட்டார்கள். மக்கள் புரட்சி வெடிக்கத் தொடங்கியது, கண்ணீராயும் கருத்தாயும் நெருப்பாயும்.

ஒரு உயிருக்காக பல்லாயிரம் உயிர்கள் பசிமறந்தன. சமைக்கப்படாத வாடிப் போன மரக்கறிகள் குசினிகளில் நிறைந்தன. வெறும் பசி வந்தாற் தானே பத்தும் பறக்கும். அங்கே விடுதலைப் பசி மூண்டது. வேகமே பிறந்தது. சுதந்திரம் நோக்கித் தவமியற்றிய இளசுகளின் மனங்கள் கொதித்தன துப்பாக்கிகள் தூக்க மக்களெனும் கடற்கொந்தளிப்பு.

திலீபனின் மரணவாசலில் நின்று தாயகத்தின் பெருங்கவிஞர்கள் படையல் செய்தனர் கவிதைகளை.

பத்துத்தடவை பாடை வராது
பதுங்கிக் கிடக்கும் புலியே தமிழா
செத்து மடிதல் ஒரே ஒரு முறைதான்
சிரித்துக் கொண்டே போர்க்களம் வாடா.

என்று முழங்கிய காசி ஆனந்தன் தன் உயிர் துடிக்கக் கவி படித்தார்.

ஐயா திலீபா
எங்கைய்யா போகின்றாய்?
மேடையில் நீ ஏறினால்
இடி முழங்கும்.
சிங்களக் காடைவெறிப்படையின்
காதுகளில் நெருப்பு விழும்
எதிரிகளின் வீழாத கோட்டை
மதில் வெடிக்கும்
தமிழரினம் ஆளாதா? ஆளாதா?
என்றோர் அலைகிளம்பும்.

வளை அணிந்த இளம் பெண்கள்
வளைக்கரமும் வெடிகுண்டின்
முளை திருகி எறியும்.
உன் முழக்கம் அதைச் செய்யும்.
பின்னல் நெருப்புக் குளிக்கும்
கூத்தாடும் பூகம்பம்.
பிரளயம் குமுறி எழும்.

ஐயா திலீபா
எங்கையா போகின்றாய்?
பூ ஒன்று காம்பு கழன்று
தனையீன்ற மரத்தினடியில்
எருவாய் விழ
மெல்ல அசைகிறது.

குண்டெறி வாங்கி குடலை
நீ விலைகொடுத்த
தொண்டைமானாறு துடிக்கிறது

ஐயா திலீபா
எங்கையா போகின்றாய்?

புத்தகமும் கையுமாய் இருக்கிறாய்
புறப்பட்டுப் போவதற்குள்
முத்தமிழைப் படித்து
முடிக்க நினைத்தாயா?

உணர்ச்சிக் கவிஞரின் உள்ளம் கவியாறாய், நெருப்பாறாய் சடசடத்துப் பாய்ந்தது. தோழனாய் தம்பியாய் துணையிருந்த திலீபனின் பயணம் உறுதியானதால் உடைந்தது பாய்ந்தது உள்ளம். கவிஞர் புதுவை இரத்தினதுரையின் அனல் வரிகளும் பிறந்தன மேடையில்,

குரலெடுத்ததோர் குயில் படுத்தது
குமுறி நின்றதோர் புயல் படுத்தது
தர மறுத்திடும் உரிமை பெற்றிடத்
தன் வயிற்றிலே போர் தொடுத்தது.

அலை எழுந்தினிக் கரையுடைக்குமாம்
உயிர் பிரியமுன் இது நடக்குமாம்
வரமறுத்தவர் வருகை கூடுமாம்
வலை விரித்தவர் படைகள் ஓடுமாம்.

*(22ஆம் பக்கம் பார்க்க)*

# காதல் மோசடிகளும் சமுதாயச் சீரழிவுகளும்



★★★★★ 'காதல்' எனும் போர்வையில் ஒரு பெண்ணினதோ ஆணினதோ வாழ்வை துஷ்பிரயோகம் செய்வது கூட சகஜமாகிவிட்டது. இதற்கு பொறுப்புக் கூறுவதற்கோ, வகைகூறுவதற்கோ யார் முன்வருவார்? பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் இறுகமௌனித்து விடுகின்றார்கள். ★★★★★

(சென்ற வாரத்தொடர்ச்சி)

காதலன்- காதலி உறவு என்பது காதலாக மட்டுமன்று, உயர்ந்த ஒரு நட்பாகவும் உண்மையான ஒரு தோழமை யாகவும் அமைந்திடவேண்டும். இல்லையென்றால் அது பொரு ளற்றது. போலியானது. ஒரு தலையான ஆசைகளுக்கும் எண் ணங்களுக்கும் மற்றவர்களை ஒருக்காலும் பலியிடமுடியாது. ஜோஸ.ஃப் கான்ரேட் எனும் அறிஞர் கூறுகின்றார், எல்லா ஆசைகளும் நியாயமானவை தான், மனிதர்களை ஏமாற்றி இன்னலில் ஆழ்த்தி அதன் மேல் ஏறிச் செல்லும் ஆசைகள் தவிர. இன்று ஒரு பெண்ணைப் பழிக்காளாக்கி எள்ளி நகை யாடுபவன். நாளை இன்னொரு பெண்ணையும் பழிக்காளாக்கி எள்ளி நகையாடமாட்டான் என்று என்ன நிச்சயம்? ஒரு பெண்ணின் மதிப்புத் தெரியாத வர்களுக்கு வாழ்வின் மதிப் புத் தெரியுமா? மற்றவர் களின் உரிமைகளை ஆக்கிர மிக்கும் ஆர்வம் மிகவும் கண் மூடித்தனமானது. கட்டுப்பாடு கெட்டது.

சில காதல்கள் வேடிக்கை யிலும், பொழுதுபோக்கிலும் நிறைவு காண்பன. யாருடைய வாழ்வைப் போட்டுடைக் கலாம்? யாரைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கலாம்? தம் உணர்ச்சிகளுக்கேற்ப மன வெழுச்சிகளைத் தீர்க்கலாம் என்பவையுடன் இசைவு பெற் றவை. பற்றைகளிலும், பாழும் கிணறுகளிலும் சிசுக்கொலை களும் திருமணமாகாத பெண் களின் குழந்தைகளும் இக் காதல் மோசடிகளையே அம்பலப்படுத்துகின்றன. "சேராத இடத்தில் சேர்ந்தால், வராத துன்பமும் வரும் என்பார் கள். தகாத உறவுகள், தகாத நடத்தைகளை விபச்சார நிலை மைகள் போன்ற மோசமான நிலைமைகளுக்குக் கூட கல்வியறிவற்ற நிர்க்கதியான பெண்களை இட்டுச்செல்ல லாம்.''

காதல் என்பது உண்மை யின் பிறப்பிடம். ஆனால் இன்றைய சமூகத்தில் காதல் என்பது, கற்பனைக் காட்சி களில் பரஸ்பர பரிமாறுதலும் தோலோடு தோல் தொடர்பு கொள்வதும் தான் போலும். காதலிப்பார்கள் கல்யாணம் என்ற கதையுடனே சீதனம், அக்கா, தங்கையின் நினைவு; சாதி, சமயம், சாதகம் இன்னு மின்னும் எத்தனையோ வெல்லாம் நினைவுக்கு வந்து விடுகிறது. அளக்கக் கூடிய காதல் பிச்சைக்காரத்தனமா னது. பெரும்பாலான காதல் கள் காசு இருக்கும் வரையே நிலைத்து விடுகின்றன.

காதலிக்கக் கூடிய இடத் தில் காதலை விரும்புபவர்கள் இருத்தல் வேண்டும். ஒரு அறிஞர் கூறுகின்றார் நீ காதலிக்கப்பட வேண்டுமா னால், காதலுக்கு உரியவனாய் நடந்திருக்க வேண்டும். காத லுக்கு ஒளிவு மறைவு ஒரு போதும் கிடையாது. எவ்வளவுதான் பாசாங்கு செய்தாலும் காதல் இருக்கும் இடத்தில் அதை மறைக்கவோ இல்லாத இடத்தில் இருப்ப தாகப் பாவனை செய்யவோ நீண்ட நாள் முடியாது. குறிப் பாக தனக்குரியவனோ, தனக் குரியவளோ ஒருவராலும் துன்புறுத்தப்படக்கூடாது என்ப தில் அக்கறையும் உதவியும் கொள்வதிலேயே திடமாக இருக்கும். காதல் சொந்த சுகத்தை நாடுவதில்லை. தன் னைப் பற்றி கவலைப்படுவ தில்லை. இன்னொருவருக் காகத் தன் நலனை விட்டுக் கொடுத்து நரகத்தின் வேதனை யிலும் சொர்க்கத்தை உரு வாக்குகின்றது. உண்மைக் காதல் அனைத்துக்கும் பரஸ்பர மதிப்பே காரணமாகி விடுகின் றது.

'காதல்' எனும் போர்வை யில் ஒரு பெண்ணினதோ ஆணினதோ வாழ்வை துஷ்பிர யோகம் செய்வது கூட சகஜ மாகிவிட்டது. இதற்கு பொறுப் புக் கூறுவதற்கோ, வகை கூறுவதற்கோ யார் முன் வரு வார்? பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் இறுக மௌ னித்து விடுகின்றார்கள். ஒரு போதும் நியாயம் கிடைப்ப தில்லை. தப்பித்தவறி யாரா வது நியாயத்தின் பெயரில் மௌனம் கலைத்தால் மரி யாதையாக வாழ விடுவார் களா? ஒரு பெண்ணின் வாழ்வு பூனை, எலி விளையாட்டுத் தான். ஒரு நந்தவனத்தை ஒரு வனாந்தரமாக்க விரைவில் இயலுமாகி விடுகிறது. ஆனால் அந்த வனாந்தரத்தை மீண்டும் ஒரு நந்தவனமாக்க முடி யுமா?

காதல் மோச டிகள் பணப்பந்தத் தினுள் பெரும்பாலும் அமுக்கப்பட்டனவாகி விடுகின்றன. காதல் தன்னைத் தானே அழிப்பது; விலை கொடுத்து அதை வாங்குவதற்கில்லை. இதுதான் மனிதத்துவம், தீய எண்ணங் களால் பிறரின் வாழ்வில் நிர்ப்பந்தங்களையும் அச்சுறுத் தல்களையும் தொடர்கதை யாக்கி விடுகின்றமை இன்று சர்வ சாதாரணமாகிவிட்டது. கட்டுக்கோப்பற்ற சமுதாயச் சீரழிவில் நெறிபிறழ்வில் சமூக ஒழுங்கு சீர்குலைகின்றது. பிரான்ஸிஸ் பேக்கன் எனும் அறிஞர் கூறுவது போல் கெட்ட வன் புனிதன் போல் பாசாங்கு செய்யும்போது மேலும் கெட்ட வன் ஆகின்றான். இவர்கள் காதல் மோசடிகளால் இளமை யில் செய்கின்ற மடமைகள் நடுவயதில் தீமைகளாகவும் முதுமையில் இழுக்குகளாகவும் முடிகின்றன.

காதலின் பூரணத் தன்மை திருமணத்திலேயே சிறப்புப்பெற முடிகின்றது. காதல் பற்றிய ஒரு படைப்பாக் கத்தை வெளியிடுபவன் குறிப் பாக இன்றைய சூழ்நிலையில் சமுதாயச் சீரழிவுகளை படம் பிடித்துக் காட்டவேண்டியவ னாகின்றான். மாறாக உளவி யல் சாணாக்கியர்கள் தமக் கேற்ற விதமாகப் பித்தலாட்ட மாடுவதைக் கருத்திலெடுக்க முடியாது. "மணவினைக் காதல் மனித இனத்தைப் பெருக்கும்; நட்புக்காதல், மனித இனத்தை மேம்படுத்தும்; மோகக் காதல், மனித இனத்தை மாசுபடுத்தித் தாழ்த்தும்; என்பார் பிரான்ஸிஸ் பேக்கன்''

மனிதனின் உடல், உள குடும்பப் பின்னணிகளுக் கப்பால் தான் காதல் நேர்மை யின் முத்திரையாக மலர முடியும். காதலுக்கும் கல்யா ணத்திற்கும் இடையே உள்ள வேறுபாடு வித்துக்கள் விளக்கப்பட்டியலில் உள்ள படங்களுக்கும் வித்திடப்பட்ட பின் முளைக்கும் செடிக்கும் இடையே உள்ள வேறுபாடு ஆகும். "ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்'' என்பது போல் ஆகிவிட்ட காதல்களும் கற்பனைகளும் கனாக் காணும் காட்சிகளும் மலிந்து போன அன்புறவாக சமூகச் சீர்கேட்டின் பால் காதல் தான்தோன்றித் தனமாக வளர்ந்திருக்கின்றது.

தமிழர் பிரதேசங்களில் ஆபாசமாகப் பாடப்படுகின்ற பாடல்கள், "கல்யாணம் தான் கட்டிக்கிட்டு ஓடிப் போலாமா" "மன்மதராசா...." போன்றவை வீதியெங்கும் பேருந்துகளி லும் சுதந்திரமாக ஒலிக்கின் றன. இவையெல்லாம்

## இனியவள்

காதலுக்கு 'அன்பு' எனும் அர்த்தம் கொள்ளக்கூடிய வையா? இந்தச் சீர்கேடுகளில் தோன்றிய விரசமான காதல் சோடிகள், காதல் உருவங்கள் எவ்வாறான சமுதாயச் சீரழிவை ஏற்படுத்தும்.

திருமணத்தின் வரவேற்பு வாசல் காதல். ஆயின், விரி வும் வளர்ச்சியும் வாழ்க்கை. குறுகுவதும் சுருங்குவதும் மரணம். அன்பு அனைத்தும் விரிவு. சுயநலம் அனைத்தும் சுருக்கம் எனும் சுவாமி விவேகானந்தரின் கருத்தே ஏற்புடையது.

வில்லியம் ஷேக்ஸ்பியர் திருமணத்தின் அடிநாதம் காதல் என்பதனூடு மெய்மை நேர்மை என்பவற்றுக்கு அழுத்தம் கொடுக்கின்றார். ''உண்மை உள்ளங்களின் திருமணத்திற்குத் தடைகள் உண்டென்பதை நான் ஒப்ப மாட்டேன்; மாற்றம் காண் கையில் தானும் மாறும் அன்பு, அன்பல்ல; இல்லை; இல்லை; நிரந்தரமாய் நிலை பெற்ற முத்திரை அது என்று கூறுவார்.

பிறரிடம் குறைபாடுகளைக் காண்பதில் மகிழ்ச்சியும் அதுபோலவே நிறைகளைக் கண்டால் மனக்கசப்பும் உள்ள இன்றைய மனிதர்களிடையே காதல் என்பதற்கான வரை யறையானது அன்பு எனும் வரைவிலக்கணச் செயற் பாங்கினுள் வடிவமைக்கப் பட முடியாதது. ஜான் கீட்ஸ் எனும் அறிஞரின் "அழகே வாய்மை வாய்மையே அழகு; வையத்தில் நீ அறிவதும் அறிய வேண்டியதும் அதுவே" எனும் நிறைந்த கருத்து காதல் என்பது வாய்மையின் மேல் கட்டப்பட வேண்டியதன் அவசி யத்தை நன்கு புலப்படுத்து கின்றது.

நேசமான, பாசமான அன்பு நிறை காதலானது எழுத்திலோ வார்த்தையிலோ வடிக்க முடி யாதவை. கண்பார்வையில் லாத, தன்மனைவியைக் கண்ணால் பார்த்தறியாத ஜான் மில்ற்டன் பாடிய பாடல்....

'' திரையிட்டது அவள் முகம்; என்னினுமென் கற்ப னைப் பார்வையில். நிறை அன்பு இனிமை, நேரிய பண்பு, அவளகத்தே வேறுமுகம் காணாவாறு, வீசிய இன்ப ஒளி விளக்கமாய் ஊறும் அன்போடு சேர, எனைத்தழுவ அவள் சாய்ந்த நேரத்தில் நான் விழித்தேன்; நேரிழையாள் ஓடி விட்டாள்; இரவை எனக்கு மீண்டும் கொணர்ந்தது, பகல் பொழுது. தன் மனைவியைக் காணாமலே கண்டுவிட்ட நேரிய வாழ்வு வாழ்ந்த அன்பு பற்றி அக்கறையும் அனுபவ மும் கவிவரியில் வெளித் தெரியக் காணலாம்.

எனவே திடமான நிலை யான சமூக ஒழுங்கு நெறியை உறுதிப்படுத்துவதுடன் தானும் மேம்பட்டு தான் சார்ந்தவர் களும் மேம்பட்டு இதயபூர்வ மான அன்பு நெறிகளை உறவுப்பாலமாக அமைக்கும் காதலே உறுதியானதும் உண் மையானதுமாகும். மாறாக சமுதாயச் சீரழிவிற்கும் தனி மனிதனின் சுயகௌர வத்திற்கும் பங்கம் ஏற்படுத்தி கீழ் நிலையான விளைவுகளை ஏற்படுத்தும் காதல் பயனற்றது; மோசடிகளும் ஊழல்களும் நிறைந்தது.




‘இந்தி’ மொழியில் வெளியான ‘ரமாகாந்த்’ அவர்களின் ‘தடங்கல்’ எனும் சிறுகதையை தமிழில் சரஸ்வதி ராம்னாத் அவர்கள் அளித்துள்ளார். இச்சிறுகதையினை இந்திச் சிறுகதைத்தொகுப்பிலிருந்து எடுத்து எமது வாசகர்களுக்குத் தருகிறோம்.



# தடங்கல்

அம்மா அடிக்கடி சொல்வது- “எனக்கு அதிர்ஷ்டமே இல்லை நான் ஒரு அதிர்ஷ்டம் கெட்டவள்.

அது எப்படி என்று பார்ப்போம். அம்மா அப்பாவிடம் மாலை வேளைக்கும் மறுநாளைக்கு காலைக்கும் காய் கறிகளோ கீரையோ அல்லது கடையில் இருந்து ஏதாவது கொண்டு வரும்படி சொல்லி இருப்பாள். “சரி சரி! காசும் பையும் கொடு” என்று பதில் கூறியிருப்பார். அம்மா பையையும் காசையும் அவரருகே வைத்து “பையும், காசும் வைத்தாகி விட்டது” என்று இருப்பாள். “சரி சரி இதோ போகிறேன் இந்தச் செய்தியைப் படித்து விட்டு” என்பார் அப்பா... என் குமட்டித் தணல் வீணாகப் போய்க்கொண்டிருக்கிறது. இந்தச் செய்திகளையெல்லாம் அப்புறம் படித்துக்கொள்ளலாம்” அம்மாவின் குரலில் லேசான எரிச்சல் ஏறியிருக்கும். “பரவாயில்லை. றொட்டிகளை வாட்டிவிட்டேன். தணல் ஏன் வீணாக வேண்டும்?” என்று அப்பா யோசனை கூறியிருப்பார். றொட்டிகளும் வாட்டி முடித்திருப்பாள் அம்மா. அப்பா-தினசரிப் பத்திரிகையிலிருந்து தன் கவனத்தை அகற்றாமலேயே “ றொட்டியெல்லாம் தயாராகிவிட்டதா? அச்சா! ஏதாவது ஊறுகாய் அல்லது சட்னி இருக்குமே! அதுபோதும் சாப்பிடலாம்” என்று கூறியிருப்பார்.

“நீங்க சாப்பிடலாம் மல்லுவும் குல்லுவும் பாவம் என்ன செய்வாங்க! காலையில அவங்க பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டாமா? பாலோ வெண்ணெய்யோ கிடைக்கறதா அவர்களுக்கு? காய்கறியாவது கூட இருந்தாத்தானே இரண்டு றொட்டி சாப்பிட்டு பள்ளிக்கூடம் போவாங்க. இரண்டு மணிவரைக்கும் அவங்களுக்கு அதுதானே ஆகாரம்?”

“அப்படீன்னா அவங்க யாரையாவது அனுப்பி வாங்கிக்கோ...”

“இது முடியாது”-என்பாள் அம்மா. “கடைத்தெருவு இங்கே கிட்டத்திலே இல்லை. சாலை எவ்வளவு ஆபத்தானது? ரிக்சாக்கள், டாங்கா வண்டிகள், மோட்டார்கள் என சரமாரியாக வந்தும்போய்க் கொண்டேயிருக்கிறதே. போதாக்குறைக்கு இந்தத் தெருப்பையன்கள் சைத்தான்கள் ஒன்றுமில்லாதற்கெல்லாம் சண்டையும் சச்சரவும் செய்கிறார்கள். உங்களால் போக முடியாதுன்னா முதலிலேயே என்னிடம் சொல்லியிருக்கலாமில்லையா? நீங்க இருக்கும்போது நான்தானே கடைகண்ணிக்கு போகவர அலையவேண்டும்- ஹே பகவானே நான் ஒரு அதிர்ஸ்டம் கெட்டவ...” கதை இப்படிப்போகும்.

“ஓ... ஓ... அச்சா” என்றவாறே அப்பா எழுந்து தினசரியின் தாள்களை நன்றாக ஒழுங்காக மடித்துவைப்பார். பிறகு பையையும் காசையும் எடுத்துக் கொண்டு புறப்படுவார் கடைக்கு.

இது தினசரி நடக்கும் கிரமமான காட்சி. வேலையிலிருந்து வீடு திரும்பும்போது சில சமயம் அப்பா தன்னோடு ஏதாவது புத்தகமும் கொண்டுவருவார். அது பழைய புத்தகக்கடையிலிருந்து வாங்கிய பழைய புத்தகமாக இருக்கும். சிலதிற்கு அட்டை இராது. சிலவற்றில் பக்கங்கள் கோர்வையாக இருக்காது. சிலவற்றில் பக்கங்கள் பிரிந்து கிடக்கும். அறையின் மூலையில் கிடக்கும் அவரது கட்டிலில் ஒருக்களித்துப் படுத்துக்கொண்டு நெடுநேரம் வரை அப்புத்தகங்களின் பக்கங்களை ஒழுங்கு படுத்தி, சீராக்கிக்கொண்டிருப்பார். பிறகு படிக்கத் துவங்கிவிடுவார். இந்தச் சமயத்தில்தான் அம்மா அவரிடம் அடிக்கடி கடைத்தெருவுக்குப் போய்வரும்படி நச்சரித்துக்கொண்டிருப்பாள்.

ஒரு முறை இந்த வரிசைக்கிரமம் மாறிவிட்டது. அந்தவருடம் பனிகாலம். வெகுசீக்கிரமாகவே துவங்கிவிட்டது. கடந்த வருடங்கள் போல் பழைய ரஜாய்களை பிரித்து அவற்றின் உறைகளை தோய்க்கவோ பஞ்சை மறுபடியும் அடித்து அடைக்கவோ போதிய அவகாசம் இருக்கும். ஆனால் இந்தமுறை அந்த அவகாசம் இல்லை. நாங்கள் யாவரும் பழைய ரஜாய்களையே போர்த்திக்கொள்ள வேண்டியதாயிற்று. அவற்றில் பஞ்சுகளின் கட்டுக்கள் தளர்ந்து இங்குமங்கும் நழுவி விட்டிருந்தன. ஆனால் இப்பொழுது அவற்றை சரிசெய்து தைக்க நேரமில்லை.

என்கோட்டு சின்னதாகிவிட்டது. என் ஸ்வெட்டரின் கம்பளி நூல்கூட ஆங்காங்கே பிரிந்துவிட்டிருந்தது. ஒரு பழைய சட்டையை போட்டுக்கொண்டு நான் ஸ்வெட்டரை அதன் மீது போட்டுக்கொண்டேன். இவற்றின் மீது இன்னொரு சேட் வேறு.

அந்தச் சமயம் குளிர் சற்று அதிகமாக இருந்தது. முன்னால் தேநீர்க்கோப்பையை வைத்ததும் என் பற்கள் கடகடத்தன. “நீ ஏன்? உன் கோட்டைப் போட்டுக்கொள்ளவில்லை?” என்றார்.

“என் கோட்டு சின்னதாகிவிட்டது. மல்லுவிற்குக்கொடுத்துவிட்டேன். எனக்கு புதிய கோட்டு தைத்துக்கொடுங்கள்”

“சின்னதாகி விட்டதா? கொஞ்சங்கூட போட்டுக்கொள்ளவே முடியாதா?”

நான் மல்லுவிடமிருந்து அந்தக் கோட்டை வாங்கிப்போட்டுக்கொண்டு காண்பித்தேன். மணிக்கட்டிலிருந்து கோட்டின் கை நன்கு ஈஞ்சு மேலே ஏறிநின்றது. பட்டனை இழுத்துப்போட முடியவில்லை. ரொம்பவும் சிரமப்பட்டுப் போடவேண்டியிருந்தது. நீ பெரியவனாக வளர்ந்துகொண்டிருக்கிறாய் என்றவாறு அப்பா என் முதுகில் தட்டிக்கொடுத்தவாறு கனநேரம் என்னையே பார்த்துக்கொண்டிருந்தார். அவரது உதடுகளின் ஓரத்தில் மெலிதான சிரிப்பு மலர்ந்திருந்தது. அவர் சிரித்து நான் ஒருபோதும் பார்த்ததில்லை. அவரது கண்கள்கூட சிரித்துக்கொண்டிருந்தன போல் இருந்தன. ஆனால் ஒரே ஒரு கணம் மட்டும் தான். அடுத்தகணம் பழைய படி வருத்தமாகிவிட்டார். கண்களில் எப்போதும் தேங்கி நிற்கும் வேதனையில் வருத்தம் மீண்டும் பரவிவிட்டது போல் இருந்தது.

அன்றைய தினம் அவர் பத்திரிகையும் படிக்கவில்லை. தன் பழைய புத்தகங்களை எடுத்துச் சீராக்கிவைக்கவுமில்லை. கட்டிலின் தலைமாட்டிலிருந்த அலுமாரியில் பத்திரிகையும் புத்தகங்களும் வைக்கப்பட்டன. மல்லாந்து படுத்திருந்த அவர் கைகளைத் தலைக்குக்கீழே வைத்தவாறு நெடுநேரம் வரை கூரையை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார். அம்மா காய்கறி வாங்கிக்கொண்டு வரச்சொன்னதும் கொஞ்சங்கூட எதிர்வாதம் செய்யவில்லை. பேசாமல் பையைத் தூக்கிக்கொண்டு கடைத்தெருவிற்கு நடந்துவிட்டார். இதன் பிறகு பல நாட்கள் வரை அவர் தினசரிப் பத்திரிகையோ பழைய புத்தகக்காரனிடமிருந்து புத்தகங்களோ வாங்கிவரவில்லை.

எங்களுக்கு விசயம் பல வாரங்களுக்கு பின்தான் தெரியும். அன்று பகல் நாங்கள் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிய போது அப்பா யன்னலுக்கருகே ஒரு ஸ்டூலை இழுத்துப் போட்டுக் கொண்டு ஏதோ படிக்க முயற்சித்துக்கொண்டிருந்தார். அவர் ஒருமுறை எங்களைப் பார்த்தார். பிறகு மீண்டும் பார்வையை புத்தகத்திற்குள் புதைத்துக்கொண்டார். இனிப் பார்வை அங்கேயே பதிந்துவிடும். பகலில் எங்களுக்காக றொட்டி வைத்திருப்பதுண்டு. அங்கு அவைகள் இல்லை. மாலையில் அம்மா தினமும் போல சாமான்கள் வாங்கிவர அப்பாவிடம் எதுவும் சொல்லவில்லை.இரவு தண்ணீர் உப்புடன் எங்கள் முன்னே இரண்டு றொட்டிகளை வைத்துவிட்டு அம்மா அழ ஆரம்பித்தாள். அழுதுகொண்டே- அப்பாவிற்கு இரண்டு மாதத்திற்கு முன்னரே வேலை போய்விட்ட செய்தியைக் கூறினாள்.

பிறகு நாங்கள் நடந்தவற்றை வரிசைப்படுத்திக் கொண்டோம். அப்பா தினமும் வேலைதேட வெளியே போவார். நாங்கள் பள்ளிக்குப் போகுமுன்னரே அவர் கிளம்பிவிடுவார். மாலை மங்கியபின் நேரம் கழித்து வீடுதிரும்புவார். மிகவும் களைத்துச் சோர்ந்து வீடு வந்து சேர்ந்ததும் அப்படியே கைகளில் தலையைத் தாங்கியவண்ணம் கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருப்பார். நேரம் போவதே தெரியாது உட்கார்ந்திருப்பார். அதே அறையின் இன்னொரு மூலையில் உட்கார்ந்து நாங்கள் படித்துக்கொண்டிருப்போம். எங்களுக்கு எதுவுமே தெரியாது போல் காட்டிக்கொள்ள நாங்கள் முயற்சிப்போம். அம்மா அப்பாவின் முன்னே ஸ்டூலை இழுத்துப்போட்டு ஒருதட்டில் அவர் சாப்பிட ஏதாவது வைப்பாள். சாப்பிடும் பொருட்கள் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருவதை நாங்கள் கவனித்தோம். ஒருநாள் அவர் முன்னே வைக்கப்படும் தட்டு காலியாகவே போய்விடுமோ என்று எங்களுக்குப் பயமாகவும் இருந்தது. அப்பா ஒரு றொட்டியைச் சாப்பிட்டதும் போதும் பசியில்லை என்று கூறிவிடுவார். இதன் பின் நாங்களும் இதையே கூறத்துவங்கினோம். ஏதோ கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு நிறையத் தண்ணீரைக் குடித்துவிடுவோம்; பிறகு பசிக்கவில்லை என்று சொல்லிவிடுவோம்.

முதலில் இதுவொரு பொய்ச்சாக்காக இருந்தது. பிறகு அதுவே பழக்கமாகிவிட்டது. எங்களுக்கு உண்மையிலேயே பசி மந்தித்துவிட்டது போல் தோன்றியது.

அம்மா மிகவும் பயந்துபோயிருந்தாள். அவள் பயந்து பயந்து செய்யும் காரியங்கள் ரொம்பவும் வித்தியாசமாயிருந்தன. இப்போதெல்லாம் அவள் எந்தக் காரியத்தையும் செய்யச்சொல்லி வற்புறுத்துவதில்லை. அப்பா படிப்பது பற்றி திட்டுவதில்லை. ஆனால் அப்பா இப்பொழுது படிப்பதையே நிறுத்திவிட்டிருந்தார். படுத்தவாறு படிக்க ஏதோ முயற்சி செய்துகொண்டிருந்தார். அவ்வளவுதான். சீக்கிரமாகவே புத்தகத்தையோ பத்திரிகையையோ மூடி வைத்துவிட்டு விளக்கை அணைத்துவிட்டு தூங்கிவிடுவார். மாறிவிட்ட அவரது பழக்கங்களைக்கண்டு அம்மா இன்னும் பயந்துபோனாள்.

ஒருநாள் அப்பாவுடன் இன்னொருவர் வந்தார். எங்களுக்கு அவரைத் தெரியும். நாற்சந்திமுனையில் பழைய சாமான்களை வாங்கும் அவரது கடை இருந்தது. அம்மா வீடுமுழுவதும் சுற்றிச் சுற்றிவந்து சாமான்களைத் தேடி எடுத்துவந்து அறையின் நடுவில் வைத்துவிட்டுப் போய்க்கொண்டிருந்தாள். எல்லாவற்றிற்கும் பிறகு தையல் மிசினை எடுத்துவந்தாள். அதை கீழே வைக்கும்போது அம்மாவே குப்புற விழுந்து விடுவாளோ என்று எங்களுக்குத் தோன்றியது. அவர் அம்மாவின் கையிலிருந்த மிசினைப் பிடித்துக் கொண்டார். எங்களுடைய பயம் ஆதாரமில்லாமல் இருந்தது. அம்மா கவனமாக மிசினைத் தரையில் வைத்துவிட்டு புடவைத் தலைப்பினால் கைகளைத் துடைத்தவாறு அங்கிருந்த ஒவ்வொரு பொருளுக்கும் மிகவும் நுட்பமாக பேரம்பேச ஆரம்பித்தாள்.

அன்றைய தினம் தான் வெகுநாட்களுக்குப் பிறகு அப்பாவிடம் கடைத்தெருவிற்குப் போய்வரும்படியும், பிடிவாதம் பிடித்தாள். எங்களில் யாரும் அன்று பசிக்கவில்லை என்று முறையிடவில்லை.

ஆனால், இது அதிகநாட்கள் நீடிக்கவில்லை.அம்மா அப்பாவிடம் கேட்டாள் “நான் ஏன் ஏதாவது வேலை தேடக்கூடாது?”

“நீயா?” என்றார் அப்பா! “நீ என்னவேலை செய்வாய்?”

“எனக்கென்ன தெரியும் அதனால்தான் உங்களிடம் கேட்கிறேன்.”

“அதுதான் சொல்கிறேன் நீ இந்த எண்ணத்தை விட்டுவிடு. கொஞ்சநாட்கள் தான் இந்தக் கஷ்டமெல்லாம். பிறகு எல்லாம் சரியாகிவிடும்”

அந்தக் கொஞ்ச நாட்கள் கூட விரைவில் கழிந்துவிட்டன. கஷ்டங்களும், சிரமங்களும் முன்போலவே தொடர்ந்தன.இதன் பின் அம்மா தன்னைப்பற்றி அப்பாவிடம் எதுவும் பேசவில்லை. ஒருநாள் அந்த வட்டாரத்திலுள்ள இரண்டொரு பெண்களுடன் எங்கோ போயிருந்தாள். திரும்பி வந்தபோது தன்னுடன் நிறையத் துணிகள் கொண்டுவந்தாள்.

உடனே அவற்றை வெட்டவும் உட்காந்துவிட்டாள். மாலைக்குள் அநேக பிளவுசுகள் பெற்றிக்கோட்களை கத்தரித்து முடித்தபின் தன்கையாலேயே அவற்றைத் தைத்தும் முடித்துவிட்டாள். மாலையில் வீடு திரும்பிய அப்பாவும் இதையெல்லாம் பார்த்தார். வியப்படைந்து அவர் ஏதோ சொல்ல நினைத்தவர் மௌனமாக இருந்துவிட்டார். அம்மா இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறை போவாள், துணிகள் கொண்டுவருவாள் கத்தரிப்பாள், கையால் தைப்பாள் பிறகு அவர்களுடன் கடைக்குச் செல்லும் ஒரு பெண்மணி, மேல் தையல் போட்டுவிடுவாள். இதன் பின் கடைக்காரனிடம் துணிமணிகளைக் கொடுத்துவிட்டு வருவாள். ஆனால் தினசரி துணி எடுத்துவர முடியாது. வேலை கிடைக்காத நாட்களில் வெறுங்கையுடன்தான் திரும்ப நேரிட்டது.

அப்பா படிப்பது மறுபடியும் நின்றுபோனது. ஒரு நாள் அவர் திரும்பி வரும்போது அவருடன் முன்பின் தெரியாத புதிய மனிதன் ஒருவர் இருந்தார். அப்பா அவனை உட்காரவைத்து அலுமாரியில் இருந்த புத்தகங்களை ஒவ்வொன்றாக எடுத்து தரையில் வைக்கலானார். அந்த ஆள் பழைய பேப்பர், புத்தகங்களை விற்பவன். அவன் ஒவ்வொரு புத்தகமாகப் பார்த்துவிட்டு புத்தகத்தின் நிலைமைக்குத் தக்கபடி அவற்றைத் தனித்தனியாகப் போட்டுவைத்தான்.

புத்தகங்கள் யாவும் குவிக்கப்பட்ட பின் அவன் சற்றுநேரம் வரை விலைக் கணக்குப் போட்டுக்கொண்டிருந்தான். கடைசியில் ஒருவழியாக கணக்குப்போட்டு முடித்ததும் "எல்லாமாக இருபது ரூபாய் தேறும்" என்றார். இதுவரை அம்மா திகைப்புற்றவள் போல் இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தவள் இருபது ரூபாய் விலை என்று காதில் விழுந்ததும் அப்பா பதிலேதும் கூறும் முன்னரே முன்னால்வந்து இதெல்லாம் இப்படியே இருக்கட்டும் எங்களுக்குப் புத்தகங்களை விற்கவேண்டுமென்ற அவசியமில்லை என்றாள். பழைய புத்தகக் கடைக்காரன் குழம்பியவனாய் அப்பாவைப் பார்த்தான். உடனே அப்பா "இந்தாப்பா! அவள் சொல்வதைக் கவனிக்க வேண்டியதில்லை. இருந்தாலும் நீ போட்டிருக்கிற விலை ரொம்பவும் குறைவு" என்றார்.

"இல்லையில்லை நூறு ரூபாய் கொடுத்தால்கூட புத்தகங்களை விற்கவேண்டிய அவசியமில்லை" என்றாள் அம்மா. இவற்றையெல்லாம் என்னசெய்வது? படித்து முடித்தாயிற்றே இவைகளை விற்றுவிட்டு வேறு புத்தகங்கள் வாங்கிவருவேன். கடைசியில் பேரம் 50ரூபாவுக்கு ஒருவாறு படிந்தது. பழைய பேப்பர்க்காரன் புத்தகங்களை மூட்டையாகக் கட்டிக்கொண்டு போய்விட்டான். அப்பா அந்த ரூபாய்களை அம்மாவின் கையில் கொடுத்தவாறே "நீ வீணாக மனதை அலட்டிக்கொள்கிறாய். நமக்கு இப்போது நேரம் சரியில்லை" என்றார்.

"வேறு புத்தகங்கள் வாங்குவதற்காக இவற்றை விற்கின்றேன் என்றீர்களே உங்கள் மீது ஆணை இந்தப் பணத்தில் புத்தகங்களே வாங்கிக்கொள்ளுங்கள்..." அன்றைய தினம் அம்மாவால் தன்னை சமாளித்துக்கொள்ள இயலவில்லை. நெடுநேரம்வரை அழுதுகொண்டேயிருந்தாள்.

அடுத்தவாரம் அப்பாவிற்கு வேலை கிடைத்துவிட்டது. அவர் வீடு திரும்பியபோது தினமும்போல் சோர்ந்து களைத்திருக்கவில்லை. நிராசையுடன் கட்டிலில் நெடுநேரம் உட்காந்திருக்கவும் இல்லை. வீட்டிற்கு வந்ததுமே கைமுகம் கழுவிக்கொண்டு தானே "சாப்பாடு போடு" என்றார். அம்மாவிடம் பிறகு சாப்பிட்டுக்கொண்டிருக்கும் போது தான் தனக்கு வேலை கிடைத்துவிட்ட நல்ல செய்தியைக் கூறினார்.

"நான் நினைத்தேன்- இன்று ஏதோ விசயம் இருக்கிறது என்று..." அம்மாவின் முகம் மலர்ந்திருந்தது.

"சம்பளம் முன்பிருந்த வேலையைவிட பத்துரூபாய் குறைவு. இருந்தாலும் நான் சரியென்று சொல்லிவிட்டேன். வேலையில்லாமல் இருப்பதைவிட இது நல்லது"

மல்லு என்னுடன் சண்டை சச்சரவு போடுவதை நிறுத்தியிருந்தாள். அன்று நெடுநாட்களுக்குப் பிறகு என்னை விரலால் சுண்டினாள். நான் அவள் முதுகில் அடித்தேன். அவள் ஓடிப்போய் அம்மாவிடம் முறையிட்டாள். அம்மா எங்களை கோபித்துக்கொண்டாள். ஆனால் முகத்திலும், கண்களிலும் சிரிப்பு மின்னியது. எங்களுக்கு எங்கள் அப்பா அம்மாவை நீண்டநாட்களுக்குப் பிறகு பார்ப்பதுபோல் இருந்தது. அம்மா மல்லுவை எடுத்து கொஞ்சினாள். என்னையும் அன்போடு அருகில் அமர்த்திக்கொண்டாள்.

முதல் மாத சம்பளத்திலேயே எங்களுக்கு உடைகளும், காலுக்குச் செருப்பும் வாங்கப்பட்டன. அப்பா பழையபடி பழைய புத்தகங்களை வாங்கிவந்தார். அம்மா காய்கறி சாமன்கள் வாங்க கடைத்தெருவுக்குப் போகும்படி நச்சரித்தாள். அவரை எழுந்திருக்க வைக்க தன்னால் இயலாதபோது தன்தலைவிதியை நொந்து கொண்டாள். "நான் ஒரு அதிர்ஷ்டம் கெட்டவள்"

ஒருநாள் அப்பா திடீரென்று புத்தகங்களோ தினசரியோ எடுத்துக்கொண்டு வரவில்லை. நாங்கள் மீண்டும் எல்லாவற்றையும் வரிசைப்படுத்திப் பார்த்தோம். அன்றையதினம் மல்லுவின் பந்தை என்பையில் வைத்துக் கொண்டுவிட்டேன். அதற்காக அவள் ஒருநாள் முழுவதும் என்னுடன் சண்டைபோட்டுக் கொண்டிருந்தாள். ஆனால் இப்பொழுது அவளுக்கு தன் பந்தைப்பற்றி மறந்துவிட்டது.

தலையைக் கையால் பிடித்துக்கொண்டு அப்பா கட்டிலில் உட்காந்துவிட்டார். அம்மா எப்படியோ பாவம் தேநீர் போட்டுக்கொண்டுவந்து அப்பாவுக்கு முன்னால் ரீப்போவின் மீது வைத்தாள். அப்பா நெடு நேரம் வரை அதை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. அம்மா உள்ளூர நடுங்கிப்போய்விட்டாள் என்று தெரிந்தது. மிகுந்த சிரமப்பட்டு தனது உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு சொன்னாள் "தேநீர் ஆறிப்போகிறது குடியுங்கள்" என்றாள்.

"இதோ குடிக்கிறேன்"

"இன்று என்ன ஆயிற்று? ஏன் இப்படி உட்காந்திருக்கிறீர்கள்" தெரிந்து கொண்டே அம்மா கேட்டாள்.

"என்ன வேலையில இருந்து நீக்கிவிட்டார்களா?"

"இல்லை வேலையிலிருந்து நீக்கவில்லை"

"பின் ஏன் இப்படி உட்காந்திருக்கிறீர்கள்? உடம்பு சரியில்லையா?"

"இல்லை"

"பின்ன என்னவாம்?"

"இந்த வேலையை என்னால் செய்யமுடியுமா? என்று யோசித்துக்கொண்டிருந்தேன்"

"ஏன்?"

அப்பா சற்றுநேரம் எதுவும் பேசவில்லை.

"ஏன் பேசமாட்டேன் என்கிறீர்கள். வேலைநீக்கம் செய்யவில்லை என்கின்றபோது அப்படியென்ன யோசனை?" அம்மா இப்பொழுது சற்றே தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருந்தாள்.

"அது-வேலைநீக்கம் செய்வதைவிட பயங்கரமானது" என்றார் அப்பா மெதுவாக.

குமுட்டியை விசிறிக் கொண்டிருந்த அம்மாவின் கை சட்டென்று நின்றுவிட்டது. அப்பா தனக்குள்ளேயே பேசிக்கொள்வது போல் சொல்லிக் கொண்டிருந்தார்... "ஆமாம்! வேலைநீக்கத்தைவிட கூட பயங்கரமானது... புரிந்துகொள்"

"முன்பே இதுபற்றி உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியும், ஆனால் வேலைநிறுத்தம் செய்வதால் யார்யாரை வேலையில் இருந்து நீக்கிவிட்டு அவர்கள் இடத்தில் எங்களை வேலைக்கு வைத்தார்களோ அவர்கள் எல்லாம் இன்று ஊர்வலமாக வந்தனர். ஐம்பது அறுபது பேர். கூடவே அவர்களின் மனைவி பிள்ளைகள் கூட இருந்தனர். பொலிஸ் வந்து அவர்களையெல்லாம் லொறியில் அடைத்துக்கொண்டு போய்விட்டது"

"உங்கள் கூட வேலை பார்ப்பவர்கள் கூட இந்தமுடிவுதான் செய்திருக்கிறார்களா?"

"மற்றவர்களைப் பற்றி எனக்குத் தெரியாது" என்ற அப்பா தொடர்ந்து கேட்டார் "ஆனால் இனியும் அங்கு வேலைக்குப்போவது சரியா?"

அம்மா ஒன்றும் பேசவில்லை. அப்பா சற்றுநேரம் சும்மா இருந்தார். பிறகு சொன்னார் நீ ஒன்றுமே சொல்லவில்லையே! அங்கு வேலைக்குப் போவது சரியா?

"என்வாயால் பதிலை ஏன் கேட்கிறீர்கள். நீங்கள் போகாவிட்டால் போய்த்தான் தீரவேண்டுமென்று நான் பிடிவாதமா பிடிக்கப்போகிறேன்" குமுட்டி தணல் இதற்குள் முற்றிலும் அணைந்துவிட்டிருந்தது. அம்மாவின் கைகளுக்கு இப்பொழுது விசிறியை வீசும் சக்தியில்லை என்று எனக்குத் தோன்றியது... இனி மீண்டும் என்றாவது அதில் அண வீசுமோ, வீசமுடியுமோ? என்று கூடத் தோன்றியது.

அப்பா கட்டிலில் மல்லாந்து படுத்துக்கொண்டுவிட்டார். அவரது பார்வை எங்கள் இருவரின் மீதும் விழுந்தது. "நீங்கள் ஏன் இங்கே நிற்கிறீர்கள்?போங்க! வெளியேபோய் விளையாடுங்கள்"

"நாங்கள் காதில் விழாதது போல் இருந்தோம். அப்பா திடீரென்று கத்தினார்-"போங்க! ஏன் விளையாடப் போகவில்லை? போங்க... கொஞ்சநேரம் இந்த சமயத்தில் என் கண்ணெதிரேயிருந்து போய்விடுங்கள்" நாங்கள் மிரண்டுபோய் ஒரு மூலையில் பதுங்கிக்கொண்டோம். ஆனால் அவர் ஏன் இப்படிக் கத்துகிறார்? இது பற்றி எங்களால் எதையும் வரிசைப்படுத்த இயலவில்லை.

## அமைதியின் இறகு திலீபன்

அமைதியின் இறகுகளே - எங்கள்
ஆயுதம் திலீபனைப் பாடுங்கள்
புயலின் மழைகளே - எங்கள்
புலவன் திலீபனைப் பாருங்கள்.

மலரும் பூக்களே - எங்கள்
மறவன் திலீபனைப் பாடுங்கள்
புலரும் கதிர்களே - எங்கள்
பூங்கனி திலீபனைப் பாடுங்கள்.

வீசிடும் தென்றலே - எங்கள்
வேங்கை திலீபனைப் பாடுங்கள்
பேசிடும் அலைகளே - எங்கள்
பிள்ளை திலீபனைப் பாடுங்கள்.

ஆடிடும் சோலைகளே - எங்கள்
அரண் திலீபனைப் பாடுங்கள்
ஓடிடும் நதிகளே - எங்கள்
உயிர் திலீபனைப் பாடுங்கள்

சிரிக்கும் நிலவுகளே - எங்கள்
சிந்தனை திலீபனைப் பாடுங்கள்
துடிக்கும் தோள்களே - எங்கள்
தமிழீழம் திலீபனைப் பாடுங்கள்.

நல்லை அமிழ்தன்

## அன்றோர் நாள்

அன்றோர் நாள் - அது
இன்றைய நாள்
நல்லூர் முன்றலில் - திலீபன்
என்னும் இளந்தளிர் வாடியது.
தீ பட்டல்ல நீதி கேட்டு

நாவரண்டும் நீர் மறுத்தது
நீதி கிடைக்கும் வரை
அத்தளிர்
ஐந்தம்சக் கோரிக்கையை - முன்
வைத்து அகிம்சைவழி சென்ற
திலீபனை இம்சைப்படுத்தியது
அன்றைய பாரத அரசு

பன்னிரு நாளாய்
உயிர் பிரியும் நேரம்வரை
பாரதத்தின் பாதகத்தால்
பசி கிடந்தாய்
நல்லூர் வீதியிலே
பார்க்க மறுத்தது
பார்த்தீபனை
பாரத அரசு
அலை அலையாக - முட்டி
மோதியதோ நல்லூர் முன்றலில்
மக்கள் கூட்டம்.

எங்கும் பலகுரல் நீதி கேட்டு
கனத்தது எதிரொலித்தது.
கவிதையாக பேச்சாக
அனல் பறக்க முழங்கியது.
எட்ட மறுத்தது - இச்செய்தி
பாரதத்திற்கு.

மசிய மறுத்தது
மனித நேயமற்ற அரசு
இதனால் முழங்கியது ஓர் குரல்
வந்து பாரடா வந்து பாரடா
வாட முன் ஓர் சேதி சொல்லடா
வந்துபாரடா
புரட்சிக்கவிஞனின் வரி
அனல் தெறிக்க மின்னியது.

பார்த்தீபனை பார்த்தகண்கள்
விம்மி அழுதது கதறித்துடித்தது
இதயம்
வான் எட்டியது அழுகுரல்-இதனை அறிந்த வான்
விம்மி வெடித்தது தாமும் அழுதது
ஆனால் பாரதத்தை ஆண்டவரோ
பண்பாடு தெரியாத
இரும்புநெஞ்சம் படைத்தவர்கள்
இறுமாப்புக்கொண்டவர்கள் - இதனால்
இங்கோர் உயிர் துடிதுடிக்கிறது
கொள்கையில் தவறாமல் - தமிழ்
மக்கள் விடிவுக்காக
ஐந்தம்சக் கோரிக்கையை
முன்மொழிந்து - ஆனாலும்
முரணாக நிற்குது பாரதம் - இதனால்
முதுமை காணாமல்
இளந்தளிர் வாடிப்போகுது
திலீபன் என்னும் நாமத்தை
தியாகமாக இங்குவிட்டு.

ப.சேரமான்

## சொற்சிலம்பம் - 105

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ச | று | ய் | டு | ன | அ | ம |
| மா | கு | ல் | பா | ந் | மி | லா |
| கா | ரி | தி | ரோ | னி | ண் | வ் |
| வ | னா | ப | லி | ளை | கீ | இ |
| த | ட் | தா | ஷி | ர் | லி | து |
| ற் | ர் | ய | க் | ஸ் | க | வு |
| மூ | வா | கே | ன் | கி | த் | றீ |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 103 இன் விடைகள்

01. கற்ரீனா.

02. மகிழுந்து.

### சொற்சிலம்பம் - 103 இன் பரிசுக்குரியவர்

க.தனுஜிகா, தரம்$4^{A}$,
கிளி/இராமநாதபுரம் ம.வி,
இராமநாதபுரம்.

### சொற்சிலம்பம் - 103 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. பா.லினோசிகா, கற்சிலைமடு அ.த.க.பா, ஒட்டுசுட்டான்.
02. வி.சுஜிகரன், தரம்$5^{C}$, மு/ஸ்ரீசுப்பிரமணிய வி.சா, புதுக்குடியிருப்பு.
03 க.கபிலேஷ், தரம்$5^{C}$, மு/பாலிநகர் ம.வி, வவுனிக்குளம்.
04. சே.ரிசாந்தினி, தரம்-07, யா/புங்குடுதீவு ஸ்ரீகணேச, மகாவித்தியாலயம்.
05. ஜெ.நிறோஜனா, தரம்$6^{A}$, மு/உடையார்கட்டு ம.வி, உடையார்கட்டு.
06. ம.றிச்சட் ஜெயபாலன். தென்னிந்திய திருச்சபை, ஆண்கள் இல்லம் மாங்குளம்.
07. R.வினோ, 59 ஓப் பாக்றோட், பாக்றோட் வவுனியா.
08. கோ.ஜதுர்சிகா, மட்டுவில் நாடு மேற்கு, பூநகரி.

01. 01. ஐ.நா சபையின் எத்தனையாவது கூட்டத் தொடர் அண்மையில் நடைபெற்றது?

01) ......................................

02. நீரிலும் நிலத்திலும் வாழும் பிராணியின் பெயர்?

01) ......................................

சொற்சிலம்பம்-105
ஈழநாதம்.
யாழ்சாலை,
கிளிநொச்சி.

பெயர் :- ......................................

முகவரி :-......................................

......................................

......................................



## இளைய நாதம்

# தண்ணீர்ப் பாம்பு

நன்னீர் நிலைகளான ஏரிகள், நீரோடைகள், குளங்கள் முதலான இடங்களில் வாழ்பவைகளே தண்ணீர்ப் பாம்புகள். இவை அனைத்துமே நஞ்சற்றவை. தண்ணீப் பாம்புகளில் 1முதல் 1.5 மீற்றர் நீளம் வரை வளரக் கூடிய ஏராளமான இனங்கள் உள்ளன. அவை கொலுபிரிடே குடும்பத்தைச் சேர்ந்தவை.

பொதுவாக இவற்றின் உடல் மெல்லியதாகவும் இருக்காது, பருமனாகவும் இருக்காது. மரப் பாம்புகளைப் போல இவற்றினால் வேகமாகச் செல்ல முடியாது. ஆனால் நீரில் மிக நன்றாக நீந்தும். நம் நாட்டில் 20 வகையான தண்ணீர்ப் பாம்புகள் உள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை கீல்முதுகு என்ற இனத்தைச் சேர்ந்தவை.

இவற்றில் நீர்கோலி இனம் 1.2 மீற்றர் நீளம் வரை வளரக் கூடியது. கறுப்பு, மஞ்சள் என்று பல்வேறு வண்ணத்தில் கறுப்பு மற்றும் வெள்ளை நிற வடிவமைப்புகளுடன் காணப்படும். இதன் தலை நீளமாக இருக்கும். கண்களைச் சுற்றி கரிய கோடுகளும் உண்டு. இது இரவும் பகலும் இரை தேடும். யாராவது சீண்டினால் தலையை தட்டையாக வைத்துக் கொண்டு நல்ல பாம்பைப் போலத் தோற்றமளித்து அச்சுறுத்தும். இது கடிக்கக் கூடியது தான்; ஆனால் நஞ்சற்றது.

கோரைத் தண்ணீர்ப் பாம்பு மெல்லிய தலையுடன் அடர் பச்சை நிற உடலும் கொண்டது. இந்தப் பாம்பு எப்போதும் யாரையுமே கடிப்பதில்லை. இது கொசுக்களின் லார்வாக்களை விரும்பி உண்ணும்.

பரவலாகக் காணப்படும் மற்றுமோர் தண்ணீர்ப் பாம்பு நாய்த் தலையன். சதுப்பு நிலப் பாம்பான இதன் பற்கள் வாயின் பின்புறம்



அமைந்துள்ளது. இது பக்கவாட்டில் அசைந்து செல்லும். இரவு இரை தேடியான இதன் உணவு மீன்கள், தவளைகள் முதலியன. பெண் பாம்பு ஒரு தடவையில் 10 முதல் 30 குட்டிகள் வரை ஈனும்.

## நகைச்சுவை



"கணபதிக்கும் கொம்பியூட்டருக்கும் உள்ள ஒற்றுமை என்ன?"

"இரண்டிற்கும் அருகிலேயும் மௌஸ் இருக்குமே!"

## கைவண்ணம்



சு.கௌரீஷன், வவுனியா.

## காட்டில் பட்டம்



வாழ்க்கையின் எல்லா அம்சங்களுமே உடல், மனம், ஆன்மா, குடும்பம், தொழில், பொருளாதாரம் என்பவற்றில் தான் தங்கியுள்ளது. இந்த உலகத்தின் ஒவ்வொரு வளர்ச்சியும் ஒவ்வொரு மனிதனதும் அறிவாற்றலால், சிந்தனைகளால் செயல் வடிவமாகி உருப்பெறுகிறது. இந்த உலகத்தைச் சுற்றி வர சிந்திக்கும் மனிதனுக்கு தனக்குள் தன்னைத் தேடிக்கொள்ள முடியாது திண்டாடுவது இன்றுவரை அவன் காணும் பெரும் தோல்வியும் அவனது வாழ்க்கையின் பின்னடைவுமாகும்.

ஒருவன் தன்னை எப்போது முழுமையாகக் கண்டு கொள்கிறானோ அப்போது தான் அவன் வெளியுலகத்தையும், பிறரையும் கண்டுகொள்ள முடிகிறது. இன்றைய உலகில் ஏற்படும் வேகமான மாறுதல்களுக்கு ஏற்ப



தொழில்நுட்ப வளர்ச்சியானது துரிதமாக அதிகரிக்கிறது. அதற்கேற்ப மனிதர்களுக்கிடையில் போட்டிகளும் அதிகரிக்கின்றன.

எப்படி எப்படி புதிய கண்டுபிடிப்புக்களையும், தேடல்களையும் செய்ய முயற்சி செய்கிறானோ அதைப் போன்று தன்னைத் தான் தேட மறக்கிறான். இயந்திரமாய் வாழ்கிறான். உலகம் உருப்பெறுகிறது. ஆனால் அந்தளவிற்கு அவனது உடல், உள, குடும்ப உறவுகளின் பிணைப்பு வலுவாக உள்

# இது பெண்களுக்கு..!

ளதா? இல்லை. காலை எழுந்தால் அலுவலகம். வேலை வேலை என்று புறப்பட்டால் மாலையானதும் வீடு வந்தால் நாளை அந்த வேலை இந்த வேலை என்று அதைத்தான் சிந்திக்கிறார்கள். தனது வட்டம், தனது சுற்றம் பற்றிச் சிந்திக்கிறார்களா? குடும்பம், உறவு என்ற சூழலை தவிர்க்கிறார்கள். விரிசலை ஏற்படுத்துகிறார்கள்.

ஒரு மனிதனின் அவசிய தேவையென்று பார்க்கும்போது அவனது தொழில் தானா? குடும்ப உறவு என்பது எங்கே? ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே மாற்றிக்கொள்ள வேண்டும். இயந்திரமாய் வாழாது சுதந்திரமாய் வாழ வேண்டும். தொழிலுக்குச் செல்வதும், வருவதும் இது ஒரு இயந்திரமான வாழ்க்கை, உறவுகளுடன் அன்புடன் சேர்ந்து வாழுங்கள். சில கணங்களை செலவு செய்யுங்கள். வாழ்க்கையின் கணங்களைச் சிந்தியுங்கள். எவ்வளவு காலம் எப்படியிருந்தோம் என்று சற்றுச் சிந்தியுங்கள்.

இன்றைய சூழலில் பெண்களின் நிலையை எடுத்துக்கொண்டால் வெறுமையான ஒரு சுதந்திரமற்ற வாழ்க்கையாகத்தான் உள்ளது. எத்தனையோ பெண்களின் வாழ்க்கை இருளோடு போராடுகிறது. தனது குடும்பம், உறவுகள் என்று சிந்திக்கக்கூட கணங்களே இல்லை. சூழல் மாறும் போது புறச் சூழலால் உந்தப்பட்டு நெரிசலான வாழ்க்கைக்குள் அகப்படும் போதுதான் சிந்திக்க வேண்டுமா?

ஒவ்வொரு பெண்ணும் பொறுமையாய் இருப்பது எதற்காக? குடும்ப உறவுகளை வலுப்படுத்தவே. அதற்காக எல்லாவற்றையும் இழந்த வாழ்க்கையை பொறுமையாய் இருந்து ரசிக்க முடியுமா? குடும்ப ஒற்றுமை என்பது ஒரு பெண்ணின் பொறுமையால் தான் கட்டிக் காக்கப்படுகிறது. அந்தப் பெண்ணால் ஏன் தனது சுற்றத்தை வலுவுள்ளதாக மகிழ்ச்சியானதாக மாற்ற முடியாது. முடியும். பெண் சிந்திக்க மறுக்கிறாள். மணித்துளிகளின் ஒவ்வொரு நொடியையும் தானே நொந்து கொள்பவளாய் இருக்கிறாள்.

ஒரு பெண்ணின் சுகங்களும், சுமைகளும் அவளது சுற்றத்தில் தான் உள்ளது. அவளுடைய சுற்றம் உறவுகள் பலமாக அவளுக்கு அமைய வேண்டும். பெண்ணே உன் வாழ்க்கை பெருமைக்குரியது. உறவுகள்ள வலுவாக்கு. உனது சுற்றத்தை, சூழலை மட்டும் தேடாதே. உனக்குள் உன்னைத் தேடிக்கொள். அப்போது புரியும் உனது வாழ்க்கையின் கணங்களின் பெறுமதி.

**ஈழவிழி**

## பாகற்காய்க் கறி




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| பாகற்காய் | - 250 கிராம் |
| சின்ன வெங்காயம் | - 4பல்லு |
| பச்சைமிளகாய் | - 2 |
| மிளகாய்த்தூள் | - $1^1/_2$ தேக்கரண்டி |
| தேங்காய்ப்பால் | - 1/2 தம்ளர் (முதற்பால்) |
| இளநீர் | - 1தம்ளர் |
| வெந்தயம் | - 1/2 தேக்கரண்டி |
| பழப்புளிக்கரைசல் | - 3 மேசைக்கரண்டி |
| உப்புத்தூள் | - அளவாக |
| கறிவேப்பிலை | - அளவாக |

செய்முறை:-

★ பாகற்காயைச் சுத்தம் செய்து நடுத்தரத் துண்டுகளாக வெட்டவும்.

★ வெங்காயம், பச்சைமிளகாய், கறிவேப்பிலையைச் சுத்தம் செய்து அளவாக வெட்டிக்கொள்ளவும்.

★ வெட்டிய பாகற்காய், வெங்காயம், பச்சைமிளகாய், கறிவேப்பிலை, வெந்தயம் யாவற்றையும் சேர்த்து அதனுடன் இளநீர், புளிக்கரைசலை விட்டு மெல்லிய நெருப்பில் மூடி வேகவிடவும்.

★ பாகற்காய் மசிய வெந்ததும் தேங்காய்ப்பால், மிளகாய்த்தூள், உப்பு இவற்றைச் சேர்த்துக் கொதிக்க வைத்துக் கறி கூட்டுப்பதமாகியதும் இறக்கிக்கொள்ளவும்.

# வீடு

இன்றைய வீடுகளில் வாழும் பெற்றோர்களை மிகவும் சிக்கல் கொள்ள வைக்கும் விடயமாக பிள்ளைகளின் கல்விநிலை உள்ளது.

இவ்விடயத்தில் விழிப்போடு இருக்க வேண்டியவர்கள் பெற்றோர் மட்டுமல்ல,



# இது பிள்ளைகளுக்கு..!

பிள்ளைகளும்தான்.ஒரு மனிதனை பூரணமாக்குவது அவனது கல்வியும் சமூக அனுபவமுமே. இவற்றை மறந்து இன்றைய வீடுகளில் இருக்கும் மாணவப்பராயப் பிள்ளைகள் கண்மூடித்தனமாகச் செயற்படுகின்றனர்.

எந்தவொரு பிள்ளையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே, அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே என்று கவிஞன் பாடினான். இக்கூற்றில் உண்மையுண்டு. ஆனால் நல்ல அன்னையின் அரவணைப்பில் வளரும் பிள்ளை தன்னுடைய ஒரு குறிப்பிட்ட பருவத்தில் மட்டுமே அன்னையுடன் இருக்கின்றது.

அக்காலத்தில் நற்குணங் களை பழகும் பிள்ளை வளர்ந்து பல பேருடன் பழகுகின் றான். அப்போது அக்குழந்தை வாலிபனாகவோ சிறுவனாகவோ இருக்கும் அந்நிலையில் சுயமான புத்தி என்பது அவர்களுக்கு வேண்டும். நல்ல விடயங்கள், கெட்டவிடயங்கள் என்பவற்றை தெரிவு செய்து நல்விடயங்களை கற்றுக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக ஒரு குடும்பத்தை எடுத்துப்பார்ப்போம். அங்கு பெற்றோர் நல்ல கெட்டிக்காரர்களாய் இருப்பார்கள். ஆனால் பிள்ளைகள் அப்படியில்லாமல் படிப்பிலும் அக்கறையற்று இருப்பார்கள். பிள்ளைகள் இவ்விடயத்தில் மிகவும் விழிப்போடு இருக்க வேண்டும். பெற்றோர் எமக்கு பாடம் சொல்லித்தருவார்கள். ஆனால் அதனை நாம் தான் கிரகித்து படிக்கவேண்டும். எவ்வளவு நேரம் படிக்கிறது என்பது முக்கியமல்ல எவ்வளவு எம்மனதில் பதிந்துள்ளது என்பது தான் முக்கியம்.

பிள்ளைகள் படிக்கும் போது ஒரு வெறியுணர்வை மனதில் ஏற்படுத்தி படிக்க வேண்டும். சும்மா படிப்பம் என்று படித்தால் எம் வாழ்வு வெற்றிப்படிகளை அடைய முடியாது. பள்ளத்துள் தான் எம்வாழ்வு விழும் என்பதை மாணவர்கள் சிந்திக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் எப்படி நாம் உருவாக வேண்டும் என்பதை மனதில் நினைக்க வேண்டும். நினைப்போடு மட்டுமல்ல அதனை செயல் முறைப்படுத்தி படிக்க வேண்டும்.

பெற்றோரின் பெயர் காப்பது பிள்ளைகளின் கடமை என்பதை ஒவ்வொரு பிள்ளையும் உணரவேண்டும். எந்தப் பெற்றோரும் தம் பிள்ளைகளை கூடாத நிலைக்கு வர விரும்பமாட்டார்கள். இன்று கல்வியை கண்மூடித்தன மாக கற்றால் நாளைய நாட்டில் எப்படி தலை நிமிர்ந்து நிற்க முடியும் என்ற கேள்வி ஒவ்வொரு மாணவன் (மாணவி) மனதிலும் எழவேண்டும்.

மிகவும் வறிய குடும்பங்களில் உள்ள பிள்ளைகளை எவ்வளவோ சொல்லொணாத் துன்பங்களைத் தாங்கி படிக்க வைக்கின்றனர் பெற்றோர். அதனை அறிந்தும் அசட்டையாக இருந்து விடுகின்றனர் பிள்ளைகள். ஒரு தாய் தன் பிள்ளையைப் பற்றி நல்ல செய்தி வராதோ என பல நாட்கள் என்ன தன் ஆயுள் முடியும் வரை காத்திருப்பாள். தன் பிள்ளையின் நல்ல நிலைக்காக எத்தனையோ தியாகங்களையும் செய்யத் தாயுள்ளம் தயங்கமாட்டாது.

பணத்தை கொணர்ந்து கொடுத்து பெற்றொரை சந்தோசப்படுத்த முடியாது. நல்ல பெயர் எடுக்க வேண்டும். இன்னாருடைய மகனா இவன். வலு கெட்டிக்காரன். பல சாதனைகளைச் செய்கின்றான் என ஊர் உலகம் மெச்சும் படி நடக்கவேண்டும். பிள்ளைகளே பணத்தில் மட்டும் கவனம் வைக்காமல் படிப்பில் அக்கறை காட்டுங்கள். உங்கள் பெற்றோர் மனங்களை குளிர வையுங்கள். உங்கள் மனதில் எப்பவும் வெறி கொண்ட கல்வியுணர்வு எழவேண்டும் அப்போது தான் இந்நாட்டிற்கும் வீட்டிற்கும் நல்ல பெயர் வாங்கிக் கொடுக்க முடியும்.

**சு.சிவாஜினி**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கிழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்– 66

பெயர்:..................................................

முகவரி:..................................................

..................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# ஏ9-ஏரம்பு

உலா 51

# தனித்திருந்தால் குச்சித்தடி; சேர்ந்திருந்தால் குண்டாந்தடி..!



வணக்கம் வணக்கம் எல்லாருக்கும்! எப்பிடி எல்லாரும் இருக்கிறீயள்? யூலை மாதத்தை மாதிரியே இந்த செப்ரெம்பர் மாதமும் எங்கட இனத்துக்கு சரியான முக்கியமானது பாருங்கோ. எல்லாச் சம்பவங்களுக்கும் மேலாக எங்கட தம்பி திலீபன் எண்ட ஒரு சரித்திரம் எங்களுக்கு மத்தியில தன்னை உருக்கி வெளிச்சம் தந்த மாதமெல்லோ இது. அவன் தருவான், இவன் தருவான், எங்களால என்ன முடியும், தாறதை வேண்டிக்கொண்டு ஏதோ அனுசரிச்சு இருக்கப்பார்ப்போம் எண்டெல்லாம் அற்பத்தனமான எதிர்பார்ப்புகளோட இருந்த எங்கட இனத்துக்குப் பலதையும் தெளிய வைக்கிறதுக்காக, தன்னை பசித்தீயில உருக்கின அந்தத் தம்பியின்ரை உன்னதமான தியாகம் நடந்தேறின மாதமெல்லே!

இந்தியன் எங்களை ஏமாத்த வந்தவன் எண்டிறதை ஆரம்பத்திலயே தன்ரை உயிரிலை தீமூட்டி வெளிச்சம்போட்டுக் காட்டின எங்கட அந்தத்தம்பி மனிதத்தின்ரை உச்சம் பாருங்கோ! அப்பிடி முக்கியத்துவம் வாய்ந்த மாதத்தில மாவட்டரீதியாக எங்கட சனம் நடத்திற எழுச்சித் திருவிழாக்கள் அதிகமாய் இடம் பெறுகிறதும் நல்ல பொருத்தமாயிருக்கு.

எங்கையாவது ஒருசிலர் யோசிக்கலாம், நாங்கள் உவ்வளவு எழுச்சியாய் முன்னெடுத்த செய்தியளை பிபிசி தமிழோசையே சொல்லாமல் அமத்தீட்டிது. அப்பிடியிருக்க சர்வதேச சமூகம் கவனிச்சிருக்குமோ எண்டு. சிங்கள ராணுவத்துக்குத் தடிமன் பிடிச்சாலே புலியள்தான் காரணம் எண்டு குற்றம் சாட்டிற படைத்தரப்பை ஒரு தரப்பாய் மதிச்சு பேட்டியெடுக்கிற பிபிசிக்கு, ஒரு லட்சம் சனம் ஒன்றுகூடின விசயம் தெரியாமல் இருக்காது. கண்ணை மூடிக்கொண்டு ஒளிக்கிறதாய் நினைச்சு பால்குடிக்கிற பூனையைப் போலத்தான் அரசாங்கம் அதிகமாய் பயப்பிடிற இந்த மக்கள் எழுச்சிகளை அடக்கேலாட்டியும், அது நடந்ததெண்ட செய்தியள் பரவிறதையெண்டாலும் அடக்கலாம் எண்டிற அரசாங்கத்தின்ரை அற்ப ஆசையால ஏற்பட்ட நெருக்கடிதான் உதுக்குக் காரணமெண்டு நான் அடிச்சுச் சொல்லிறன்.

எங்கையாவது ஒருசிலர் யோசிக்கலாம், நாங்கள் உவ்வளவு எழுச்சியாய் முன்னெடுத்த செய்தியளை பிபிசி தமிழோசையே சொல்லாமல் அமத்தீட்டிது. அப்பிடியிருக்க சர்வதேச சமூகம் கவனிச்சிருக்குமோ எண்டு. சிங்கள ராணுவத்துக்குத் தடிமன் பிடிச்சாலே புலியள் தான் காரணம் எண்டு குற்றம் சாட்டிற படைத்தரப்பை ஒரு தரப்பாய் மதிச்சு பேட்டியெடுக்கிற பிபிசிக்கு, ஒரு லட்சம் சனம் ஒன்றுகூடின விசயம் தெரியாமல் இருக்காது. கண்ணை மூடிக்கொண்டு ஒளிக்கிறதாய் நினைச்சு பால்குடிக்கிற பூனையைப் போலத்தான் அரசாங்கம் அதிகமாய் பயப்பிடிற இந்த மக்கள் எழுச்சிகளை அடக்கேலாட்டியும், அது நடந்ததெண்ட செய்தியள் பரவிறதையெண்டாலும் அடக்கலாம் எண்டிற அரசாங்கத்தின்ரை அற்ப ஆசையால ஏற்பட்ட நெருக்கடிதான் உதுக்குக் காரணமெண்டு நான் அடிச்சுச் சொல்லிறன்.

மற்றது பாருங்கோ தாங்கள் பார்க்கவேண்டிய விசயங்களை பார்க்கிற விசயத்தில சர்வதேசங்கள் வலு அவதானமாயிருக்கும். அதுக்கு பிபிசியோ, சிஎன்என், ரூபவாகினி ஒண்டும் படம் பிடிச்சிருக்கோணும் எண்டிற அவசியமில்லை. உதவி நிறுவனங்களாய் உலவிவாற பலரும் தங்கட நாடுகளுக்கு இஞ்சை மக்களிடையே ஏற்பட்டிருக்கிற இந்த பாரிய எழுச்சியை விபரிச்சிருப்பினம். கூடவே மூண்டரை வருசமாய் ஆள் மாறிமாறி எங்களுக்கு சூய்காட்டிக் கொண்டிருப்பினம், ஈயெண்டுகொண்டு பார்த்துக்கொண்டிருக்கிறதுதான் தமிழரின்ரை விதியெண்டு தப்புக் கணக்குப் போடிற சிங்கள ஆதிக்க சக்தியளுக்கு எங்கட நிலைப்பாட்டை ஞாபகப்படித்திற ஒரு நடவடிக்கையும்தான் இது.

மற்றது இன்னுமொரு விசயம் இதுக்குள்ளை பொதிஞ்சிருக்கு. அதாவது என்னை மாதிரி ஒரு அப்பு தன்ரை மகன்மாரைக் கூப்பிட்டு 7 குச்சியைக் குடுத்து முறிக்கச் சொன்ன ஒற்றுமை பற்றின கதை உங்களுக்குத் தெரியும்தானே. அதேபோல தனிச்சிருக்கேக்கிளைதான் நாங்கள் எல்லாரும் முறிபடக்கூடிய குச்சி! தலைநிமிர்ந்து, ஒற்றுமையாய் சேர்ந்திருந்தோம் எண்டால் குண்டாந்தடி!

அப்பிடியான ஒரு தத்துவத்தை நாங்கள் ஒவ்வொருத்தரும் உணர்ந்து மனோதைரியம் பெறுகிறதுக்கான ஒண்டாகவும் இது இருக்கிது. அண்டைக்கு திலீபன் தம்பி சொன்னது இண்டைக்கு முழுமையான யதார்த்தமாய் ஆகீட்டதோட, முழுத் தமிழினமும் தேசியத்தலைவரின்ர வழியையும், வாக்கையும் மனசில நிறைச்சுக்கொண்டு எதையும் எதிர்கொள்ளத் தயாராயிட்டிது.

அப்பிடியிருக்க கொழும்பில என்னடாவெண்டால் தேர்தல் பம்பல்கள் அந்தமாதிரி சூடுபிடிச்சிருக்கிது. ஆரார் எந்தெந்தக்கட்சி எண்டு விளங்கிக்கொள்ளேலாத அளவுக்கு ஒவ்வொருத்தற்றை அறிக்கையளும் அதைவிட பேய்ப்பம்பல் பாருங்கோ! எங்கட வெளிநாட்ட மைச்சர் குண்டுமணி கவுண்டமணி கனக்க சொல்லியிருந்தாலும் ஒரு விசயம் மட்டும் சரியான ஓவர் பாருங்கோ.

தங்கட பண்டாரநாயக்கா family இல ஒருத்தரின்ரை கையிலையும் ரத்தக்கறையும் இல்லை, கள்ள வங்கிக்கணக்கும் இல்லை எண்டிருக்கிறார். ஓமோம் அவையின்ரை கையில கறை இருக்காது. ஏனெண்டால் உடன கழுவிப்போடுவினம் தானே ! ஆனால், ராஜபக்ச 80 மில்லியன் ரூபாவைச் சுருட்டின 'ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை' விவகாரத்தை தம்பியர் குத்திக்காட்டியிருக்கிறார். உந்தக் கறளுக்கு நாளைக்கே ராஜபக்ச ஜனாதிபதியாய் வந்தால் குண்டுமணியை குச்சிமணி ஆக்கிறமாதிரி ஏதாவது கட்டாயம் நடக்குமெண்டு நாங்கள் எதிர்பார்க்கலாம். ஆ... உதைச் சொல்லேக்கிளை தான் அடுத்த ஜனாதிபதி ஆராயிருக்கும் எண்டு நாங்கள் கொஞ்சப்பேர் முந்தநாள் தேத்தண்ணிக்கடையடியில கதைச்ச விசயங்களும் ஞாபகத்துக்கு வருகிது.

இடதுசாரியள் எண்டு சொல்லப்படிறவை உட்பட சிங்களக்கட்சியள் ஒவ்வொண்டும் எப்பிடிப்பட்டதெண்டு கிட்டத்தட்ட போன நூற்றாண்டின்ரை தொடக்கத்தில இருந்தே ஒவ்வொண்டாய் மாறி மாறி, மாறி மாறி கடைசித்துளி அற்ப நம்பிக்கை காய்ஞ்சு போகிற வரைக்கும் நாங்கள் பட்டுத்தெளிஞ்சிட்டம். அப்பிடியிருந்தும் தெளிவு குறைஞ்ச சர்வதேசமும் விளங்கிக்கொள்ளட்டும் எண்டு தலைவர் விரும்பினதாலோ என்னவோதான் இந்த போர்நிறுத்தமும் ஏற்படுத்தப்பட்டிது.

இந்தப் போர்நிறுத்தத்தை புலியள் தங்களைப் பலப்படுத்திறதுக்காக பயன் படுத்தீட்டினம் எண்டு அமரர் கதிர் குமார் (டெல்லி வானொலி இப்பிடித்தான் உச்சரிக்கிறது) உட்பட சிங்களப் புத்திசீவியள் குற்றம் சாட்டிறவை. அது உண்மையோ, பொய்யோ எண்டு ஆராய வேண்டிய அவசியம் தமிழ் மக்களுக்கு இல்லை.

ஆனால், எவ்வளவுதான் ஆயுத தளபாடங்களை வாங்கிக் குவிச்சாலும் இந்த யுத்தநிறுத்தத்தை சிங்களத் தரப்பு அரசியல்ரீதியாக தங்களைப் பலவீனமாக்கிறதுக்குப் பயன்படுத்தியிருக்கிது. அதிலையும் மீள முடியாத ஒரு பாதாள வீழ்ச்சியை முழுச் சிங்களமும் சந்திச்சுக்கொண்டு வருகிது. தலைவரின்ரை ஒவ்வொரு கட்ட நகர்வையும், அதால எங்கட இனத்துக்குக் கிடைக்கிற பலாபலன்களையும் உடன விளங்கிக் கொள்ள முடியாவிட்டாலும், வரலாற்றின்ரை பக்கங்களில நிகழ்வுகளாய் நடக்கிற நேரத்தில எங்களால புரிஞ்சுகொள்ள முடியுது.

அதாலதான் மற்றக்கட்சிகளின்ரை நிபந்தனையளை மட்டுமே தேர்தல்-விஞ்ஞாபனமாய் கொண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி முக்கிக்கொண்டு இருக்கிது. ஜேவிபியோட 12 நிபந்தனை, ஹெல உறுமயவோடயும் ஒரு 12, இனி வாற வாற மிச்சசொச்சங்கள் எண்டு கொஞ்சம்... அப்ப நினைச்சுப் பாருங்கோ நாளைக்கு நிலைமையை! அதேநேரம் ஐதேக மட்டும் என்ன திறமே? சில கொழும்பு ஊடகங்கள் "சமாதானத்துக்கான தவிர்க்கமுடியாத தேர்வு ஐதேக தான்" எண்டமாதிரி சாதிக்க முயலிற நரி விளையாட்டில நாங்கள் கவனமாய் இருக்கோணும்.

ஏனெண்டால் கொஞ்ச நாளைக்கு முன்னால அவசரகாலத் தடைச்சட்டம் கொண்டுவாறதுக்கான வாக்களிப்பில அதுக்கு ஐதேக தன்னோட முழு ஆதரவையும் தெரிவிச்சது மட்டுமில்லாமல், ஒருபக்கம் சமாதான முகத்தோட பந்தியில அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டே, மறைவில கருணாவை வைச்சு தன்ரை கழுத்தறுப்புக்கனவில கிடந்தது தான் ஐதேக எண்டிற 'நல்ல பாம்பு'. ஓமோம், பேரில இருக்கிற 'நல்ல' அதின்ரை பயங்கரமான விசத்தைத் தான் குறிக்கிது. ஆனாலும், எந்தக் கட்சி வேட்பாளர் வந்தாலும் மாறிமாறி 3 கட்சியளும் கொழுத்திவிட்ட பேரினவாதத்தீ, தமிழ்த்தேசிய இனத்தை சகமனுசராய் ஏற்றுக்கொள்ளிறதுக்கு அந்தக்கட்சியளை அனுமதிக்கப்போறேல்லை.

அப்பிடி வெளிநாட்டு அழுத்தங்களுக்காக ஏதாவது செய்தே தீர வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டாலும் அதை பேரினவாதம் அனுமதியாது, ஆட்சியைக் கவிட்டிடும். அந்த வகையிலதான் தம்பி தமிழ்ச்செல்வன் சொன்ன "இந்த ஜனாதிபதித்தேர்தல் எங்களுக்குச் சம்பந்தமில்லாதது" எண்டதை நாங்கள் விளங்கிக்கொள்ளோணும். நம்மைப் பற்றி ஒரு விதமான கரிசனையும் காட்டாமல் நம்மை அழிக்கிறவர்களுக்கும், நமக்காக முதலைக்கண்ணீர் விட்டுக்கொண்டு நம்மை அழிக்கிறவர்களுக்கும் இடையிலானதே நமக்கு முன்னால் உள்ள தெரிவு எண்டு தினக்குரலில கோகர்ணனும் குறிப்பிட்டிருந்தவர்.

திரும்பவும் ஒரு நப்பாசையில போய் தமிழன் ஏமாறுவான் எண்டு எதிர்பார்க்கிறதுக்கு இது முந்தியைப் போல தமிழன் கை தட்டின காலம் இல்லை. ஆயிரம் ஆயிரமாய் பொது மக்களும் துப்பாக்கி தூக்கிப் போராடிற பிரபாகரன் காலம் பாருங்கோ ! அப்ப சந்திரிகாவின்ரை காலம் என்ன மாதிரியெண்டு நீங்கள் குறும்புக்காரர் கேட்பியள். அவாவை அண்மையில உலகிலேயே ஆளுமை கொண்ட பெண்களைத் தெரிவுசெய்த ஒரு சஞ்சிகை 24 அல்லாட்டி 25 ஆவது இடத்தில ஒண்டை அவாவுக்கு குடுத்திருந்தது.

எட சொந்தக்கட்சியில ஒரு மனுசியெண்டு மதிப்பில்லை. கேட்காமல் கொள்ளாமல் ஆளாளுக்கு ஏதேதோ அலுவல்கள் பார்க்கினம். முந்தியொரு காலத்தில அவா வெருட்டினால் மிரளிறவை எல்லாம் இப்ப ஏனெண்டு எப்பனும் கவனிக்கிறேல்லையாம். ஜேவிபிக்குப் பயந்து ரோசத்தை விட்டு ஐதேகட்சிக்கு தாவலாமோ எண்டுவேற ஐடியாவில கதையள் போகுது. பாவம் மனுசி பெரிய ஆளுமைக்காரி எண்ட கணக்குக்கு குடுக்கப்பட்ட விலாசம் கிண்டல் பண்ணிற வேதனையில நொந்துபோய் இருக்கிதாம்.

நான் இவ்வளவையும் கதைச்சுக்கொண்டிருக்க நீங்கள் யோசிப்பியள். என்னடா மனுசன், குந்தில இருந்து கதைக்காமல் கனநேரமாய் நிக்கிதெண்டு. இருக்கச்சொல்ல வேணும் எண்டுகூட நினைச்சிருப்பியள். இந்த வயசுபோன காலத்தில ஆசையிலயே நிண்டு கதைக்கிறன்! முடியுமெண்டால் இருந்திருப்பன் தானே. ஆனால், என்ர குந்தில இருக்கேலாத நிலைமை பாருங்கோ எனக்கு. இல்லையில்ல அடிதடியெண்டு நான் ஏன் போறன் ! கதிரையில இருந்தனான், உணர்ச்சிவசப்பட்டு விளிம்புக்கு வந்து விழுந்ததில பலமான அடியுங்கோ!

உங்கை பக்கத்து நாட்டில வெள்ளையும், சொள்ளையுமாய் பாட்டுகள் எழுதிறவர் ஒருத்தர் உங்களுக்கு கட்டாயம் தெரிஞ்சிருக்கும். நல்ல திறமைசாலி தான்! விருதுக்கு ஒரு பாட்டையும், வியாபாரத்துக்காக மொழியை உரிஞ்சுபோட்டு இருபது பாட்டையும் எழுதிப்போட்டு, லட்சியவாதி மாதிரி தன்னைக் காட்டிறதிலையும் திறமைசாலி தான். இருந்தாலும் தொழிலாளர் குடியரசு முன்னணி எண்டதொரு அமைப்பு அவருக்கும், அவரை முன்மாதிரியாய் பின்தொடரிற வேறசிலருக்கும் எதிராய் வழக்குத் தொடுத்திருக்கிது.

பெண்களை படுமோசமாய் இழிவுபடுத்திற இவையின்ரை குப்பை வரிகளைச் சகிச்சுக்கொள்ளேலாமல் தான் அப்பிடி அந்த முன்னணி செய்திருக்கிதாம். உதையெல்லாம் அங்கத்தைய அரசாங்கம் கவனிக்கும்தானே எண்டு நீங்கள் சொல்லலாம். படம் வந்து 3 வருசமாய் ஓடித் திரிஞ்ச பிறகு அது ஊத்தைப்படம் எண்டு தடைசெய்யிற அரைகுறையளாலான தணிக்கைக்குழுவை என்னண்டு சொல்லிறது! மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்த வேணும் எண்டு சொன்ன பாரதியாரை ஒருபக்கம் பாடிப்போட்டு, காதால கேட்கேலாத பாட்டுகளையெல்லாம்(?) எழுதித்தள்ளிற உந்தப் போக்காளரில ஒருத்தர் "தமிழனுக்கு உணவில்லை என்றால் சதையை அறுத்தும் தருவேன்" எண்டு பாடினதை வானொலியில கேட்டு கதிரை விளிம்புக்கு வந்து, கவிண்டு விழுந்து போனன். நல்ல அடிதான்!

அதிலையும் எனக்கு வேறையொரு கறள் பாருங்கோ! இல்லை நான் ஆம்பிளை. பொம்பிளையளைப் பற்றி ஆரெழுதினாலும் எனக்கென்ன எண்டிருக்கலாமோ இல்லையோ? அதென்ன ஆக்கள் சொல்லிற வசனமொண்டு! ஆ... சேத்தில எழும்பி குளத்தில கழுவிறதோ ஏதோ எண்டு! இருந்தாலும் சரியில்லை எண்டு நான் அவையின்ரை சமாச்சாரங்களை எழுதிறன். வேறென்ன எல்லாருக்கும் அப்ப ரற்றா சொல்லப்போறன்.

எமது அன்றாட உணவில் மரக்கறியின் பங்கு கணிசமானது. மொத்த உணவுச் செலவில் கிட்டத்தட்ட 10 சதவீதம் மரக்கறிக்கு செலவாகின்றது என்பது ஒரு பழைய கணிப்பீடு.

உணவில் பழங்கள்-மரக்கறிகள் என்பன மிகப் பெறுமதியானவையாகவும் பாதுகாப்பான உணவாகவும் கருதப்படுகின்றது.

எனினும் பழங்களை விட மரக்கறி விலை குறைந்ததாகவும் இருப்பதனால்




## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

பிரதான உணவுடன் கணிசமான அளவு சேர்க்கப்படுகின்றது.

சாதாரணமாக மனிதர்களுக்குத் தேவையான உணவில் புரதம், கல்சியம், இரும்பு, உயிர்ச்சத்து சி, உயிர்ச்சத்து ஏ என்பன மரக்கறிகள் மூலம் கிடைக்கின்றன.

இதனால்தான் அன்றாட உணவில் கிட்டத்தட்ட 100 கிராம் அளவாவது மரக்கறிகள் இருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது.

இவ்வாறு எமது உணவில் பிரதான இடத்தை வகிக்கும் மரக்கறிச் செய்கை தொடர்பாக நாங்கள் அதிக அக்கறை காட்ட வேண்டியது அவசியமாகும்.

அநேகமாக மரக்கறி வகைகள் மூன்று அல்லது நான்கு மாதங்களை தமது காலப்பகுதியாகக் கொண்டவை. எனவே உரிய முறையில் பொருத்தப்பட்ட முறையில் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதன் ஊடாகவே சிறப்பானதும் லாபகரமானதுமான மரக்கறிச் செய்கையை மேற்கொள்ள முடியும்.

எனினும் மரக்கறிச் செய்கைக்கு சேதனப் பசளை தேவையானதாகும். சேதனப் பசளையானது மண்ணுக்கு சிறப்பான போசனையை வழங்குவதுடன் மண்ணில் நீர் தேங்கும் தன்மையையும் அதிகரிக்கச் செய்கிறது.

மாட்டெரு, பசுந்தாட் பசளைகளான மரக் குழைகள், சணல் போன்றவற்றில் சிறப்பான சேதனைப்பசளைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

மரங்களில் இலைகளால் பெறப்படும் குப்பைகள் போன்றனவும் சேதனைப்பசளைக்கு உரியன. இவை எல்லாம் எமது விவசாயிகளுக்கு தெரியாத விடயங்கள் அல்ல.

எனினும் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் இரசாயன கிருமிநாசினிகளை, உரங்களை பாவிப்பதைத் தவிர்த்து இத்தகைய இயற்கையான பசளையை கூடியளவில் பாவிக்க விவசாயிகள் முன்வரவேண்டும்.

# தூவல் நீர்ப்பாசனம் ஒரு பயன்தரும் பொறிமுறை

(சென்றவாரத் தொடர்ச்சி)

**தீமைகள்:-**

01) தூவல் நீர்ப்பாசனம் செய்யப்படும் பொழுது பயிர் சுற்றாடலில் வெப்பநிலை குறைக்கப்பட்டு ஈரப்பதன் கூட்டப்படுவதால் காற்று வாழ பூஞ்சணத்தால் ஏற்படும் நோய்களின் தாக்கம் உயர்வாகக் காணப்படும்.

02) தூவல் நீர்ப்பாசனம் ஆனது மிகக் குறைந்தளவு விஸ்தீரணத்தில் விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கும் சிபார்சு செய்ய முடியாது. ஆகக் குறைந்தது 1/4 ஏக்கர் விஸ்தீரணமானது செய்கைக்குட்பட்டிருத்தல் வேண்டும்.

03) 1/4 ஏக்கர் செய்கைக்குரிய தூவல் நீர்ப்பாசனத்திற்கான செலவு நீர்ப்பம்பி தவிர ரூபா 25000.00 ஆகும். மூலதனச் செலவு உயர்வாக இருப்பதால் பொருளாதார வசதியுடைய விவசாயிகளே இத் தூவல் நீர்ப்பாசனத்தைப் பாவிக்கக் கூடியதாக இருக்கிறது.

தூவல் நீர்ப்பாசனத்தை தெரிவு செய்யும் போது கவனிக்கப்பட வேண்டியவை.

**01. மண்ணின் தன்மை:-**

தூவல் நீர்ப்பாசனம் ஆனது சகல வகை மண்களுக்கும் பாவிக்கப்படக் கூடியதாயினும் அதி கூடிய ஊடு புகவிடும் தன்மையுடைய மணற்பாங்கான மண்ணிற்கு இத் தூவல் நீர்ப்பாசனம் அதி சிறந்தது. தூவல் நீர்ப்பாசனத்தில் பயன்படுத்தப்படும் விசிறியின் விசிறல் அளவானது மண்ணின் ஊடுபுகவிடும் தன்மையினைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது. எப்பொழுதும் விசிறியின் விசிறல் அளவானது மண்ணின் ஊடுபுகவிடும் தன்மையை விடக் குறைவாக இருத்தல் வேண்டும். கூடவாக இருப்பின் மேற்பரப்பினூடாக நீரானது வழிந்தோடி மண்ணரிப்பையும் ஏற்படுத்தி விடும்.

மண்ணின் நீரைப் பிடித்து வைத்திருக்கும் தன்மையானது நீர்ப்பாசன நேரத்தையும் நீர்ப்பாசன இடைவெளியையும் தீர்மானிக்கிறது.

கூடிய நீர் பிடித்து வைத்திருக்கும் தன்மையுடைய மண்ணிற்கு கூடிய நேர நீர்ப்பாசனமும் கூடிய நீர்ப்பாசன இடைவெளியும் கொடுக்கப்படலாம்.

**02. பயிர்களின் வகை:-**

தூவல் நீர்ப்பாசனம் ஆனது வரிசையாகவும் நெருங்கியதாகவும் பயிரிடப்படும் பயிர்களுக்கு வினைத்திறனாகப் பாவிக்கப்படும்.

**உதாரணம்:-**

வெங்காயம், மிளகாய், பயறு, கௌப்பி, கோவா, முள்ளங்கி, பீற்றூட், கறிமிளகாய், கீரை வகை

**03. நீர் முதலின் தன்மை:-**

யாழ். குடா நாட்டைப் பொறுத்தவரை நிலத்தடி நீரே மிகப் பெரிய முதல் ஆகும். மக்கள் கிணறுகளின் மூலம் நிலத்தடி நீரை தங்களது தேவைகளுக்காக பயன்படுத்துகின்றார்கள்.

பின்வரும் காரணிகள் தூவல் நீர்ப்பாசனத்தை நிர்ணயிக்கின்றன.

**1. நீர் முதலின் தூரம்:-**

நீர் முதலின் தூரம் பயிர்ச்செய்கை நிலத்திலிருந்து கூடிய தூரத்தில் இருப்பின் நீரானது பம்பி மூலம் எடுக்கப்பட்டு வயலுக்கு பிரதான நீர் செலுத்து குழாய் மூலம் கொண்டு செல்லப்படும் பொழுது வினைத்திறன் குறையச் சந்தர்ப்பங்கள் உண்டு.

**2. நீர் முதலின் தன்மை:-**

நீரானது கிணற்றிலிருந்து இறைக்கப்படும் பொழுது நீரானது இறைக்கும் விகிதத்திற்குச் சமனாக நீர் ஊற வேண்டும். ஊற்று குறைவாக இருக்கும் நீர் முதல் ஆயின் அகற்றப்படும் நீர் கூடவாக இருப்பதால், கிணறு வற்றி தேவையான அளவு நேரத்திற்கு நீர்ப்பாசனம் செய்ய முடியாது போய்விடும். எனவே ஊற்று குறைவான பிரதேசங்களில் ஆகக் குறைந்தது தொடர்ச்சியாக 30 நிமிடமாவது வற்றாமலிருக்கக்கூடிய கிணறாகத் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

**3 நீரின் தரம்:-**

நீரின் தரம் குறைவாக இருக்குமாயின் தாவரங்களின் இலைகளில் நீர் தெளிக்கப்படும் பொழுது எரிவு நோய் ஏற்படக் காரணமாக அமைந்துவிடும். அத்துடன் மண்ணிலும் உப்புக்களின் செறிவு கூடக் காரணமாக இருக்கும். எனவே தரம் குறைவான நீர் உள்ள இடங்களில் தூவல் நீர்ப்பாசனம் பொருத்தமற்றது.

தூவல் நீர்ப்பாசனத் தொகுதி மூலம் நீர்ப்பாசனம் மேற்கொள்ளும்போது பின்வரும் விடயங்களையும் முக்கியமாகக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

**1. பயன் படுத்தப்படும் தன்மை:-**

அ) தூய்மையானதாக இருக்க வேண்டும்.

ஆ) தெளிந்த நீராக இருக்க வேண்டும்.

இ) உப்புச் செறிவு குறைவானதாக இருக்க வேண்டும்.

2. அ) நீர்ப்பம்பி வினைத்திறனாக நீரை வெளியேற்றக் கூடியதான சென்றிபியூகல்ரக பம்பிகளாகவும் எஞ்சின் பரிவலு 3.5 இற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

ஆ) மின்சார மோட்டார் ஆயின் அதன் பரிவலு 01.5 இலும் குறைவாக இருக்கக் கூடாது.

3. உறிஞ்சும் குழாய், வெளியேற்றும் குழாய் என்பன உராய்வு குறைந்த குழாய்களாக இருத்தல் வேண்டும்.

4. நீர் வழங்கல் பாதை இயலுமான வரை வளைவுகள் தவிர்க்கப்பட்டு நேராக இருத்தல் சிறந்தது. L வடிவ வளைவுள்ள குழாய்கள் மற்றும் உராய்வு [illegible]ய உலோகக் குழாய்கள் தவிர்க்கப்படல் வேண்டும்.

5. அமுக்கமானி.

இத் தொகுதி உரிய முறையில் நீரை விசிறுவதற்கு 2 பார்(bar) அமுக்கம் இருக்க வேண்டும். இவ் அமுக்கம் தோட்டத்திற்கு அண்மையாகப் பேணப்பட வேண்டும். இதனை அளவிடுவதற்கு அமுக்கமானி பொருத்தப்பட வேண்டும்.

அமுக்கம் போதுமானதாக இல்லாவிடில்,

அ) விசிறப்படும் நீர்த்துளிகளின் பருமன் பெரிதாக இருக்கும். இது பயிருக்குப் பாதிப்பை கொடுக்கும்.

ஆ) மண்ணை இறுக்கமடையச் செய்யும்.

இ) சீரான நீர்ப்பரம்பல் இருக்காது.

**6. வடிகட்டி:-**

வடிகட்டி தோட்டத்திற்கண்மையாக பொருத்தப்பட வேண்டும். இது நீரிலுள்ள மாசுக்களை வடிகட்டி, தெளிவான நீரை உட்செல்ல அனுமதிக்கும்.

வடிகட்டி வாரம் ஒரு தடவை துப்புரவு செய்யப்பட வேண்டும்.

**7. வளி நீக்கி:- (Air releaser)**

இத் தொகுதியில் வளிக் குமிழ்கள் காணப்படுமாயின் அது அமுக்கம் குறைவடைய வழிவகுக்கும். அவ்வாறு வளிக் குமிழ்கள் காணப்பட்டால் வளி நீக்கி மூலம் வெளியேற்றப் பட்டுவிடும்.

**8. விசிறல் தலை:-**

அ) விசிறும் தலைகள் பயிரின் உயரத்திலும் பார்க்க 30-45 செ.மீ உயரமாக இருத்தல் வேண்டும்.

ஆ) ஒரு தலையிலிருந்து விசிறும் நீர் மற்ற தலை பொருத்தியுள்ள எல்லை வரை நீரை விசிறக் கூடியவாறு பொருத்தப்பட வேண்டும்.

இ) எல்லா விசிறல் தலைகளும் கிட்டத்தட்ட ஒரே சீரான அமுக்கத்தில் நீரை விசிறக் கூடியவாறு பொருத்தப்பட வேண்டும்.

ஈ)1/4 ஏக்கர் செய்கைக்கு தேவைப்படும் விசிறும் தலைகளின் எண்ணிக்கை 28-32 ஆகும்.

**9. நீர்ப்பாசனம் செய்வதற்கு உகந்த நேரம்:-**

அ) காலை நேரங்களில் நீர் விசிறப்பட வேண்டும்.

ஆ) மண் சூடாக உள்ளபோது விசிறக்கூடாது.

இ) விசிறப்படும் நீர் சூடாக இருக்கக் கூடாது.

ஈ) பூக்கள் விரிந்து மகரந்தச் சேர்க்கை நடைபெறும் நேரங்களில் விசிறலைத் தவிர்த்தல் வேண்டும்.

**10. நீர்ப்பாசன நேரம்:-**

நீர்ப்பாசன நேரம் பயிரின் வகையை பொறுத்து 10-20 நிமிடம் வரை நீர் விசிறப்பட வேண்டும்.

**11. நீர்ப்பாசன இடைவெளி:-**

தினமும் நீர் விசிறப்பட வேண்டும்..

**12. தூவல் நீர்ப்பாசனத் தொகுதியை இயங்குவதற்கு முன் அவதானிக்க வேண்டியவை:-**

அ) பொருத்துக்கள் சீராக இணைக்கப்பட வேண்டும்.

ஆ) கசிவுகள், வெடிப்புக்கள் இருக்கக்கூடாது.

இ) கடும் காற்று வீசுமாயின் காற்றுத் தடை அமைக்கப்பட வேண்டும்.

**13. தூவல் நீர்ப்பாசனத் தொகுதி இயங்கும் போது அவதானிக்க வேண்டியவை:-**

அ) விசிறல் தலை சீராக இயங்குகிறதா என்பதை கவனிக்க வேண்டும்.

ஆ) நீர்த்துளிகள் சிறிதாகவும் சீராகவும் பரவலாகவும் விசிறப்படுகின்றதா என்பதை அவதானிக்க வேண்டும்.

இ. ஒரு தலையிலிருந்து மற்றத் தலை வரை நீர் விசிறப்படுகின்றதா என அவதானிக்கவும்.

ஈ) விசிறப்படும் நீர் மேற்பரப்பிலிருந்து வழிந்து ஓடாதபடி கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

**பராமரிப்பு:-**

அ) நீரின் தன்மையை பொறுத்து வடிகட்டியைத் துப்புரவு செய்தல் வேண்டும்.

ஆ) குறிப்பிட்ட கால இடைவெளியில் நீர் வழங்கல் குழாயின் அந்தங்களிலுள்ள தலை மூளைகளை அகற்றி, அவற்றினூடாக நீரை வெளியேற்றுவதன் மூலம் குழாய்களில் தேங்கியுள்ள படிவுகளை அகற்ற வேண்டும்.

இ) விசிறல் தலையில் சுண்ணாம்புப் படிவுகள் ஏற்பட்டு விசிறலுக்குத் தடையாக இருக்குமாயின், அவற்றை அகற்றுவதற்கு விசிறல் தலைகளைக் கழற்றி ஐதான வினாகிரி கரைசலில் ஓர் இரவு ஊற விடுவதன் மூலம் அகற்ற முடியும்.

**பயிர்ச் செய்கை தொழில்நுட்பம்:-**

**1)தரை பண்படுத்தல்:-**

பீற்றூட், லீக்ஸ் தவிர்ந்த ஏனைய பயிர் வகைகளுக்கு மிகக் குறைவான தரை பண்படுத்தல் மேற்கொள்ளல் போதுமானது. மண்ணை நன்கு துப்புரவாக்கி மட்டப்படுத்த வேண்டும்.

மழை காலத்தில் பயிர் செய்வதாயின், 6 அடிக்கு ஒரு சால் சாய்வுக்கு சமாந்தரமாக அமைக்க வேண்டும். சாலின் ஆழம் சாதாரண வாய்க்கால்களின் ஆழத்திற்குப் போதுமானது.

சிறுபோகமாயின், சால்கள் அமைக்கத் தேவையில்லை.

பயிருக்கேற்ற இடைவெளியில் நடுகைக் குழிகள் அமைக்க வேண்டும். குழிகளில் நன்கு உக்கிய மாட்டெருவை இட்டு மண்ணுடன் நன்கு கலக்கவும்.

**நடுகை:-**

நன்கு வீரியமான நாற்றுக்களை தெரிவு செய்து தயார் செய்யப்பட்ட நடுகைக் குழியில் நடுகை செய்யவும்.

**பயிர்ப்பரிபாலனம்.**

சிபார்சு செய்யப்பட்டளவில் பசளை பிரயோகம் மேற்கொள்ள வேண்டும். பீடைத் தாக்கங்களை கிரமமான முறையில் கண்காணிக்க வேண்டும்.

பயிர்ச்சூழலில் ஈரப்பதன் ஒப்பீட்டளவில் உயர்வாகக் காணப்படும். இதனால் சார்ந்து வாழ் பங்கஸுக்களின் தாக்கத்தினால் நோய்த்தாக்கம் ஏற்படுவதற்கு அதிக வாய்ப்புண்டு. எனவே கிரமமான முறையில் பயிர்களை கண்காணிக்க வேண்டும்.

வி.இளங்குமார்,
விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்.


யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர்-30
பொங்குதமிழ் 2005 எழுச்சி நிகழ்வு
விடுதலைக்காய் ஏங்கும் தமிழீழ மக்களின் உரிமைநாள், யாழ்குடா நாட்டின் மக்கள் அனைவரும் ஒரே குரலாய் சொல்கின்றோம். எமது தலைவர் மேதகு.வே.பிரபாகரன் அவர்கள் தலைமையின் கீழ் இயங்கும் தமிழீழத் தனியரசை சர்வதேச சமூகமே ஏற்றுக் கொண்டு அங்கீகாரம் வழங்கு.
சமத்துவமான சனநாயக நாடு தமிழீழம்
அனைத்து தமிழ் மக்களும் ஒரே தலைமையின் கீழ்
எமக்கென முப்படைகளையும் கொண்ட படை கட்டுமானம்
மொழி, நிலம்,பண்பாடு, கலாச்சாரம்,சட்டம்,நீதி
என சனநாயக மரபுகளைக்கொண்டு விளங்கும் நடைமுறையில்
உள்ள தனியரசை உடன் அங்கீகரித்து ஏற்றுக்கொள்,
தமிழ்மக்களின் எழுச்சியாய் பொங்குதமிழ் 2005 எழுச்சி
நிகழ்வில் உலகே வியக்க உன்னத தமிழனாய் தலைநிமிர்ந்து
வாழ தனியரசு கோரி......
காலம்-30-09-2005
இடம்-யாழ் மருத்துவக்கல்லூரி
மைதானம்
நேரம்-பி.ப.3.00 மணி
வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக்கூட்டுறவு சங்கங்களின் சமாசம்,
பனை,தென்னை வள அபிவிருத்திக்கூட்டுறவுச்சங்கங்கள்,
பனை தென்னைவள கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணிகள்.
(சி-12843)


யாழ்ப்பாணத்தில் செப்ரெம்பர்-30
பொங்குதமிழ் 2005 எழுச்சி நிகழ்வு
நாம் பூரண விடுதலையை அடைகின்ற நாள் வெகு தொலைவில் இல்லை, யாழ்மண்ணில் பிறந்த குழந்தை முதல் முதியோர் வரை எம்முடைய சுதந்திர நாடு வேண்டி லட்சம் லட்சமாய் மக்கள் சேனை உரிமைக்குரல் எழுப்பி,சுதந்திர கானம் பாட உலகின் பார்வை முன்னால் அந்நியம் ஆகின்றோம்.
சர்வதேசமே! ஒன்றைப்புரிந்து கொள்
இது மக்கள் புரட்சி நீரும் எரியும், நெரும்பும் ஆழும்
நியாயம் எங்களின் பக்கம்
சாம்பலிலிருந்து தமிழர் நாம்- சபதம் செய்கின்றோம்,
உரிமையைக்கொடு, இல்லை என்றால், அதை
வென்றெடுக்க வழிவிடு.
பொங்குதமிழ் 2005 எழுச்சி நிகழ்வில் நெருப்பை
மடியில் கட்டி தமிழ் இனமே விரைந்து வா....
காலம்-30-09-2005
இடம்-யாழ் மருத்துவக்கல்லூரி
மைதானம்
நேரம்-பி.ப.3.00 மணி
கைத்தொழில் வணிகர் மன்றம்-
மீசாலை.
(சி.12844)



# விளையாட்டு



## ஷேன்வோர்ன் மின்னும் நட்சத்திரம்

ஆஷஸ் தொடரில் தோல்விகள், அது குறித்த முன்னாள் வீரர்களின் சீற்றம் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபைக்கு சங்கடமான/நெருக்கடியான நிலையைத் தோற்றுவித்துள்ளதெனில் மிகையாகாது.

ஏனெனில், கடந்த 18 ஆண்டுகளாக தக்கவைத்துக்கொள்ளப்பட்ட ஆஷஸ் தொடர் வெற்றி மற்றும் கடந்த 17 ஆண்டுகளாக பலவோன் நிலையை அடையாமை மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகால தொடர்ச்சியான தொடர் டெஸ்ட் வெற்றி என்பனவற்றிற்கு ஆஷஸ் தொடரில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டமையே மேற்படி சீற்றத்திற்கும், சங்கடத்திற்கும் காரணமாகின்றது.

மேற்படி அனைத்தும் சிதறடிக்கப்படும்போது அதை கடந்த காலங்களில் பேணிவந்தவர்களைச் சீற்றம் கொள்ளச் செய்யும் என்பதைச் சொல்லித்தான் புரியவேண்டியதில்லை.

இந்த வகையில், முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் டெனில் லில்லியின் கூற்றே அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையை அதிகம் ஈர்த்தவையாகவும், சங்கடத்திற்கு உள்ளாக்கியதாகவும் மாறியுள்ளது.

அதாவது, ஆஷஸ் தொடர் குறித்து அவர் "அவுஸ்திரேலிய அணி மீண்டும் ஆஷஸ் கிண்ணத்தைக் கைப்பற்ற ஷேன்வோர்ன் உடனடியாகத் தலைவராக நியமிக்கப்பட வேண்டும்" எனவும், "கிரிக்கெட்டில் அதிக ஞானம் உள்ளவர் ஷேன் வோர்ன்" எனவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் டெனில் லில்லியின் கூற்றுக்கு அப்பால் ஷேன் வோர்னைக் கௌரவப்படுத்த வேண்டிய கட்டாய நிலைக்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை ஆளாகியுள்ளது.

ஏனெனில், அவுஸ்திரேலிய அணியின் வெற்றியில் அவரின் பங்கு அதிகம் இருக்கின்றமையும், அவர் கிரிக்கெட்டில் இருந்து விரைவில் ஓய்வு பெறவுள்ளமை என்பனவற்றைக் கருத்தில் கொண்டாலும் அதற்கும் அப்பால் இம்முறை நடைபெற்ற ஆஷஸ் தொடரில் அவர் காட்டிய திறமையை கவனத்தில் கொள்ள வேண்டிய நிலைக்கும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை உள்ளாகியுள்ளது.

இதற்கு மேல் நடைபெற்று முடிந்த ஆஷஸ் தொடரில் ஷேன் வோர்ன் சாதிப்பாரா என்ற கேள்வி அனைவரிடமும் எழுந்ததொன்று. ஏனெனில், அவரின் தனிப்பட்ட வாழ்வில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக அவர் இத்தொடரில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்றே அனைவரின் கூற்றுக்களும் இருந்தன.

இதற்கு அவரின் மனைவியின் விவாகரத்து விடயம் அவரை கடுமையான அழுத்தத்திற்கு உள்ளாக்கியிருந்தமை என்பது உண்மைதான்.

ஆனால், இந்த அழுத்தத்திற்கு அப்பால் நாட்டின் நலனில் அக்கறையுள்ளவர்போல் கிரிக்கெட்டை நேசிப்பவர் போல் தன்னை மீண்டும் இந்த ஆஷஸ் தொடரில் கிரிக்கெட் உலகிற்கு அடையாளப்படுத்தியிருப்பதென்பது கிரிக்கெட்டின் மீது அவர் கொண்டிருக்கும் ஆர்வத்தையே காட்டி நிற்கின்றது.

நடைபெற்று முடிந்த ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலிய அணியின் கௌரவம் பாதுகாக்கப்பட்டமையும், மேற்படி போட்டி பரபரப்பாகவும், விறுவிறுப்பாக அமைந்தமைக்கும் ஷேன் வோர்னின் தனிப்பட்ட உழைப்பே முக்கிய காரணமாகும்.

இத்தொடரில் அவரின் நுட்பமான பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டம் காரணமாகவே எதிரணிக்கு கடுமையான நெருக்கடிகளையும், அவுஸ்திரேலிய அணிக்குக் கௌரவமான தோல்விகளையும் கொடுத்ததெனில் மிகையில்லை.

இத்தொடரில் 40 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளதுடன் இங்கிலாந்துக்கு எதிராக அதிக விக்கெட்டுக்களை கைப்பற்றியவர் என்ற சாதனையையும் ஏற்படுத்தியிருந்தார்.

இந்த வகையில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அவரை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் இன்னும் எத்தனை ஆண்டுகள் அவுஸ்திரேலிய அணிக்காக அவர் விளையாடுவார் என்பது அவரைப் பொறுத்தது. ஆனால், அவர் ஓய்வு பெறமுன்னர் அவரைக் கௌரவப் படுத்தவேண்டிய பொறுப்பு அவுஸ்தரேலிய கிரிக்கெட் சபைக்கு உள்ளது.

நடைபெற்று முடிந்த ஆஷஸ் தொடரும் அவரை கௌரவப்படுத்தக் கூடிய ஒரு சூழ்நிலையைத் தோற்றுவித்திருக்கின்றது. இந்நிலையை உணர்ந்து ஷேன் வோர்னின் கிரிக்கெட்டை மேலும் ஒரு நிலையை அடைவதற்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை வாய்ப்பளிக்க வேண்டிய சங்கடத்திற்கு ஆளாகியுள்ளது.

ஷேன் வோர்னின் கடந்த கால அனுபவங்களை, அவரின் கிரிக்கெட் ஞானத்தை வெளிப்படுத்த/உலகிற்கு அடையாளப்படுத்த அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை முன்வருமா?

**பூ.சுபானந்**

உலக தரவரிசையில் பலவீனமான அணியாக விளங்குகிற பங்களாதேஷ் அணி இப்போது இலங்கை அணியிடம் தொடர்ந்து தோல்வியை சந்தித்து வருகிறது. அதிலும் பாலோ-ஆன் என்பதுஅந்த அணிக்கு பழகிப்போன ஒன்றாகிவிட்டது.

நடந்துமுடிந்த டெஸ்ட் தொடரில் இலங்கை அணியிடம் பங்களாதேஷ்! இன்னிங்ஸாலும் அறுபத்தொன்பது ஓட்டங்களாலும் தோல்வியைத் தழுவியுள்ளது.



## பங்களாதேஷ் சந்திக்கும் தொடர் தோல்விகள்

இலங்கை வீரர்களின் பந்து வீச்சு மற்றும் துடுப்பாட்டத்தின் முன் பங்களாதேசஷ் அணியால் நின்று பிடிக்க முடியவில்லை. பங்களாதேஷ் அணியைப் பொறுத்தவரையில் இந்த அணியினை ஒருநாள் மற்றும் டெஸ்ட்போட்டிகளிலும் சாதிக்க முடியாமல் திணறி வருகிறது.

ஏற்கனவே பங்களாதேஷ் போன்ற அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பது தொடர்பாக விளையாட்டு விமர்சகர்கள் மத்தியில் அதிருப்தி நிலவி வருகிறது.

உண்மையில் இந்த விமர்சனங்கள் நியாயபூர்வமானவையென ஏற்றுக்கொள்ளும் வகையிலேயே பங்களாதேஷ் அணியின் திறமையும் கேள்விக்குறியாகவே உள்ளது.

கிரிக்கெட் பயிற்சியாளர்களுக்குள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய வட்மோர் போன்றோரின் வழிகாட்டல்கள் இருக்கிறபோதும் இந்த அணியினால் பிரகாசிக்க முடியாமல் இருப்பதானது துரதிர்ஷ்டவசமானதே.

அத்துடன் பங்களாதேஷ் அணியானது தொடர்ச்சியாக இன்னிங்ஸால் தோல்வியை தழுவுவது என்பது விளையாட்டின் தரத்தை சிதைப்பதாகவே நிச்சயம் இருக்கும்.

## இந்தியாவில் வைத்து பிளிண்டொப் சுடப்பட்டார்?

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் சகல துறை ஆட்டக்காரர் பிளிண்டொப் தன்னுடைய கிரிக்கெட் அனுபவம் பற்றி ஒரு புத்தகம் எழுதி சமீபத்தில் அதை வெளியிட்டு இருக்கிறார்.அதில் ஒரு திடுக்கிடும் தகவலை தெரிவித்திருக்கிறார். அதாவது, 2002 ஆம் ஆண்டு டில்லியில் இந்தியா-இங்கிலாந்து அணிகள் இடையே ஒரு நாள் போட்டி நடந்தது. அந்தப்போட்டியில் இங்கிலாந்து 271 ஓட்டங்கள் எடுத்தது. இந்தியா 269 ஓட்டத்தில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மிகவும் பரபரப்பாக நடந்த அந்த ஆட்டத்தில் இங்கிலாந்து இரண்டுஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.



இங்கிலாந்து வீரர்கள் ஆட்டம் முடியும் தறுவாயில் கடுமையாக ஓடி பந்தை விரட்டி, அதைத்தடுத்து துடுப்பாட்டம் செய்தார்கள். இதனால் ஆத்திரம் அடைந்த யாரோ ஒருவர் என் மீது துப்பாக்கியால் சுட்டார். அதிலிருந்து வெளிப்பட்ட சிறு குண்டுகள் என் மீது பட்டுக் கீழே விழுந்தன. நான் தரையைப்பார்த்தபோது அவை அங்கே கிடந்தன.ஏதோ பொம்மைத் துப்பாக்கியை வைத்து ரப்பர் குண்டுகளை போட்டு என் மீது சுட்டிருக்கிறார்கள். நல்லவேளை தப்பித்தேன். என்று அந்த புத்தகத்தில் பிளிண்டொப் எழுதி இருக்கிறார்.

ஆனால் அவர் இப்படி சொல்லியிருப்பதை டில்லி கிரிக்கெட் சங்கத் தலைவர் சி.கே.கன்னா திட்டவட்டமாக மறுத்துள்ளார். அவர் கூறுகையில் " இப்படி சம்பவம் நடந்திருக்கவே முடியாது. 3 வருடம் கழித்து பிளிண்டொப் இப்படி கதை சொல்கிறார். இதை நம்ப முடியவில்லை" என்று தெரிவித்துள்ளார்.



## பிரெட்லீயை கண்டிக்கும் கெவின்

ஆஷஸ் கிரிக்கெட் முடிந்த பிறகும் அதுபற்றிய பரபரப்பு அடங்கவில்லை. இங்கிலாந்துக்காரர்கள் நிறையப் பேசுகிறார்கள் பேசிக்கொண்டே இருக்கிறார்கள்! எப்படி இருந்ததுஆஷஸ் அனுபவம்? என்று அதிரடி ஆட்டக்காரர் கெவின் பீட்டர்சனைக் கேட்டால்.

"மறக்கவே முடியாது. இந்தத் தொடரை மட்டுமல்ல பிரெட்லீ பந்து வீச்சையும் கூட!" என்கிறார். ஏனாம்?

பிரெட்லீ பந்து வீசும்முறை என்னைப் பொறுத்தவரை சரியில்லை. எங்கள் துடுப்பாட்ட வீரர்கள் நின்று விளையாட ஆரம்பித்து விட்டால்... அவருக்கு கோபம் வந்து விடுகிறது. ஸ்லிப்கேட்ச் வாய்ப்புக்காக முதலில் ஓப்-ஸ்டெம்புக்கு வெளியே பந்து வீசுகிறார் அது பிரயோசனப் படாத பட்சத்தில் எல்.பி.டபிள்யூ வாய்ப்புக்காக கால்களை குறிவைக்கிறார். அதுவும் சரிப்படவில்லையா? அடுத்து அவரது ஆயுதம் பவுன்சர். துடுப்பாட்ட வீரர் போட்டுத் தாக்குகிறார். அடிபட்டாவது, துடுப்பாட்ட வீரர்கள் வெளியேற வேண்டும் என்பது தான் அவரது ஆசை. தலையில் பட்டுவிட்டால் என்ன ஆவது? இது ஆரோக்கியமான அணுகுமுறை இல்லையே? பிரெட்லீக்கு யாராவது சொல்லிக் கொடுங்களேன் என்கிறார் கெவின்.



## சரபோவாவின் மனிதாபிமானம்

மரியா சரபோவா பற்றிப் பேசிக்கொண்டே இருக்கலாம் அவ்வளவு விஷயம் இருக்கிறது இந்த 18 வயது ரஷ்ய வீராங்கனை பற்றி. "அவரது பிரபலத்துக்குக் காரணம் அழகா, திறமையா" என்று ஒரு கூட்டம் இணையத்தளங்களில் பட்டிமன்றம் நடத்திக்கொண்டிருக்க... மறுபுறம் சத்தமில்லாமல் ஒரு காரியம் செய்திருக்கிறார் மரியா.

யு.எஸ்.ஓபன் விளையாட நியூயோர்க் போன நேரம்...? டென்னிஸ் மட்டுமில்லாமல், வேறு ஒரு விஷயமும் முடித்திருக்கிறார். அங்குள்ள பிரபல கம்பெனி ஒன்று மரியாசரபோவா பெயரில் 'சென்ட்'அறிமுகம் செய்திருக்கிறது. நியூயோர்க் நகரில் நடந்த விழாவில் தனது பெயரிலான 'கமகம' சென்ட்போத்தலை அறிமுகம் செய்தார் மரியா.

"இதை சட்டையில் அடித்துக்கொண்டால், மரியாவுக்குப் பிடித்த நறுமணம்... உங்கள் மீதும் தவழும்!" என்று விளம்பரம் செய்தது. அதற்குப்பிறகு சும்மா இருப்பார்களா ரசிகர்கள்...? நீ...நான் என்று பெரும் கூட்டமே சென்ட் போத்தல் வாங்க அடிதடி நடத்தியதாம் (மரியா போல மணக்கணுமாம்!) இதன் மூலம் கிடைத்த பெருமளவு வருவாயில் ஒரு கணிசமான தொகையை கற்றினா சூறாவளி நிவாரணப் பணிகளுக்கு மரியா வழங்கியிருக்கிறார் என்பது கூடுதல் தகவல்!

# வவுனியாவில் நடைபெற்ற கல்வி மாநாடு




வவுனியா வடக்கு கல்வி வலயம் கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு நாட்களிலும் ஏனைய கல்வி வலயங்களுக்கு முன்மாதிரியாக, பயனுள்ள ஒரு கல்வி மாநாட்டை வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளது. காலத்தின் தேவையறிந்து நடாத்தப்பட்ட இக்கல்வி மாநாடு காலத்தின் பதிவாகி உள்ளது.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் " இன்றைய கல்வி நிலவரம் பற்றிய கருத்தாடலும், கல்வி விருத்திக்கான மூலோபாயங்களைத் தேடலும்" என்ற தொனிப் பொருளில் " சமூக பொருளாதார, ரீதியாக பின்தங்கி இருக்கும் வவுனியா வடக்கு பிரதேசத்தின் கல்விப் பிரச்சினைகள் மீது சமூகத்தின் கவனத்தை குவிமையப்படுத்துவதும், அப்பிரச்சினைகளில் இருந்து தீர்வு பெறுவதற்கான வழிவகைகளைக் காணுவதும் என்ற நோக்கில் இம் மாநாட்டை வவுனியா வடக்கு கல்விச் சமூகம் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் நடாத்தி உள்ளது.

இம்மாநாட்டை ஏற்பாடு செய்து வழி நடாத்திய வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.சி.தண்டாயுதபாணி இம்மாநாடு குறித்து கருத்து வெளியிடுகையில்:- ஒரு பிரதேசத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு, அரசியல் வளர்ச்சிக்கான அடிப்படைக் காரணியாக கல்வி அமைகின்றது என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு விடயம் ஆகும். சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைமைகளுக்கும் கல்விக்கும் இடையே உடன்பாடான ஒரு இணைவு காணப்படும். அவ்வகையில் நோக்குமிடத்து வவுனியா வடக்கு பிரதேசத்தின் இன்றைய கல்விப் பின்னடைவு நிலைமை நீண்டகால நோக்கில் இப்பிரதேசத்தின் சமூக, பொருளாதார, அபிவிருத்தியைப் பாதிக்கும் என்ற உண்மை அவசரமாக உணர்ந்து கொள்ளப்பட வேண்டியதாகும். இப்பிரதேசத்தின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டுள்ள அனைத்துத் தரப்பினரும் இவ்விடயம் குறித்து அக்கறை கொள்ளவேண்டியது அவசியமானதாகும்.

1999 இல் அறிமுகமான வலயக் கல்வி அலுவலக முறைமையின் ஊடாக வவுனியா வடக்கு கல்வி வலயம் உருவாக்கப்பட்டது. இவ்வலயத்தில் ஓமந்தை, நெடுங்கேணி ஆகிய இரு கோட்டங்கள் உள்ளன. ஓமந்தைக் கோட்டத்தில் 47 பாடசாலைகளும், நெடுங்கேணிக் கோட்டத்தில் 42 பாடசாலைகளும் ஆக வலயத்தில் 89 பாடசாலைகள் உள்ளன. ஆயினும் போர் அழிவுகள், இடப்பெயர்வுகள் காரணமாக தற்போது 63 பாடசாலைகளே சொந்த இடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

வவுனியா வடக்கு போரின் அனர்த்தங்களை அதிகமாகவே சுமந்துகொண்ட ஒரு பிரதேசம் ஆகும். இந்த அனர்த்தங்கள் காரணமாக இப்பிரதேச மக்களின் சமூக, பொருளாதாரக் கட்டுமானங்கள் பாதிக்கப்பட்டன. இப்பிரதேசத்தின் கல்வி மிக மோசமாக பாதிக்கப்பட்டது. கல்வி தொடர்பான பல்வேறு இடர்கள் எதிர்கொள்ளப்பட்டன. இந்த இடர்கள் காரணமாக சமூக முன்னேற்றம் பாதிக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தின் பல்வேறுபட்ட அபிவிருத்திக்கும் கல்வி உந்துவிசையாக அமையவேண்டுமாயின் கல்விக்கான இடர்கள் களையப்பட வேண்டும். ஆகவே இப்பிரதேசத்தின் கல்வி நிலவரங்களை சரியாக மதிப்பீடு செய்து கல்வி இடர்களை களைவதற்கான மூலோபாயங்களைத் தேடவேண்டியது அவசியமானதும் அவசரமானதுமான பணியாகின்றது எனத் தெரிவித்தார்.

இக்கல்வி மாநாட்டில் வடக்கு-கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் திரு.இ.விசாகலிங்கம், வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. வேதநாயகம், உட்பட ஏனைய வலயங்களின் கல்விப் பணிப்பாளர்களும் வவுனியா வலய கல்வியாளர்களும், என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டின் முதல் நாள் அமர்வில் "பிரதேசப்புவியியல் அமைப்பும், சமூகப் பொருளாதார நிலைமைகளும்" என்ற ஆய்வுக் கட்டுரையை ஆசிரிய நிலைய முகாமையாளர் திரு.சு.ஜெயச்சந்திரன் அவர்களும், "பிரதேசத்தின் உட்கட்டமைப்பு தொடர்பிலான பிரச்சினைகள்" என்ற ஆய்வுக் கட்டுரையை நெடுங்கேணிக் கோட்டக்கல்வி அலுவலர் திரு.இ.இந்திரராசாவும், "ஆரம்பக் கல்வி தொடர்பாக எதிர்கொள்ளப்படும் இடர்கள்" என்ற ஆய்வுக்கட்டுரையை சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் திரு.சி.சிவராஜா அவர்களும், "இடைநிலைக் கல்வி தொடர்பாக எதிர்கொள்ளப்பட்ட இடர்கள்" என்ற ஆய்வுக் கட்டுரையை கல்வி அபிவிருத்திப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. இ.இரகுபதி அவர்களும், "பொதுப்பரீட்சை பெறுபேற்றுப் பகுப்பாய்வு" என்ற ஆய்வுக் கட்டுரையை கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.த.மேகநாதன் அவர்களும், "பாடசாலைகளின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் முறைசாராக் கல்வியும் "என்ற ஆய்வுக் கட்டுரையை முறைசாராக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.சி.சத்தியசீலன் அவர்களும், "அதிபர்களின் முகாமைத்துவத்திறன், ஆசிரியர்களின் வாண்மை, பயிற்சி, தகுதி, மனோபாவம் பற்றிய இடர்கள்" என்ற ஆய்வுக் கட்டுரையை புதுக்குளம் மகாவித்தியாலய அதிபர் திரு.தா.அமிர்தலிங்கம் அவர்களும், "பாடசாலைகளின் பௌதிகவளப் பற்றாக்குறை" என்ற ஆய்வுக் கட்டுரையை பாடசாலை வேலைப்பகுதி பரிசோதகர் திரு.சி. சிவகுமாரன் அவர்களும், "வலயக் கல்விப் பணிமனை, பாடசாலைகள் தொடர்பான ஆளணிப் பற்றாக்குறை" என்ற ஆய்வுக் கட்டுரையை கல்வி முகாமைத்துவ பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.அ.ஸ்ரீகரன் அவர்களும், "பிரதேசத்தின் கல்விக்கு உதவி வழங்கும் நிறுவனங்களின் பங்களிப்பு" என்ற ஆய்வுக் கட்டுரையை திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு.சு.பத்மநாதன் அவர்களும் சமர்ப்பித்து உரையாற்றினர். ஒவ்வொரு ஆய்வுக் கட்டுரைகளுக்கும் இடையே மாநாட்டில் கலந்து கொண்ட கல்வியியலாளர்களாலும் பேராளர்களாலும் அவதானக் குறிப்புக்கள் வெளியிடப்பட்டன. இவ் அவதானக் குறிப்புகள் ஆய்வுக்கட்டுரைகளுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக அமைந்திருந்தன.

இரண்டாம் நாள் அமர்வின்போது முதல் நாள் அமர்வின்போது முன்வைக்கப்பட்ட 10 ஆய்வுக் கட்டுரைகளையும் பேராளர்கள் பதவி நிலை வேறுபாடின் 10 குழுக்களாகப் பிரிந்து கலந்துரையாடினர். கலந்துரையாடலின் முடிவில் ஒவ்வொரு குழுவும் தமக்குரிய கட்டுரைகள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்தன. இவ் அறிக்கைகளில் வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் கல்விப் பின்னடைவிற்கான பல்வேறு காரணங்களும், அவற்றைத் தீர்ப்பதற்கான முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டிருந்தன.

ஒட்டுமொத்தமாக நோக்கும்போது இம் மாநாட்டின் மூலமாக இப்பிரதேசத்தின் கல்விக்கான இடர்கள் அடையாளம் காணப்பட்டதோடு, அத்தகைய இடர்களை எதிர்கொள்வதற்கான மூலோபாயங்களும் வகுக்கப்பட்டன. அத்துடன் இந்தக் கல்வி இடர்கள் மீது சமூகத்தின் கவனமும் குவிமையப்படுத்தப்பட்டமையையும், கல்விக்கும் சமூகத்திற்குமான இடைவினை அதிகரித்திருந்தமையையும் அவதானிக்க முடிந்தது. இதன் மூலம் ஏற்பாட்டாளராகிய வலயக் கல்விப்பணிப்பாளரின் எதிர்பார்ப்பு நிறைவேறி உள்ளது எனலாம்.

வவுனியா வடக்கு கல்வி வலயம் வலயக்கல்வி அலுவலக நடைமுறை வந்த காலத்தில் இருந்து ஒப்பீட்டு ரீதியில் கல்வியில் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வந்தது. இவ்வலயம் கல்வியில் பின்தங்கி இருந்து வந்தமைக்கு இம்மாநாட்டில் ஆராயப்பட்ட 10 விடயங்களும் உண்மையான காரணங்களாக அமைந்திருக்க இதை அறியாமல் கடந்த காலங்களில் கல்வியை முன்னேற்ற என இங்கு மேற்கொள்ளப்பட்ட சில விடயங்களால் கல்வி மேலும் சிக்கலுக்குள்ளானது. இவ்விடயங்களைத் தெரிந்துகொள்வதன் மூலம் சில கல்வி அதிகாரிகள் தமது வியாபார நோக்கை விட்டு சேவை நோக்கை தொடர முடியும்.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இவ்வலயத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட "செயலட்டை" முறையையே இங்கு குறிப்பிடப்படுகிறது. இம்முறையின் மூலம் கல்வியின் இலக்கே மாறியிருந்தது. C.W. கன்னங்கரா வினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட இலவசக் கல்வி முறை இவ்வலயத்தில் மட்டும் " செயலட்டை" கல்வி முறையாக தனியார் மயப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சில கல்வி அதிகாரிகள் வருமான நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்ட "செயலட்டை" ஆசிரியர்களின் கடும் எதிர்ப்பைச் சந்தித்தது. பாடத்திட்டத்தை பூர்த்தி செய்வதா? செயலட்டையை செய்வதா? எனத் திணறிய ஆசிரியர்களுக்கு, செயலட்டையைச் செய்யுமாறு வற்புறுத்தல் விடப்பட்டது. செயலட்டை ஒவ்வொன்றிற்கும் பெருமளவான நிதி மாணவர்களிடம் இருந்து வலுக்கட்டாயமாக வசூலிக்கப்பட்டது. இதனால் மாணவர்கள் இலவசக்கல்வியை இழக்கும் நிலையை அடைந்தனர். இந்நிலையில் கல்வி அதிகாரிகளின் மாற்றம் இவ்வலயத்தில் கல்வி முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. இதனால் செயலட்டை முறை செயலிழந்து போக மீண்டும் இலவசக்கல்வி முறை நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்த நிலையில் வவுனியாவின் கல்வி நிலையை முன்னேற்ற எடுத்துக்கொண்ட ஆக்க பூர்வமான இந்நடவடிக்கையானது பாராட்டப்பட வேண்டிய அதேவேளை இம்மாநாடானது ஏனைய கல்வி வலயங்களுக்கு ஒரு முன்மாதிரி யான செயற்பாடாக அமைந்துள் ளமை போற்றப்பட வேண்டியதொன்றாகும்.

கண்டாவளையூர்
ஆறு.சுபாஸ்கரன்

---

# படித்ததில் பிடித்தது

## வெள்ளை ரோஜா

உன்
சின்னச் சின்ன
புன்னகைத் தூறலினால்
உன்னவனின்
இதயமைதானமெங்கும்
காதல் பூக்கள்
நனைந்து கிடக்கும்.

குறிஞ்சி
ஒற்றையடிப்பாதைகளிலே
நாடகம் போடும்
அவனின் காதல்கீதம்
உந்தன்
செவிக்கரங்களை
தாலாட்டுவதாய்
அவனுக்குள் சொல்லும்

இடம்மாறும்
உந்தன்
சிரிப்பு மலர் தூவிய
வழி ஓரங்களில் - உன்
நினைவுகள்
நடந்துசெல்ல - அவன்
இரவுகள்
கனவுகள் காணும்

ஒவ்வொரு பரவச
சந்திப்பு மாலைகளிலும்
மனங்களின்
சங்கமிப்பினால்
காதல் ரோஜாக்கள்
கரங்களில் பூக்கும்.

ஒவ்வொரு காதல்
தினத்திலும்
அன்புடன் மலர்ந்த - அவன்
சிரிப்பு மலர்கள்
இப்போ
கண்ணீராய்
பூத்துக்கொட்டுகிறது
அவனது காதல் வெள்ளை
ரோஜாவொன்று
எங்கோ
மலர்ந்துவிட்டதால்.

தமிழில் : இ.றஜித்
ஆங்கிலத்தில் :
எம்.மார்க்வொன்

# கேவில் கிராமம்





''எங்கட ஊர் எப்ப ஆரம்பிக்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது தம்பி. ஆனால் என்ர அப்பான்ர அப்பா இந்த ஊரிலதான் பிறந்தார் என்றது மட்டும் வடிவாய்த் தெரியும்''

இது தொண்ணூறு வயதிலுள்ள கேவில் கிராமத்தைச் சேர்ந்த ஒரு முதியவர். "உங்கள் கிராமம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? என நாம் கேட்டபோது கூறிய பதில்''

ஆரம்பத்தில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் பிரிவிற்குட்பட்டதும் தற்போது யாழ் மாவட்ட அரச அதிபர் பிரிவில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட இக் கிராமம் போக்கறுப்புக் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்தது.

கேவில் என்கின்ற பெயர் காரணப்பெயரா? அல்லது இடுகுறிப் பெயரா? என்பது தொடர்பில் அக் கிராமத்தில் தற்போது இருக்கின்ற எவரிடமும் கேட்டுப் பெறமுடியவில்லை. மூன்று தலைமுறையும் கடந்து வாழ்ந்து வரும் மக்களைக் கொண்ட ஒரு பழம் பெரும் கிராமம் அது. அந்தக் கிராமத்திற்குச் செல்ல வேண்டுமென்றால் கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி போகும போது A-9 வீதியில் ஆனையிறவு, இயக்கச்சிச் சந்திகளைக் கடந்து புதுக்காட்டுச் சந்தியை சென்றடைந்ததும் வலது புறமாக தாளையடி நோக்கிச் செல்லவேண்டும். தாளையடியிலிருந்து மீண்டும் வலது பக்கமாக 22 கிலோ மீற்றர் பயணம் செய்தால் கேவில் கிராமத்தினை அடையலாம்.

கரையோரக் கிராமமான அங்கு 208 குடும்பங்களைச் சேர்ந்த 850இற்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் 'கள்' உற்பத்தித் தொழிலையும் ஏனையவர்கள் கடல் தொழிலும் மற்றும் சிலர் விவசாயம் உள்ளடங்கலாக ஏனைய தொழில் துறைகளிலும் ஈடுபடுகின்றனர். இக்கிராம மக்களின் வாழ்க்கைத் தரம் பின் நோக்கியதாகவே காணப்படுகிறது.

இக்கிராமம் தொடர்பாக இக் கிராமத்தினைச் சேர்ந்தவரும் வடமராட்சி பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத் தலைவருமான ந.யோகராஜா இவ்வாறு கூறுகின்றார்.

எங்கட கிராமத்தில் எவ்வித அடிப்படை வசதிகளும் இல்லை. பழைய கிராமமான இந்தக் கிராமத்தினை எவரும் கண்டு கொள்வதாகவே தெரியவில்லை. இந்தக் கிராமம் எதிர்நோக்குகின்ற பிரச்சினை என்று சொல்லப்போனால் நிறையவே சொல்லலாம். ஏனெனில் எல்லாமே பிரச்சினையாகத்தான் உள்ளது.

வீதிப் பிரச்சினை படுமோசமாக உள்ளது. இதனால் இங்கு தரம் ஏழுவரை உள்ள பாடசாலைக்கு படிப்பிக்க வருகின்ற ஆசிரியர்களும் ஒரு சில நாட்களுக்கு வருகை தந்துவிட்டு பின்னர் மாற்றலாகி வேறு பாடசாலைகளுக்குப் போவதும், தரம் ஏழுக்கு பின்னர் இங்குள்ள பிள்ளைகள் நடந்து வெற்றிலைக்கேணி பள்ளிக்கூடத்திற்குப் போவதும் என போக்குவரத்துப் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

இதனால எங்கட போக்குவரத்து பிரச்சினையை தீர்த்துத் தருமாறு 12-09-2005 திகதியிடப்பட்ட கடிதம் ஒன்றை யாழ் மாவட்ட அரச அதிபருக்கு அனுப்பி வைத்திருக்கிறம். இதற்கு அவர் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கத் தவறின் மறியல் போராட்டங்களில் ஈடுபடத் தயாராக உள்ளோம் எனக் கூறினார்.

151 பேர் கையொப்பம் இடப்பட்டு அனுப்பப்பட்டுள்ள அக் கடிதத்தின் பிரதிகள் பன்னிரண்டு தரப்பினருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அக் கடிதத்தின் நான்காவது பந்தியில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது:-

இந்த வீதியை திறம்படச் செய்வதற்காக வடமராட்சி கிழக்கு பிரதேச சபையால் 4450000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தலைவரால் எங்களுக்குக் கூறப்பட்டும் அந்தப் பணம் ஒதுக்கப்பட்ட ஆவணத்தையும் எங்களுக்குக் காட்டியிருந்தார். ஆனால் இதுவரைக்கும் அதன் செயற்பாடுகள் நடைபெறவில்லை. நாங்கள் இந்தப் பிரயாண வசதி பிரச்சினையால் தாங்கள் எல்லோராலும் வெறுக்கப்பட்ட மக்களாகக் கருதுவதாகத்தான் எங்களுக்குத் தெரிகிறது என அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

உண்மையில் கேவில் கிராமத்திற்குச் சென்று பார்த்தால் தெரியும் போக்குவரத்துத் தொடர்பில் அம்மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், வைத்தியசாலை உட்பட அனைத்து அடிப்படைத் தேவைகளுக்கும் 22 கிலோ மீற்றர் மோசமான பாதையின் ஊடாக பயணம் செய்துதான் தேவைகளை நிறைவு செய்துகொள்ள வேண்டிய ஓர் அவலநிலை அம் மக்களுக்கு.

இதைவிட கல்வியறிவு பின்தங்கியே காணப்படுகிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட 32 குடும்பங்களைச் சேர்ந்த மக்களை கொண்ட இக்கிராமம் பல்வேறு வழிகளில் முன்னேற்றம் காணச் செய்யவேண்டும்.

கேவில் கிராமத்தில் சந்தை இல்லை, அனைத்துப் பொருட்களையும் பெற்றுக்கொள்ள கூடிய பலசரக்குக் கடை இல்லை என் பிரச்சினைகளை அடிக்கிக் கொண்டே போகலாம்.

75 வீதத்திற்கு மேற்பட்டோர் 'கள்' உற்பத்தித் தொழில் செய்கின்ற மக்கள் போதியளவான பனைவளம் மூலம் பெற்றுக்கொள்கின்ற பனங்கள்ளை தங்களுடைய தேவைகளுக்கு அப்பால் சில வேளைகளில் நிலத்தில் ஊற்றிவிடுவதாகக் கூறுகின்றனர். ஆனால் இதன் மூலம் பல்வேறு முடிவுப் பொருட்களை உற்பத்தி செய்யலாம். ஆதாவது சீனி, பனங்கட்டி உட்பட பல்வேறு பொருட்கள் பெற்றுக்கொள்ளலாம். அதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யவேண்டும்.

அதாவது வட மராட்சியில் பனம் பொருள் உற்பத்திச்சாலை ஒன்றை அமைத்தல் அல்லது அங்கிருந்து அம் மூலப்பொருட்களை அம்மக்களிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு ஏற்ற வழியினை உருவாக்குதல். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் அம் மக்களின் வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்தலாம்.

மேலும் ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தால் பதினாறு அடி நிலத்தடி நீர் உள்ள அப்பிரதேசத்தில் பத்தடியில் கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றும் இதனால் எவ்வித பயனும் தங்களுக்கு இல்லை எனவும் அம்மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். நாமும் சென்று பார்த்த போது உண்மையும் அதுவே. சில அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் இவ்வாறு காணப்படுகின்றன என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு கிராமத்தின் பிரச்சினை நேரில் கண்டும் கேட்டும் வந்த நாம் வீதியில் நீண்டு வளர்ந்த தலைமயிருடன் ஒரு சிறுவனை சந்தித்தோம். அவனிடம் அணுகி ஏன் தலைமயிர் வெட்டவில்லை என கேட்டபோது,

"அது அண்ண தலைமயிர் வெட்டுறது என்றால் 20 மையிலுக்கு அங்கால மருதங்கேணிக்கு இந்த றோட்டால போகவேணும். அதுதான் இன்னும் கொஞ்சம் வளர்ந்த பிறகு வெட்டுவம் என்றிருக்கிறன்''

என்ற அச் சிறுவனின் பதிலோடு கேவில் கிராமத்திலிருந்து நாம் விடைபெற்றோம்.

**சூழியன்**



# இது விதியல்ல...!

வாழ்க்கையின் குறிக்கோள் வெற்றியே! நாம் தேர்வுசெய்யும் பாதையில் சென்று வெற்றியைத் தொடரவே அனைவரும் உழைக்கின்றோம். வெற்றியின் அச்சாணியிலே உலகம் சுழல்கின்றது. இந்த நம்பிக்கையே நமக்கு ஊக்கம் அளிக்கும். தோல்வி அடைந்து துன்புறுவதற்காக நாம் பிறக்கவில்லை.

வெற்றியடைவதற்கு, குறிக் கோளில் நம்பிக்கை, மனத்துணிவு, முயற்சி அனைத்தும் வேண்டும். ஒரு தொழிலைத் தேர்ந்து எடுக்கின்றோம் எனில், அதற்குத் தேவையான திறமை, மதிநுட்பம், அதன் உட்பொருளை அறிந்துகொள்ளக்கூடிய திறமை, ஞாபக சக்தி, மனிதர்களின் மனப் போக்கு, உலகப் போக்கு எல்லாம் தெரிந்திருக்கவேண்டும். ஒவ்வொரு வரும் தனக்குள்ள பொறுப்புக்களை உணர்ந்து, கடமைகளைச் செவ்வனவே செய்வதில் ஆர்வம் காட்டுவதில் தான் உண்மையான இன்பம் இருக்கின்றது.

சிலருக்கு மனதில் குழப்பம் எப் போதும் உண்டு. இவர்கள் எந்தவொரு உறுதியான தீர்மானத்துக்கும் வரவே மாட்டார்கள். எந்த முடிவுக்கு வந்தாலும் அது சரியா, அல்லது பிழையா எனும் குழப்பம் இவர்களிற்குக் கோழைத்தனத்தைக் கொடுத்துவிடும். இப்படிக் குழப்பம் இருந்தால் எதுவும் செய்யமுடியாமல் திண்டாடுவார்கள். விதி, விதி எனக் கூறி விதியின் மீது பழிபோடச் சித்தமாக இருப்பார்கள்.

எப்படியானாலும் 'வாழ்வு' என்பது நாம் அதை அமைக்கின்ற அமைப்பைப் பொறுத்துத்தான். விதியின் கைப்பாவைகளாகவோ, எதற்கும் அதிர்ஷ்டம் இல்லை என்றோ நினைப்பதில் பயனில்லை. எதிர்பாராத சம்பவங்கள் நிகழும் போது ஒருவன் விதியைப்பற்றிக் கூறுவதோ தன் இயலாமை பற்றிக் கூறுவதோ அவனுடைய செயலிழந்த தன்மையையும் அறியாமையையுமே காட்டுவதாகும். என்னவோ நடக்கட்டும், எப்படியோ நடக்கட்டும், எல்லாம் விதிப்படி நடக்கட்டும் என்பது நல்ல கொள்கையல்ல. வாழ்க்கையில் முன்னேற்றத் தைக்காணவேண்டும் எனும் நல்லெண்ணமே உருவாகவேண்டும்.

எவ்விஷயத்திலும் திடீரென முழு வெற்றியும் அடையமுடியாது. முன்னேற்றம் என்பதைப் படிப்படியாகவே அடைய முடியும். இதற்கு முயற்சி முக்கிய பங்கு வகிக்கின்றது. எவ்வித முயற்சியும் இன்றி, எல்லாம் தானாகவே நடக்க வேண்டும். விதிப்படியே நடக்கட்டும் என்று சோம்பேறித் தனமாகவோ, அலட்சியமாகவோ இருக்க நாம் பிறக்கவில்லை.

நாம் எவ் விசயத்திலும் ஆர்வமும், அக்கறையும், வெற்றியடைய வேண்டும் எனும் தீர்மானத்துடனும் இருக்க வேண்டும். சந்தர்ப்பம் கிடைக்கும்போது அதை நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தானாகச் சந்தர்ப்பம் வராவிட்டாலும் நாமே சந்தர்ப்பத்தை உண்டாக்கிக்கொள்ள வேண்டும். விதி, விதி என எல்லாமே விதியின் மீது பழிபோடாமல் உங்கள் விதியை மன தால் வென்று உங்களை உயர்த்தவும், உங்களுக்கு உதவவும், உங்களுக்குள்ளேயேயுள்ள சக்தியைப் பயன்படுத்தி அதிர்ஷ்டசாலிகளாகத் திகழுங்கள்.

**த.யாழ்வேங்கை**



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 15**

**பகுதி -65**



# முதுபனிக்குள் ஒரு தேடல்

மொழியாக்கம் :- வி.பி.யோசப்

இப்போ டிப்ஸ் தன் முகத்தை கைகளில் புதைத்துக் கொண்டு அமைதியாக இருந்தான். நிமிடங்கள் ஓடிக்கொண்டிருந்தன. பிறகு ஆழமான ஒரு பெருமூச்சை விட்டவன் திரும்பவும் அப்பாப் பொம்மையைத் தூக்கிக்கொண்டான் “ அப்ப... அப்பாவும் நடைப்பயணம் போறார். என்ன செய்யிறது எண்டு தெரியாம இருக்கிறதாலதான் அவர் நடைப்பயணம் போறார். அவர் வீதியால நடந்து போறார். வீதியில கார்கள் பஸ்ஸுகள் எண்டு நிறையப் போய்க்கொண்டிருக்குதுகள். போக்குவரத்துச் சரியான நெரிசலா இருக்கு. சரியான சத்தமா இருக்கு. பெரிய சத்தங்கள் கேட்கிறத அப்பா விரும்புறயில்ல. ஆனா அவர் வீதியால நடந்து விளையாட்டுச் சாமான் விக்கிற கடைக்குப் போறார். அவர் தன்ர மகனுக்கெண்டு அற்புதமான விளையாட்டுச் சாமான் ஒண்டை வாங்கப் போறார். தன்ர மகன் நுணுக்குக்காட்டி ஒண்ட விரும்பக்கூடும் எண்டு அவர் நினைக்கிறார். அப்ப அவர் அத வாங்கிக்கொண்டு வீட்ட வாறார்.”

டிப்ஸ் எழுந்து அறைக்குள் அங்குமிங்கும் நடக்கத் தொடங்கினான். இடைக்கிடை என்னை நோக்கித் தன் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தான். பிறகு அவன் மீண்டும் பொம்மை வீட்டின் அருகே மண்டியிட்டு அமர்ந்து அப்பாப் பொம்மையைத் தூக்கிக் கொண்டான். “அவர் தன்ர மகனக் கூப்பிடுகிறார். திரும்பவும் கூப்பிடு கிறார். அப்ப மகன் ஓடிவாறான் ...” என்றபடி பையன் பொம்மையை அப்பா பொம்மைக்கு அருகில் கொண்டு வந்தான். “... ஆனா அந்த மகன் ஓடிவந்த வேகத்தில மேச தட்டுப்பட அதில இருந்த லாம்பு விழுந்து போச்சுது. நீ ஒரு முட்டாள் எண்டு அப்பா கத்துறார். முட் டாள்... மடையா... கவனமில்லாத... பொடியன்... எண்டு திட்டுறார். “ஏன் இப்பிடிச் செய்தனி?” எண்டு கத்துறார். ஆனா அந்த மகன் மறுமொழி ஒண்டும் சொல்லுறானில்ல. அப்பாவுக்குச் சரியான கோவம் வருகுது. அந்தப் பையன அவன்ர அறைக்குள்ள போகச் சொல்லுறார்.” டிப்ஸ் உணர்ச்சி வசப்பட்டிருந்தான். தான் நடித்துக் கொண்டிருந்த காட்சியின் பாத்திரமாகவே ஆகிவிட்டிருந்தான். அவன் என்னை நிமிர்ந்து பார்த்தான். தனது அனுபவத்தில் தன்னைப் போலவே நானும் மூழ்கிவிட்டிருப்பதாக அவன் நினைத்திருக்கக்கூடும். “அந்த பையன் மெதுவா வீட்டவிட்டு வெளிய வந்து ஒளித்துக் கொள்ளுறான்...” டிப்ஸின் குரல் கிசுகிசுப்பாக வெளிவந்தது.

“என்ன நடந்ததெண்டு அப்பா கவனிக்கயில்ல... பிறகு...” என்று விட்டு எழுந்த அவன் அறைக்கு குறுக்காக அம்மா பொம்மை இருக்குமிடத்துக்கு விரைந்து அவளைத் திரும்ப வீட்டுக்குக் கொண்டு வந்தான். பூங்காவுக்கு போன அம்மா அந்த பயணத்த முடிச்சுக் கொண்டு திரும்பி வாறா... அப்பவும் அப்பாட கோபம் குறையயில்ல. இந்த முட்டாள்பையன் என்ன செய்து போட்டான் எண்டு அம்மாவுக்குச் சொல்லுறார். அதைக் கேட்ட அம்மா ஐயோ என்ர கடவுளே இவனுக்கு என்ன நடந்தது எண்டு சொல்லுறா. அப்பதான் திடீரென்று “ஒரு ராட்சசப் பையன் வாறான். யாரும் அவனுக்கு ஏதும் செய்ய முடியாத அளவுக்கு அவன் பெரிசா இருந்தான்” என்ற டிப்ஸ் எழுந்து நின்றான். “வீட்டுக்குள்ள அம்மாவும் அப்பாவும் இருக்கிறத அந்த ராட்சச பையன் கண்டான். அவர்கள் கோவமாகச் சொன்ன விசயங்களையும் கேட்டான். அப்ப அவையளுக்கு ஒரு பாடம் படிப்பிக்கவேணுமெண்டு அவன் முடிவுசெய்தான். அவன் வீட்டுக்க எல்லா இடமும் போய், அவையள் வெளியில போக ஏலாத மாதிரி எல்லாக் கதவுகளையும் ஜன்னல்களையும் பூட்டிவிட்டான். அவையள் இரண்டு பேரும் வீட்டுக்க அடைப் பட்டிட்டினம்...”

அவன் மீண்டும் என்னை நிமிர்ந்து பார்த்தான். அவனது முகம் வெளிறிப்போய் சோகமயமாக இருந்தது. “என்ன நடக்குதெண்டு பார்த்தனீங்களா?” என்று என்னைக் கேட்டான்.

“ஓம் பார்த்தனான்.அப்பாவையும் அம்மாவையும் அந்த ராட்சசப் பையன் வீட்டுக்க அடைச்சுப்போட்டான்.”

“பிறகு அப்பாதான் தன்ர சுங்கான புகைக்கப்போறனெண்டு சொல்லுறார். அத வெளியில எடுத்து நெருப்புக் குச்சிகளையும் எடுத்து ஒரு குச்சத் தட்டுறார். அது கீழ விழுந்து போக அறைக்குள்ள நெருப்பு பத்தியிட்டுது. வீட்டில நெருப்புப் பிடிச்சிட்டுது... வீட்டில நெருப்புப் பிடிச்சிட்டுது. அவயளால வெளியில வர ஏலா. அவயள் வீட்டுக்க பூட்டுப்பட்டுப் போச்சினம். நெருப்பு மள மளவெண்டு எரியுது. பூட்டுப்பட்டு எரிஞ்சுகொண்டிருக்கிற வீட்டுக்க அவயள் இருக்கிற அந்தச் சின்னப் பொடியன் பார்க்கிறான். அவன் ‘அவயள் எரியட்டும்... அவயள் எரியட்டும்’ எண்டு சொல்லுறான்.

அப்பா அம்மா பொம்மைகள காப்பாற்ற முயல்வது போல் வேகமாக கைகளை நீட்டி நீட்டிப் பார்த்து விட்டு தான் கற்பனைசெய்த தீ உண்மையானது போலவும் அப்பாவையும் அம்மாவையும் காப்பாற்றப் போகும்போது தன்னை பொசுக்குவது போலவும், கைகளை பின்னால் இழுத்து எடுத்து முகத்தை பொத்திக் கொண்டான்.

“அவய கத்திக் குழறி கதவைப் போட்டுத் தட்டினம். அவயள் வெளியில வரப்பாக்கினம். ஆனா வீடு எரிஞ்சு கொண்டிருக்கு. அவயள் உள்ளுக்குப் பூட்டுப் பட்டுப் போச்சி னம். அவயளால வெளியில வரேலாது. அவயள் கத்திக்குழறி உதவிக்குக் கூப்பிடுகினம்”



டிப்ஸ் தன் கைகளைக் கோர்த்துப் பிடித்துக்கொண்டான். அவனது கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது. “நான் அழுகிறன்... நான் அழுகிறன்... இதால நான் அழுகிறன்” என்று என்னைப் பார்த்துச் சொன்னான்.

“அம்மாவும், அப்பாவும் வீட்டுக்குள்ள பூட்டுப்பட்டு எரியிற வீட்டுக்குள்ளால வெளியில வரஏலாம இருக்கிறதாலயா அழுகிறீங்கள்?” என்று நான் கேட்டேன்.

“ஐயோ! அதுக்காக இல்ல” சடாரென்று டிப்ஸ் சொன்னான். அவனுடைய குரலை விம்மல் ஒன்று உடைத்துவிட்டது. தட்டுத்தடுமாறி அறைக்குக் குறுக்கே என்னை நோக்கிவந்த அவன் என்னைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கேவிக் கேவி அழுதான். “என்ன உள்ளுக்கு விட்டு கதவுகள பூட்டி பூட்டுப்போடுறது தாற துன்பத்த நான் மறுபடியும் உணருறதாலதான் நான் அழுகிறன்...” என்று விம்மினான். நான் ஆதரவாக அவனை அணைத்துக்கொண்டேன்.

“நீங்கள் மிகவும் தனிமையா இருந்தபோது உணர்ந்த மர்திரி இப்பயும் உணருறீங்களா?”

டிப்ஸ் திரும்பி பொம்மை வீட்டைப் பார்த்தான். அவன் தனது கண்ணீரை புறங்கையால் தேய்த்துவிட்டு, கனமாக மூச்சுவிட்டபடி நின்றான். “அந்தப் பையன் அவங்களக் காப்பாற்றுவான்” என்றான். பையன் பொம்மைக்கு அருகில் சென்ற அவன், அதை வீட்டுக்கருகில் கொண்டுசென்றான். “நான் உங்களக் காப்பாற்றுவன்... நான் உங்களக் காப்பாற்றுவன்” என்று உரத்துச் சொன்னான். “கதவுகளைத் திறந்து உங்கள வெளியில விடுவன்... அப்ப... அந்தச் சின்னப்பையன் கதவுகளத் திறந்து நெருப்ப நூர்க்க, அப்பாவும், அம்மாவும் பத்திரமா வந்திட்டினம்”

அவன் எனக்கருகில் திரும்ப வந்து என் கைகளைத் தொட்டான்.மெலிதாகப் புன்னகைத்துக்கொண்டு “நான் அவயளக் காப்பாற்றியிட்டன்” என்றான். அவையள் எல்லாம் எரிஞ்சு துன்பப்பட நான் விடயில்ல” தொடர்ந்து சொன்னார். “நீங்கள் அவயளுக்கு உதவினனீங்கள். நீங்கள் அவயளக் காப்பாற்றியிட்டீங்கள்.”

மேசைமீது அமர்ந்துகொண்ட டிப்ஸ், நேராக வெறித்துப்பார்த்தபடியிருந்தான். “அவயள் என்ன முந்தி அறையுக்க போட்டுப் பூட்டினவை...” என்றான். சிறிது தரித்துவிட்டு, “இப்ப அப்பிடிப் பூட்டுறயில்ல... ஆனா முந்திப் பூட்டினவை” என்றான்.

“முந்தி அப்பிடிச் செய்தவை. ஆனா இப்ப அப்பிடிச் செய்யிறயில்லை... அப்பிடித் தானே?” என்று கேட்டேன்.

“ஓம். இப்ப அப்பிடிச் செய்யிற யில்ல...” என்ற டிப்ஸிடமிருந்து நடுங்குகின்ற பெருமூச்சொன்று வெளிவந்தது. “அப்பா உண்மையாவே ஒரு நுணுக்குக்காட்டி தந்தவர். அதவச்சு நல்ல சந்தோசமா விளையாடினனான்” என்றவன் மேசையிலிருந்து எழுந்து சகோதரிப் பொம்மையை வைத்த இடத்துக்குச் சென்றான். அவளை பொம்மை வீட்டுக்குக் கொண்டுவந்து நான்கு பொம்மைகளையும் வீட்டு வரவேற்பறைக்குள்ளிருந்த இருக்கைகளில் வைத்தான். பிறகு அவன் மேசைக்குப் போய் கறுப்புநிற கிரேயோனை எடுத்து கடதாசி ஒன்றின் மையத்தில் சிறிய வட்டம் ஒன்று மட்டும் எஞ்சியிருக்க மிகுதி கடதாசி முழுவதும் தடித்த கறுப்பு நிறத்தை பூசிவிட்டான். அந்தச் சிறிய வட்டத்துக்கு மஞ்சள் வர் ணம் பூசிவிட்டான். இந்த வரைதல் பற்றி அவன் கருத்து எதுவும் சொல்லவில்லை. வரைதலை முடித்ததும் கிரேயோன்களை மீண்டும் பெட்டியில் வைத்து விட்டான். பிறகு மணல் பெட்டிக்குப்போய் சவளை எடுத்து வந்தவுடன் தோண்டிய குழியை மெதுமெதுவாக நிறைத்துவிட்டான்.

இது ஒரு கடினமான மணித்தியாலமாக டிப்ஸிற்கு இருந்தது. அவனது உணர்வுகள் ஈவு இரக்கமில்லாமல் அவனைக் கீறிக்கிழித்திருந்தன. டிப்ஸினுடைய இளம் வாழ்க்கையிலே பூட்டிய கதவுகள் முனைப்பான துன்பங்களைத் தந்திருந்தன. அவனுடைய வீட்டில் இருக்கும் பூட்டிய கதவுகள் மட்டுமல்ல. அவனுக்கு இன்றியமையாமல் தேவையாக இருந்த அன்பு, கௌரவம், புரிந்துகொள்ளுதல் எல்லாவற்றையும் அவனுக்கு மறுக்கும் விதத்திலே, அவனுடைய முகத்தில் அறைவதுபோல் பூட்டப்பட்ட ஏற்றுக்கொள்ளுதல் என்ற கதவுகள் அனைத்தும்தான்.

சூப்பிப்போத்தலை எடுத்த அவன் குறுகிய காலத்துக்கு அதிலிருந்த நீரைக் குடித்தான். பின்பு அதைக் கீழே வைத்துவிட்டு வைத்த கண் வாங்காமல் என்னைப் பார்த்தான். “இப்ப நான் குழந்தையில்ல... இப்ப நான் பெரிய பையன். சூப்பிப் போத்தல் எனக்கு இனித தேவையில்ல” என்றான்.

“சூப்பிப்போத்தல் இனித் தேவையில்லையா?” நான் கேட்டேன்.

டிப்ஸ் இளித்தான் “சில நேரங்களில நான் மறுபடியும் குழந்தையா ஆக வேணுமெண்டு நினைச்சா ஒழிய, இனித் தேவையில்ல...” என்றவன். மீண்டும், “நான் எப்பிடி உணரவிரும்புறனோ... நான் எப்பிடி உணருறனோ... அப்பிடி நான் இருப்பன்”

கைகளை அகல விரித்து சிறகடிப்பது போல் அடித்தான். “கொக்கரக்கோ... கொக்... கர...க்கோ” என்று கூவினான்.

இயல்பாக வந்துவிட்ட அவன் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தான். அவன் விளையாட்டறையை விட்டு அன்று புறப்பட்டபோது, அங்கு வைத்து அவன் கிளறியெறிந்த துன்பமான உணர்வுகளையெல்லாம் அங்கேயே விட்டுப் போவது போலிருந்தது.

(தொடரும்)

---

*(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

நெஞ்சிலாடிடும் கனவு மாளுமா?
நினைவிழந்து எம் பிஞ்சு விழுமா?
நஞ்சு தின்றிட அஞ்சிடாதவர்
நல்லை வீதியில் பாடையேறவா?

வஞ்சி கெட்டவா வந்து பாரடா
வாடமுன்னொரு சேதி கூறடா.

நெருப்புத்தனல்களாய் சிவந்தன விகள். கவிதையின் கரு மீண்டுமொருமுறை மெதுவாய் பேசியது.

“விளக்கு எரியமுன்பு பிரகாசமாய் எரியுமாம் அது போல இன்று நானும் உற்சாகத்துடன் இருக்கிறேன் என்பது தெரிகிறது. இன்று தாராளமாக பேச முடிகிறது. போராடத் தயாராகுங்கள் எனக்கு விடை தாருங்கள்.”

திலீபன் கொண்ட கொள்கையில் வெற்றிபெறப் போகின்றான். தன்னையிழந்தே தமிழர்க்கு உணர்வூட்டிக்கொண்டிருந்தான். பாரத வல்லரசின் அகிம்சையை வென்று கொண்டிருந்தான். தன்னைக் கொன்று கொண்டே தாயகத்தை வாழவைக்க துடித்துக் கொண்டிருந்தான். விடுதலை வரலாற்றிலே வரலாறு அதுவரை கண்டிராத மக்கள் எழுச்சியை நடாத்திக்கொண்டிருந்தான்.

கண்கள் மூடிக்கிடக்க, படுத்த படுக்கையில் கிடந்து, பசி தின்று தின்று உயிரைச் சொட்டுச் சொட்டாய் பருகி முடிக்கையிலும் இத்தனை பெரிய சாதனை படைக்க ஒற்றை மனிதனால் முடிந்தது எப்படி?

திலீபன் பிறந்தான். நாடி நரம்புகள் துடிப்பிழந்து, தன்னுணர்விழந்து உடலால் மரணித்த உத்தமன் பிறந்தான். மக்கள் புரட்சியின் மகிமை தந்தான். அவனது புதிய பிறப்பு ஓராயிரம் விடுதலைக் கனல்களைப் பிறப்பித்தது.

“உண்மையான உறுதியான இலட்சியம் எமது இலட்சியம். அந்த இலட்சியத்தை எமது தலைவருடன் சேர்ந்து நீங்கள் அடையுங்கள். எனது இறுதி விருப்பமும் இது தான்.”

என்கின்ற திலீபனின் உணர்வை ஏந்தி மக்கள் புரட்சியால் தாயகம் பெறுவோம்.

# பாவலன் பதில்கள்



**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

பாவலரே!

சமாதானத்தின் எதிர் காலம் எப்படி அமையப்போகின்றது என்று கூறமுடியுமா?

நவப்பிரியா,
கிளிநொச்சி.

சமாதானத்தின் நிகழ் காலமே பேச்சு மூச்சற்று இருக்கும் போது எதிர் காலத்தைப்பற்றி என்னத்தைக் கூறுவதாம்?

பாவலா!

கதிர்காமர் இறந்தது யாருக்கு கவலை?

ஸே.சலூசா,
புளியங்குளம்.

பேரினவாத அரசியல் தலைமைகளுக்குக் கவலை.

பாவலனே!

சண்டை தொடங்கினால் இராணுவம் என்ன செய்யும்?

மு.றஜீற்,
புளியங்குளம்.

தீச்சுவாலை நடவடிக்கையின் போது எதைச் செய்ததோ அதைச் செய்யும்.

பாவலரே!

இராணுவத்தினர் ஏன் தமிழர் இடத்தில் புத்தர் சிலையை வைக்கிறார்கள்?

றஜீற்,
புளியங்குளம்.

யுத்தம் சரணம் கச்சாமி என்று பாடுவதற்காக.

பாவலனே!

தேர்தலில் நீர் யாருக்கு வாக்களிப்பீர்?

கடலவன்,
புளியங்குளம்.

வாக்குறுதி அளிக்காத அரசியல்வாதிக்கு.

பாவலனே!

வரும் தேர்தலில் யார் சனாதிபதியாவார்கள்?

மு.கடலவன்,
புளியங்குளம்.

தமிழருக்கு உரிமை எதையும் வழங்கும் மனோபாவமற்ற சிங்களவர் ஒருவரே.

பாவலா!

இழந்தவைகளை மறக்க முடியுமா?

ஆ.சுதர்சிகா,
தருமபுரம்.

துணிவும் நம்பிக்கையும் இருந்தால் இழந்தவைகளை மீட்கவும் முடியும்.

பாவலா!

தனிமையை விரும்புவர்கள் பற்றி என்ன நினைக்கின்றீர்?

யாழினி,
கிளிநொச்சி.

இனிது இனிது ஏகாந்தம் இனிது என்ற ஔவையின் பாடலின் அர்த்தத்தை உணர்ந்தவர்கள்.

பாவலா!

உலகிலே எல்லை இல்லாதது எது?

ஆ.ஆனந்தி,
புளியங்குளம்.

சுயநலமியின் ஆசை.

பாவலா!

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்று ஏன் முன்னோர் கூறினர்?

பிரியங்கா,
யாழ்ப்பாணம்.

அது மாடு குறித்து சொல்லப்பட்ட வசனமன்று, சூடு சொரணையற்ற மனிதன் குறித்து சொல்லப்பட்ட கருத்து.

பாவலா!

உலகம் எதை விரும்புகிறது.

தயா,
புதுக்குடியிருப்பு.

அந்தஸ்தையும் அதிகாரத்தையும்.....:
அமைதியையும் சமாதானத்தையும் அல்ல.

பாவலா!

இன்றைய நவீன கண்டுபிடிப்புகள் எல்லாம் எதை நோக்கிப் போகின்றன?

தர்மினி,
கனகபுரம்.

மனித ஆற்றல் குறித்த நம்பிக்கையையும் மனித வாழ்வு குறித்த அச்சத்தையும் நோக்கி.

பாவலா!

நிம்மதி என்பது எங்கே கிடைக்கும்?

சுதா,
கிளிநொச்சி.

ஆலயத்தில் என்கிறார்கள் ஆன்மீகவாதிகள்.

அதிகாரத்தில் என்கிறார்கள் அரசியல் வாதிகள்.

மதுக்கடையில் என்கிறார்கள் இரு தரப்பினர் மீதும் நம்பிக்கையிழந்தவர்கள்.



# தெருப்பேச்சு

*"என்னவாம் உங்கால பஸ் ஓட்டமில்லயாம் என்னண்டு சனம் போறவாற-"*

*"பஸ் ஓடினாப்போல சனம் பஸ்ஸிலயே போகுது"*

*"அதுகுஞ் சரிதான் சைக்கிள்ள மெல்ல மெல்லப் போனா, பத்துரூபா மிச்சம். அங்கின தேத்தண்ணிச் சிலவைக் கட்டும்.*

*உது போகட்டும் என்ன மேளுக்குச் சம்பந்தஞ் சரிவந்திட்டுதே.*

*பேசி வந்தவைதான் இன்னும் முற்றாக்கயில்லை.*

*ஏன் சாதகமேதும் பொருந்தயில்லயே.*

*சாதகம், பொருத்திக் கட்டி எழுதுவிச்சுப் போட்டம். தோசமில்லாம.*

*ஏன் ஏதும் தோசமே*

*ச்சா... செவ்வாய்க் குற்றம் இருக்காம் தோசமில்ல.... அது குணசிங்கத்தாரட்டக் குடுத்து சேப்பண்ணிவிச்சுப் போட்டம்.*

*அப்ப சீதனபாதனம் பிழைக்குதோ?*

*அதுகுமில்லை. அவை பெரிசா ஒண்டுங் கேக்கேல்ல. நீங்கள் போடுறதப் போடுங்கோ குடுக்கிறதக் குடுங்கோ எண்டு சொல்லிப் போட்டினம்.*

*ம்...ஈயாக் கூட்டி எறும்பாக் கூட்டி சேர்த்து இழுத்து விடுறதுதானே. பஸ்ஸுக்கு ஒருபத்து ரூபா குடுக்க பஞ்சிப்பட்டு மாக்குமாக் கெண்டு சைக்கிளோடி மாப்பிளைக்கு சேர்க்கிறாய் எப்ப கலியாணம்.*

*கலியாணம் செய்ய எல்லாரும் தயாராகத் தான் இருக்கிறம். அவள் அவன்ர பெண் சாதி விடுறாளில்லயே. படிகட்டிற்றுப் போண்டு நிக்கிறாள்.*

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –138



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –137

..............................................................
..............................................................
..............................................................
..............................................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –137



சிவமதி,
இல: 45/2,
விசுவமடு.

## பரிசுக்குரிய வரிகள்

*ஈழத்தின் கல்லறையும் பூக்குதென்று உனக்கு ஆனந்தச் சிரிப்பு*
*தமிழினமே அழிந்ததென்று அவர்கட்டு ஆணவச் சிரிப்பு*
*உலக சமூகம் வழங்கும் ஒரு நல்ல தீர்ப்பு- அப்போது*
*ஆணவங்கள் அடங்கும் இது நீதியின் தீர்ப்பு.*

## பாராட்டுக்குரிய வரிகள்

*வாடாதே மலரே வாடாதே! என் இனிய வாழ்வுக்காய்*
*தம்முயிர் மாய்த்த தமிழ் இன மாவீரரை மலர் கொண்டு*
*நான் துதித்திட, வீரத்தமிழ் தாய் மகள் நான் தருவேன்*
*தண்ணீரினை! மலர்ந்திடுவாய் மலரே அழகாய் மலந்திடுவாய்.*

ஜெ.தர்சன்,
கிளிநொச்சி.

*வாடிய பூஞ்செடியின் வாட்டம் தீர்க்க*
*தண்ணீர் ஊற்றும் தங்கை இவளின்*
*வதனத்தில் ஆயிரம் மலர்களின் செழிப்பு*
*அது கண்டே இந்த மலர்களெல்லாம் பூரிப்பு.*

சு.சி.தமிழினி,
கைவேலி.

*உன் வீட்டுச் செடியின் பசுமை கண்டு நீ....*
*மகிழ்ச்சியால் மனம் புதைத்துக் கொள்கிறாய்- ஆனால்*
*உன் இளமை நெஞ்சத்தின் வாடல் அறிந்து*
*வருந்துவதற்கு இங்கு யார் உளர்?*

க.நகுலேஸ்வரன்,
முள்ளியவளை.

*தூறல் பாசனம்*
*வேருக்கு நல்லது;*
*போருக்குப் போவது*
*ஊருக்கு நல்லது.*

S.சிவா,
பருத்தித்துறை.

இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்

அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு

# தமிழீழ கடற்படையின் துணைப்படைப்பயிற்சி நிறைவில்...









லெப்.கேணல் மறவன் மாஸ்ரர் பயிற்சிப்பாசறையில் தமிழீழ கடற்படையின் துணைப்படையின் நான்காவது அணி 21-09-2005 அன்று தனது பயிற்சியை நிறைவு செய்து வெளியேறியுள்ளது. தமிழீழ கடற்படையின் துணைப்படையினரின் இறுதிநாள் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்களைக் மேலே காணலாம். ஏற்கனவே மூன்று அணிகள் பயிற்சி நிறைவு செய்து வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்-வீ.பிரதீபன்)


**ஈழநாதத்தின்** விளம்பரப் பணிமனைகள்

யாழ்சாலை, கிளிநொச்சி.
தொ.பே:021228 3948

பரந்தன் சாலை,
புதுக்குடியிருப்பு.

வைமன் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:-021-222 7917



உங்கள் இன்றைய தெரிவுக்கு...

குமரகுரு

புடைவை
அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி

KUMARAKURU
Textile & Fancy House
Yarl Road, Kilinochchi.






இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.